KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons) (வழக்கறிஞர்)

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX
Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 32, 11 ஏப்ரல் 2025 இதழ்:- 15

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
office@nishanthanlaw.onmicrosoft.com
Fax 1-800-878-1348
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial Industrial Investment
baskaran.toronto@hotmail.com


GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Life & Health Insurance Advisor
Dir: 416 528 1407
gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! ஏப்ரல் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் 423 குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்தநாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 14வது வருடத்தில் தொடரும் சேவை. ஈழநாடு பத்திரிகையின் அறப்பணியில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள். விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

## இலங்கை மீதான வரியை நிறுத்தி வைத்தார் ட்ரம்ப்



இலங்கை உட்பட பல நாடுகள் மீது அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் அறிவித்த வரிகள் உடனடியாக அமலுக்கு வரும் வகையில் 90 நாட்களுக்கு நிறுத்தி வைக்கப் பட்டுள்ளதாக வெளிநாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன. இருப்பினும் சீனாவிற்கு எதிரான வரிகள் 125வீத ஆக (3ம் பக்கம் பார்க்க)

ஈழநாடு பத்திரிகையை வாரம் தோறும்
eelanadu.ca
மின்னிதழ் மூலம் வாசிக்கலாம்

## பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும்! நிபந்தனைகளைப் பின்பற்றா விட்டால் ஜி.எஸ்பி சலுகையை இழக்க நேரிடும் -ஐரோப்பிய ஒன்றியம்

## பிள்ளையானைத் துரத்தும் கொலைப் பழி!



பிள்ளையான் என அழைக்கப்படுபவரும் முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் 07 ஏப்ரல் 2025 திங்களன்று குற்ற விசாரணைப் பிரிவினால் மட்டக்களப்பில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். பிள்ளையானின் கட்சியான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அலுவலகத்திற்கு சிவில் உடைகளில், அடையாளப்படுத்தப்படாத வாகனத்தில் வந்த சிலர் அவரைக் கைது செய்திருக்கிறார்கள். கைதுக்கான காரணம் உடனயாகக் கூறப்படவில்லையாயினும் 2019 உயிர்த்த ஞாயிறு (29ம் பக்கம் பார்க்க)

ஈழநாடு

எதிர்பாருங்கள்! பத்திரிகையின் 32வது ஆண்டு விழா
01 யூன் 2025 ஞாயிற்றுக்கிழமை விபரங்கள் உள்ளே!



## இது விதியின் திருப்பம் அல்ல! அரசியல் விதியின் யதார்த்தம்!

இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி நான்காவது தடவையாக இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார். இதன் போது பல புதிய உடன்பாடுகள் கைச்சாத்திடப்பட்டன. பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாடும் இதில் ஒன்று. நீண்டகாலமாக இழுபறி நிலையில் இருந்த திருகோணமலை, சம்பூர் சூரிய மின்கலத் திட்டத்தை இரு நாட்டுத் தலைவர்களும் அங்குராப்பணம் செய்து வைத்திருக்கின்றனர். (17ம் பக்கம் பார்க்க)


THINKING OF
SELLING OR BUYING A HOME?
www.AgentSiva.com
Your neighborhood sales representative
PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!
RE/MAX REALTRON Realty Inc. Brokerage
Home of the Top Producers
Siva Kandiah
Sales Representative
Dir: 416-301-9540
sivakandiahhome@gmail.com
Piravien Siva
Sales Representative B.Comm.
Dir: 647-221-5220
piravien@gmail.com
22 Years Real Estate Experience
885 Progress Ave #209, Scarborough, ON. M1H 3G3
Independently owned and operated
Bus: 416-289-3333
• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY
Warden/Finch
Scarborough $424,900
2 Beds • 1 Baths • 6 Rooms
Walking distance to school
Kennedy / Hwy 401
Scarborough $429,900
1 Beds • 1 Baths • 5 Rooms
Newly Renovated Unit
Markham / Sheppard Ave
Scarborough $479,000
1 Beds • 1 Baths • 3 Rooms
Corner Condo Townhouse
McCowan / Ellesmere
Scarborough $599,000
2 Beds • 2 Baths • 5 Rooms
Just A Short Walk To STC
Mccowan & Hwy 401
Scarborough $549,900
2 Beds • 2 Baths • 5 Rooms
Corner suite, unobstructed views
Kennedy / 401
Scarborough $538,000
2 Beds • 1 Baths • 5 Rooms
Open Concept Living-Dining
Simcoe St / 401
Oshawa $575,900
3+1 Beds • 2 Baths • 5+1 Rooms
Newly Painted, 1100+ Sqft
Grandview Dr. / Bloor
Oshawa $649,800
2+2 Beds • 2 Baths • 7+4 Rooms
Upgraded floor, Newly renovated
9TH LINE / HIGHWAY 7
Markham $1,100,000
4 Beds • 4 Baths • 9 Rooms
luxury freehold townhouse
Dixie/ Glenanna
Pickering $799,000
3 Beds • 2 Baths • 6 Rooms
Great area close to all amenities
Audley Rd & Rossland Rd E
Ajax $799,000
3 Beds • 3 Baths • 8+3 Rooms
No maintenance fees Townhouse
Markham & Ellesmere
Scarborough $1,050,000
3+1 Beds • 2 Baths • 6 Rooms
Fin.basement with sep.entrance
Morningside/Mcnicol
Scarborough $1,099,900
3 Beds • 3 Baths • 7+2 Rooms
Hardwood flooring throughout
401/Morningside
Scarborough $1,249,000
4+2 Beds • 4 Baths • 12 Rooms
Easy access to the new 407
10th Line/ Hoover Park Dr
Stouffville $1,499,999
4+1 Beds • 4 Baths • 10 Rooms
3,162 Sqft ,Upgrades Designed
9th Line/Hoover Park
Stouffville $999,000
4 Beds • 3 Baths • 8 Rooms
Modern Living Elegant Upgrades

EELANADU
203 Gardiner Dr
Bradford - ON
L3Z 0J5 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

**வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!**

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.


வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை **eelanadu.ca** மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

# இலங்கை மீதான வரியை நிறுத்தி வைத்தார் டிரம்ப்!

இலங்கை உட்பட பல நாடுகள் மீது அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் அறிவித்த வரிகள் உடனடியாக அமலுக்கு வரும் வகையில் 90 நாட்களுக்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு செய்திகள் தெரிவிக் கின்றன.

இருப்பினும் சீனாவிற்கு எதிரான வரிகள் 125வீத ஆக அதிகரிக்கப்பட்டுள்ளன. சீன இறக்குமதிகள் மீது அமெரிக்கா 09 Apr 2025 முதல் 104வீத வரி விதித்து ள்ளது.

இதற்கு பதிலளிக்கும் விதமாக சீன நிதி அமைச்சகம் 09 ஏப்ரல் 2025 பிற்பகல் அமெரிக்க இறக்குமதிகளுக்கு 84வீத வரி விதிக்கப் போவதாக அறிவித்தது. அதன்படி சீனாவின் முடிவுக்கு பதிலளிக்கும் விதமாக, அமெரிக்கா மீண்டும் ஒருமுறை வரி விகிதத்தை அதிகரித்துள்ளது.



அமெரிக்க ஜனாதிபதியாக மீண்டும் பதவியேற்ற டொனால்டு ட்ரம்ப் அமெரிக்க பொருட்களின் மீது அதிக இறக்குமதி வரி விதிக்கும் நாடுகளின் பொருட்களுக்கு அமெரிக்கா விலும் அதே அளவுக்கு பரஸ்பர வரி விதிக்கப்படும் என்று அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் புதிய வரிகளை 90 நாட்களிற்கு ஒத்திவைப்பதாக அறிவிப்ப தற்கு முன்னர் தனது ஆதரவாளர்களை பங்குகளை கொள் வனவு செய்யுமாறு தூண்டியதன் மூலம் சந்தையை தனக்கு ஆதரவானவர்களிற்கு சாதகமான விதத்தில் பயன்படுத்தி னாரா என்பது குறித்து விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என அமெரிக்காவின் பல செனெட்டர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

டிரம்ப் தனது வரிக்கொள்கையில் மாற்றங்களை அறிவிக்கப் போகின்றார் என்பது அவரது நிர்வாகத்தை சேர்ந்த யாருக்கு முன்கூட்டியே தெரியும் என கேள்வி எழுப்பியுள்ள கலிபோர்னியாவின் ஜனநாயக கட்சியின் செனெட்டர் அடம் ஷிப் யாராவது பங்குகளை கொள்வனவு செய்து விற்று இலாபம் சம்பாதித்தார்களா என கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து நான் வெள்ளை மாளிகைக்கு எழுதப் போகின்றேன் மக்களிற்கு உண்மையை அறிவதற்கான உரிமையுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

# இலஞ்ச ஊழல் ஆணைக்குழு ரணிலையும் அழைத்தது!



இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் எதிர்வரும் 17 ஆம் திகதி ஆஜராகுமாறு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அழைப்பு விடுத்துள்ளது.

2016 ஆம் ஆண்டில் ஊவா மாகாண முதலமைச்சராக சாமர சம்பத் தசநாயக்க கடமையாற்றிய போது பாடசாலை மாணவர்களுக்கு புத்தகப்பை வழங்குவதற் காக மாகாண சபை ஊடாக வங்கியிலிருந்து 10 இலட் சம் ரூபாவை காசோலையாக பெற்று அதனை பணமாக மாற்றி தனிப்பட்ட தேவைக்காக பயன்படுத்தி ஊழலில் ஈடுபட்டமை தொடர்பில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகளால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த ஊழல் குற்றச்சாட்டு தொடர்பில் ரணில் விக்கிரம சிங்க பல விடயங்களை அறிந்துள்ளதாக விசாரணை களில் தெரிய வந்துள்ளதாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 10 ஏப்ரல் 2025 வியாழக்கிழமை சாமர சம்பத் தசநாயக்க தொடர்பாக அறிக்கையொன்றையும் வெளியிட்டிருந்தார். எனவே இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள வதற்காக எதிர்வரும் 17 ஆம் திகதி காலை 9.30 மணி க்கு இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டு ள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் எதிர்வரும் 17 ஆம் திகதி ஆஜராகுவதற்கு நான் தயாராக உள்ளேன் என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.


# அமெரிக்கா என்ற பெயரிலிருந்த வீதியின் பெயர் மாற்றம்

கனடாவில் அமெரிக்கா அவன்யூ என்ற பெயரிலிருந்த வீதியின் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் மேற்கொண்ட வரி நடவடிக்கைகள், கனடாவுக்கு எதிரான போக்கை எடுத்து ள்ளதோடு, அது முழு நாட்டிலும் தேசியவாத கொள்கை களை வலுப்பெறச் செய்துள்ளது.

இந்த சூழ்நிலையில், வான் நகரம் ஒரு முக்கிய நடவடி க்கையை எடுத்துள்ளதாகவும் அந்த நகரின் 'அமெ ரிக்கா அவன்யூ 'என்ற வீதியின் பெயர் மாற்றம் செய்யப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வான் நகர மேயர் ஸ்டீவன் டெல் டூகா, பெப்ரவரி 25ஆம் திகதி நடைபெற்ற நகர மன்ற கூட்டத்தில், இந்த வீதியின் பெயரை "Terry Fox Avenue" என மாற்றும் தீர்மான த்தை முன் வைத்துள்ளார்.

நம்மை பிரதிபலிக்கும் ஒரு கனடிய வீரரின் பெயரை இந்த வீதிக்கு வழங்க வேண்டும் என கருதினோம்,'' என்று மேயர் டெல் டூகா கூறியுள்ளார்.




அமெரிக்கா அவன்யூ என்பது Jane Street மற்றும் John Deisman Boulevard இடையில் அமைந்துள்ள ஒரு முக்கிய வீதியாகும்.

டெரி ஃபாக்ஸ், ஓர் அறியப்படும் கனடிய பிரபலமாவார், இவர் புற்றுநோய் ஆராய்ச்சிக்காக தனது வாழ்க்கையை அர்ப்பணித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. டெரி ஃபாக்ஸ், கனடாவின் பெருமைமிக்க தேசிய பிரபலங்களில் ஒருவர். அவரது தைரியம் மற்றும் தன்னலமற்ற உழை ப்பு கோடிக்கணக்கான கனடாவாசிகளுக்கு நன்மையை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**

குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்

**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**



# 16 வருடங்களுக்கு முன்னர் நடந்த சம்பவங்களுக்கு நாம் பொறுப்புக் கூற முடியாது - பிரதமர் ஹரிணி கைவிரிப்பு

நாடாளுமன்றத்தில் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினை காணாமல் ஆக்கப்பட்டோரது விவகாரம், அரசியல் கைதிகளின் விடுதலை, புதிய அரசியலமைப்பு உள்ளிட்ட பல விடயங்களை முன்வைத்து, இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் கேள்விகளை முன்வைத்திருந்தார்.

குறிப்பாக யுத்தம் முடிவடைந்து 16 வருடங்கள் கடந்து விட்ட போதும் இம் மோதலுக்கான மூலக்காரணம் இன்னமும் தீர்க்கப்படவில்லை எனவும், இன்னமும் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் சவாலான நிலையிலேயே காணப்படுகிறது எனவும் சாணக்கியன் தெரிவித்திருந்தார்.



அத்துடன் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக இந்த அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன? எனவும், அரசியல் கைதிகளை எப்போது விடுதலை செய்ய இந்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது எனவும், நாட்டில் பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படுமா? எனவும் இரா. சாணக்கியன் கேள்வி எழுப்பியிருந்தார்.

இந்நிலையில் இரா. சாணக்கியனின் கேள்விகளுக்குப் பதில் அளித்த பிரதமர் ஹரிணி அமரசூரிய யுத்தம் முடிவடைந்து 16 வருடங்கள் கடந்து விட்டன எனவும், இக் காலத்தில் பலர் ஆட்சிக்கு வந்தனர் எனவும், ஆனால், எமக்கோ 16 வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்க வேண்டிய நிலைமையே ஏற்பட்டுள்ள எனவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இது மிகவும் சிக்கலானதொரு விடயமாகும் எனத் தெரிவித்த பிரதமர் குறித்த விடயம் தொடர்பாக தம்மால் முடிந்த அனைத்து முயற்சிகளையும் முன்னெடுத்து வருவதாகவும் குறிப்பாக ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக விசாரணைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஊடகவியலாளர்கள் கடத்தப்பட்டு, காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் மற்றும் கொலை செய்யப்பட்ட சம்பவங்கள் தொடர்பாகவும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

மேலும் நாட்டில் இடம் பெற்ற அனைத்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பாகவும் தாம் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் இதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதுதான் தமது உறுதியான நிலைப்பாடு எனவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

# வடக்கு கிழக்கு மாகாணங்கள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்படும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள் ஆளுநரிடம் தெரிவிப்பு!



வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்துமாறு ஜனாதிபதி கேட்டுக் கொண்டதற்கு அமைவாக தொடர்ச்சியாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் சந்திப்பின் போது ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள் குழு தெரிவித்தது.

வடக்கு மாகாணத்துக்கு பயணம் மேற்கொண்டுள்ள ஆசிய அபிவிருத்தி வங்கியின் குழுவினருக்கும், வடக்கு மாகாண ஆளுநருக்கும் இடையிலான சந்திப்பு, ஆளுநர் செயலகத்தில் 08 ஏப்ரல் 2025 செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது. இந்தச் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த ஆளுநர்,

மாவட்டச் செயலராக வடக்கின் 4 மாவ ட்டங்களிலும் பணியாற்றிய காலத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பல திட்டங்களுடன் இணைந்து பணியாற்றினேன். வடக்கு மாகாண மக்களுக்கான உதவிகளுக்கு நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வடக்கு மாகாணத்தின் குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும். ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியில் கடல்நீரை நன்னீராக்கும் திட்டம் முன்னெடுக்கப்படும்.

வடக்கு மாகாணத்தின் எதிர்காலத் தேவைகளையும் கருத்தில் கொள்ளும் போது குறிப்பாக முதலீட்டு வலயங்களை வடக்கில் ஆரம்பிக்க உள்ள நிலையில் அவற்றுக்கும் குடிநீர் தேவை என்பதால், அதையும் கருத்திலெடுக்க வேண்டும்.அத்துடன் தீவகப் பிரதேசங்கள் சுற்றுலா ரீதியாக அபிவிருத்தி செய்யும்போது அங்கும் குடிநீருக்கான கேள்வி அதிகரித்துச் செல்லும். அதனை நிவர்த்திக்கும் வகையில் கடல்நீரை நன்னீராக்கும் செயற்பாடுகளை அங்கு அதிகரிக்க வேண்டும் என தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான பயண நேரம் அதிகம் என்பதைச் சுட்டிக் காட்டிய ஆளுநர், இதனால் சுற்றுலாத்துறைக்கு பின்னடைவு இருக்கின்றது என்று தெரிவித்தார்.

வடக்கில் சுற்றுலாத் துறைக்கான வாய்ப்புக்கள் அதிகம் உள்ள நிலையில் அதனை கூடுதல் அபிவிருத்தி செய்ய வேண்டும் எனவும், உலக வங்கியும் அது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளதையும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் கவனத்துக்கு கொண்டு சென்றார். அதே போன்று விவசாயம், மீன்பிடி துறைகளின் பெறுமதி சேர் ஏற்றுமதிக்கான வாய்ப்புக்களை உருவாக்க வேண்டும் என்றும் ஆளுநர் கோரிக்கை விடுத்தார்.

இலங்கைக்கும், ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையிலான தொடர்பு ஏற்பட்டு 60 ஆண்டுகள் அடுத்த ஆண்டுடன் நிறைவு செய்யப்படவுள்ளதைக் குறிப்பிட்ட ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள் இலங்கையுடனான தமது உறவுகள் திட்டங்கள் தொடரும் எனவும் தெரிவித்தனர். அத்துடன் தமது எதிர்கால திட்டங்கள் தொடர்பிலும், குறிப்பாக யாழ்ப்பாணத்துக்கான குடிநீர்த் திட்டம் தொடர்பிலும் ஆளுநருடன் கலந்துரையாடினர்.

யாழ்ப்பாணத்துக்கான குடிநீர்த் திட்டம் எவ்வளவு விரைவாக மக்களைச் சென்றடைய முடியுமோ அவ்வளவு விரைவாகச் சென்றடைவதற்கு ஏதுவான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகவும் ஆசிய அபிவிருத்தி வங்கியினர் குறிப்பிட்டனர்.

இதேவேளை பாலியாறுத் திட்டத்துக்கான முற்கூட்டிய சாத்தியக் கூற்றாய்வுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உதவி வழங்கி வருவதையும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

அதேநேரம் இரணைமடுவிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் கடலுடன் கலக்கும் நீரை யாழ்ப்பாணத்துக்கு கொண்டு வருவதற்கான சாத்தியப்பாடுகள் தொடர்பிலும் ஆளுநர் இதன் போது தெரியப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

இந்தச் சந்திப்பில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள், கடலைநீரை நன்னீராக்கும் திட்டத்தின் பொறியியலாளர்கள் ஆகியோர் பங்கேற்றனர்.

# அமெரிக்காவின் வரி விதிப்பை எதிர் கொள்ள இணைந்து செயற்பட இந்தியாவுக்கு சீனா அழைப்பு!

அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் பொறுப்பேற்றது முதல் பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். அதன்படி, பரஸ்பர வரிவிதிப்பு என்ற பெயரில் இந்தியா, சீனா, உட்பட பல்வேறு நாடுகளுக்கு கூடுதலாக வரிவித்துள்ளார்.

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு கூடுதலாக 26 சதவீத வரி விதித்துள்ளார். அதே போல் சீனாவில் இருந்து அமெரிக்கா இறக்குமதி செய்யும் பொருட்களுக்கு ஏற்கனவே 54 சதவீத கூடுதல் வரியை ட்ரம்ப் விதித்தார். தற்போது சீன இறக்குமதிக்கு கூடுதலாக 50 சதவீத வரி விதித்துள்ளார். இதன் மூலம் சீனாவில் இருந்து அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு விதிக்கப்படும் வரி 104 சதவீதமாக அதிகரித்துள்ளது.

இதனால் உலக அளவில் பெரும் வர்த்தகப் போர் ஏற்பட்டுள்ளது. அமெரிக்காவின் நவடிக்கைக்கு பதிலடியாக சீனா 34 சதவீத கூடுதல் வரி விதித்துள்ளது.

இந்நிலையில் அமெரிக்க வரிவிதிப்பை எதிர்கொள்ள இணைந்து செயல்படுவோம் என்று இந்தியாவுக்கு சீனா அழைப்பு விடுத்துள்ளது.



இது தொடர்பாக சீன தூதரக செய்தித்தொடர்பாளர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில், சீனா–இந்தியா பொருளாதார, வர்த்தக உறவு இருதரப்பு நன்மைகளை அடிப்படையாக கொண்டது. அமெரிக்காவின் வரிவிதிப்பை எதிர் கொள்ளும் உலகின் இரு வளர்ச்சியடைந்த நாடுகள் இணைந்து செயற்பட்டு இந்த கடினமான சூழ்நிலையைக் கடக்க வேண்டும்' என தெரிவித்துள்ளார்

# கனடா வாழ் கருணையாளர்களே!





என் இனிய உறவுகளே! 13 ஆண்டுகளுக்கு முன் எமது இல்லங்கள் ஆரம்பிக்கப்பட்ட போது இந்தக் குழந்தைகள் போன்றவர்களை வாரி அணைத்து 86 குழந்தைகளோடு ஆரம்பித்து இன்று 423 குழந்தைகளின் அன்பு நிறைந்த இடமாக அன்பு இல்லம். பாரதி இல்லம். செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இலங்கங்கள் திகழ்கின்றன.

மூன்று வேளை உணவு. உடை. உறையுள் மட்டுமன்றி கல்வி மேம்பாடு விளையாட்டு. பரதநாட்டியம் என பல்வேறு துறைகளிலும் எமது இல்லக் குழந்தைகள் முன்னணி வகித்து வருகின்றார்கள்.

அன்பர்களே! அருகே காணப்படும் குழந்தைகள் போல் பலர் இன்றும் ஆலய வீதிகளிலும் கடையோரங்களிலும் நிற்கும் குழந்தைகளைப் பொறுப்பேற்க முன் வருமாறு சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் இருந்து தொடர்ச்சியாகக் கோரிக்கைகள் விட்டப்பட்டு வருகின்றன. ஆனால் எம்மால் பொறுப்பேற்க முடியாதுள்ளமைக்கு எமது இல்லத்தின் நிதி நெருக்கடியே பிரதான காரணமாகும்.

உறவுகளே! உங்கள் கருணையினை இவர்கள் பக்கமும் திருப்புங்கள்! எமது சந்ததியை நாமே காப்பாற்றுவோம்! ஒரு இல்லத்துக் குழந்தைகளுக்கு உணவளிக்க ஒரு நாளுக்கு 200.00 டொலர்கள் மட்டுமே. ஒரு நாள் உணவளிக்க முடியாதோர் ஒரு வேளை உணவுக்கு 100.00 டொலர்கள் தாருங்கள். மேலதிக விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் பார்க்கலாம். ஈழநாடு பத்திரிகையின் அறப்பணி 14 ஆண்டுகளாகத் தொடர்கின்றது. தொடர்புகளுக்கு பரமேஸ் 416 841 9600

எமது வாழ்நாளில் ஒரு மலையைப் புரட்ட முடியவில்லையே என்ற கவலையை விடுவோம்! ஒரு குழந்தைகளுக்கு உணவளித்தோம் என்று மகிழ்வோடு வாழ்வோம். வாருங்கள்! இணையுங்கள்!

# இலங்கை அரசு ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்துடன் இணைந்து செயற்பட வேண்டுமென சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்து

உள்நாட்டு ஆயுத மோதலின் போது இடம் பெற்ற குற்றங்களிற்கு நீதியை வழங்குவதற்கும் அவற்றிற்கு முடிவை காண்பதற்கும் உதவும் என்பதால்.இலங்கை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ரோம் சட்டத்தை ஏற்றுக்கொள்வது அவசியம் என சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது

இலங்கை ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்துடன் இணைந்து செயற்படவேண்டும் என சர்வதேச மன்னிப்புச்சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

நீதியமைச்சர் ஹர்சனநாணயக்காரவிற்கு எழுதியுள்ள கடிதத்தில் சர்வதேச மன்னிப்புச்சபையின் தென்னாசியாவிற்கான பிராந்திய இயக்குநர் ஸ்மிரிதி சிங் இதனை தெரிவித்துள்ளார் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவையின் அமர்வில் இலங்கை எடுத்துள்ள நிலைப்பாடு குறித்து ஆழ்ந்த கரிசனை கொண்டுள்ளோம்.

குறிப்பாக இலங்கையில் இடம் பெற்ற பாரிய மனித உரிமை மீறல்கள் அல்லது சர்வதேச மனித மனிதாபிமான சட்டங்கள் பாரிய அளவில் மீறப்பட்டமை தொடர்பில் பொறுப்புக்கூறும் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக தகவல் மற்றும் ஆதாரங்களை சேகரித்து. ஒருங்கிணைத்து பகுப்பாய்வு செய்து பாதுகாத்தலிற்கான ஆணையை கொண்டுள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தின் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறும் திட்டத்தை நிராகரித்தமை குறித்து ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம்.

இலங்கையின் உள்நாட்டு மோதலின் போது பாதிக்கப்பட்ட இலங்கையர்களிற்கு நீதியை உறுதி செய்வதற்காக இலங்கை அரசாங்கம் ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தின் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறும் திட்டம் உட்பட ஆணையாளர் அலுவலகத்துடன் ஆக்கபூர்வமான விதத்தில் இணைந்து செயற்படவேண்டும். ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் மேலதிக விசாரணைகளை மேற் கொள்வதற்காக இலங்கைக்கு வருவதற்கு அனுமதிக்க வேண்டும்.

உள்நாட்டு ஆயுத மோதலின் போது இடம்பெற்ற குற்றங்களிற்கு நீதியை வழங்குவதற்கும் அவற்றிற்கு முடிவை காண்பதற்கும் உதவும் என்பதால் இலங்கை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ரோம் சட்டத்தை ஏற்றுக்கொள்வது அவசியம். இலங்கை இன்னமும் சர்வதேச குற்றங்களை அதன் உள்நாட்டு சட்ட கட்டமைப்பிற்குள் ஏற்றுக் கொள்ளவில்லை. பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தவர்கள் சட்டத்தரணிகள் பத்திரிகை யாளர்கள் செயற்பாட்டாளர்கள். நீதியை நாடும் போது துன்புறுத்தலை எதிர்கொள்வது உடனடியாக நிறுத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும் எனவும் தெரிவித்துள்ளது.

# அடேங்கப்பா:- மோடியைச் சந்திக்க நேரமில்லை




இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை சந்திப்பதற்கான அழைப்பு டக்ளஸ் தேவானந்தாவுக்கு விடுக்கப்பட்ட போதிலும். யாழ்ப்பாணத்தில் இருந்து சென்று சந்திப்பதற்கு கால அவகாசம் போதாமையினால் குறித்த சந்தர்ப்பத்தினை பயன்படுத்திக் கொள்ள முடியவில்லை.

பாரதப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை வருகையின் போது ஏனைய பல தமிழ் அரசியல் தரப்பினர் அவரை சந்தித்திருந்தனர். அந்த வகையில் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் பங்கு பற்றாமை குறித்து ஊடகவியலாளர்கள் கருத்துக் கேட்ட போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரசியலில் மாற்றங்கள்

ஜே.வி.பி.ஒரு காலத்தில் இந்திய எதிர்ப்புக்குப் பிரபலமான ஓர் அரசியல் இயக்கம். அவ்வாறானதோர் அரசியல் பாசறையில் உருவாகிய அநுர குமார திஸநாயக்க தலைமையிலான அரசாங்கம். பாரத பிரதமருக்கு இலங்கையின் மித்திர விபூஷண என்னும் விருதை வழங்கி ஆரத்தழுவுகின்றது. இந்த நிலைமையும் மாறலாம் அல்லது அப்படியே தொடரலாம்.

ஏனெனில் அரசியலில் அனைத்துக்கும் இடமுண்டு. ஆனால். தங்களின் நிதானத்தினதும் தூர நோக்குமிக்க அணுகுமுறையினதும் அளவு தான் தங்களின் ஆட்சியின் அளவு என்பதை ஜே. வி. பி. புரிந்திருக்கின்றது.

அரசியலில் நிரந்தர நண்பர்களும் இல்லை நிரந்தர எதிரிகளும் இல்லை என்னும் ஒரு கூற்றுண்டு. அப்படியாயின் எதுதான் நிரந்தரமானது? அரசியலில் நலன்கள் மட்டுமே நிரந்தரமானது. அந்த நலன்களுக்கு எது உகந்ததோ அவ்வாறான முடிவுகளை எடுப்பதன் ஊடாக மட்டும் தான் அரசியல் பரீட்சையில் எல்லாக் காலத்திலும் வெற்றி பெற முடியும். இந்தச் சூத்திரத்தை இன்றைய ஜே. வி.பி. புரிந்து கொள்ள முயற்சிக்கிறது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு மித்திர விபூஷண என்று விருது வழங்கிய தினம். ஜே. வி.பியின் வரலாற்றில் முக்கியமானது.

1971 ஏப்ரல் 5ஆம் திகதிதான் ஜே. வி. பி. அதன் முதலாவது ஆயுதக் கிளர்ச்சியை மேற்கொண்ட நாள். அதிகாரம் என்பது துப்பாக்கிக்குழலிலிருந்து பிறக்கிறது என்னும் மாவோயிச அணுகுமுறையில் இலங்கையின் ஆட்சியை. புரட்சியின மூலம் கைப்பற்ற முற்பட்டு மோசமாகத் தோற்கடிக்கப்பட்டது.

அன்றைய தினத்தில் இந்தியாவுடன் ஒரு பாதுகாப்பு உடன்பாட்டை இன்று மேற்கொண்டிருக்கிறது. ஜே. வி. பி .தொடர்பில் எண்ணிப் பார்க்கும் போது. அதற்கு ஒப்பான ஆனால். அதனை விடவும் மகத்தான ஆயுதப் போராட்ட வரலாற்றை ஈழத் தமிழினம் கொண்டிருக்கிறது.

ஒருகாலத்தில் ஆயுதங்கள் மூலம் அதிகாரத்தை அடையலாம் என்று நம்பியதில் தவறில்லை – உலகின் பல பாகங்களிலும் அவ்வாறு நடந்திருக்கின்றன. ஆனால். அயுதப் போராட்டம் ஒரு பெரும் அழிவை வழங்கிய பின்னர். அதிலிருந்து பாடங்களை கற்றுக் கொள்பவர்கள் வரலாற்றில் முன்னோக்கி நடக்கின்றனர். அப்படித் தான் இன்று ஜே. வி. பி. அதிகாரத்தை கைப்பற்றியிருக்கின்றது. ஆனால். தமிழ்ச் சூழலை உற்று நோக்கினால் தொடர்ந்தும் சறுக்கி விழுந்து கொண்டிருப்பதே வரலாறாகத் தொடர்கின்றது ஏன்?

அரசியலை மாற்றங்களுக்குள்ளால் நோக்காமலும் அந்த மாற்றங்கள் முதன்மைப்படுத்துகின்ற யதார்த்தங்களை பற்றிக் கொள்ளாமலும் – வெறும் விருப்பங்கள் பற்றியே பேசிக் கொண்டிருப்பதால் தான் தமிழர் அரசியல் தொடர்ந்தும் கையறு நிலையிலேயே இருக்கின்றது.

ஈழத்தமிழர் பற்றிபல ஆடம்பரமான வார்த்தைகள் உணடு .ஈழத்தமிழர் ஒரு படித்த சமூகம். ஆனால் சிங்களவர்களோ மோடர்கள். ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக எட்டுக் கோடி தமிழ்நாட்டு மக்கள் இருக்கின்றனர். ஈழத் தமிழர்களுக்கு பலமான புலம்பெயர் சமூகம் உண்டு. இப்படியெல்லாம் பேசிக் கொண்டிருக்கும் போது தானே மறுபுறம் ஈழத் தமிழர் அனைத்தையும் இழந்திருக்கின்றனர்.

இனியும் இவைகள் பற்றி பெருமை பேசுவதில் ஏதாவது. பொருள் இருக்க முடியுமா? நேற்று எவையெல்லாம் ஈழத் தமிழர்களுக்குக் கை கொடுக்கவில்லையோ அவைகள் இனியும் கை கொடுக்காது. இதனை புரிந்து கொள்வது தான் அரசியலில் முன்னகர்வதற்கான முதல் படியாகும்.

எது இருக்கிறதோ. அதுதான் ஈழத் தமிழர் அரசியலில் பயணம் செய்வதற்கான வாகனம். அந்த வாகனத்தை சரியான திசை நோக்கி ஓட்டிச் செல்லும் அரசியல் தலைவர்கள் இருந்தால் அது தான் ஈழத் தமிழர்களுக்கான வரம்.

வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை **eelanadu.ca** மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

# இலங்கையின் நிலப்பரப்பும் - கடற்பரப்பும் இந்தியாவுக்கு எதிராக பயன்படுத்தப்படாது என்ற உத்தரவாதம் வழங்கிய அநுர!



இலங்கையின் நிலப்பரப்பை இந்தியாவுக்கு எதிராக பயன்படுத்த அனுமதிக்க போவதில்லை என்ற உத்தரவாதத்தை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க வழங்கியுள்ள விடயம் இருநாட்டு தலைவர்களுக்கு இடையிலான கலந்துரையாடலின் போது முக்கியத்துவம் பெற்றிருந்தது. இலங்கையின் நிலப்பரப்பு மாத்திரமல்ல கடல் பரப்பையும் இந்தியாவுக்கு எதிராக பயன்படுத்த இடமளிக்கப்பட மாட்டாது என்ற அடிப்படையில் இருதரப்பு பேச்சுக்கள் இடம்பெற்றிருந்தாக இந்திய வெளியுறவு செயலர் விக்ரம் மிஸ்ரி தெரிவித்தார்.

புதிய பாதுகாப்பு ஒப்பந்தத்தின் ஊடாக இருநாட்டு படைகளும் விஸ்தரிக்கப்பட்ட கூட்டுப் பயிற்சிகள், செயலமர்வுகள், தொழில்நுட்பம் மற்றும் தகவல் பரிமாற்றம் என பரந்துப்பட்ட விடயங்களுடன் கூட்டு நடவடிக்கைளில் திறன்பட செயற்படவும் வலுவாக கூட்டு நடவடிக்கைகளில் ஈடுபடவும் முடிகிறது. இருநாட்டு தலைவர்களின் பரஸ்பர பாதுகாப்பு கரிசனைகளின் அடிப்படையில் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை விஜயம் கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் இடம் பெற்ற விசேட ஊடக சந்திப்பின் போதே இந்திய வெளியுறவு செயலர் விக்ரம் மிஸ்ரி மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்தும் குறிப்பிடுகையில்,

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் அண்மைய இந்திய விஜயத்தின் போது பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்து இணக்கம் காணப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் ஊடாக இருநாட்டு படைகளும் விஸ்தரிக்கப்பட்ட கூட்டுப் பயிற்சிகள், செயலமர்வுகள், தொழில்நுட்பம் மற்றும் தகவல் பரிமாற்றமென பரந்துப்பட்ட விடயங்களுடன் கூட்டு நடவடிக்கைளில் திறன்பட செயல்பட முடிகிறது. எனவே இருநாட்டு தலைவர்களின் பாதுகாப்பு கரிசனைகளின் அடிப்படையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.


எவ்வாறாயினும் இலங்கையின் நிலப்பரப்பை இந்தியாவுக்கு எதிராக பயன்படுத்த அனுமதிக்க போவதில்லை என்ற உத்திரவாதத்தை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க வழங்கியுள்ளார். இருதலைவர்களுக்கு இடையிலான கலந்துரையாடலின் போது இந்த விடயம் முக்கியத்துவம் பெற்றிருந்தது. இலங்கையின் நிலப்பரப்பு மாத்திரம் அல்ல கடல் பரப்பையும் இந்தியாவுக்கு எதிராக பயன்படுத்த இடமளிக்கப்படமாது என்ற அடிப்படையில் இருதரப்பு பேச்சுக்கள் இடம் பெற்றிருந்தன.

இவ்வாறான விடயங்களை உள்ளடக்கியதாகவே கூட்டு இணக்கப்பாடுகளுடன் ஒரு குடைக்கு கீழான பாதுகாப்பு ஒப்பந்த வரைபு முன்னெடுக்கப்பட்டுள்ளது. ஒரு நிலையானதும் ஸ்தீரமானதுமான புரிந்துணர்வு ஒப்பந்தமாகவே இது உள்ளது. இருநாட்டு தலைவர்களின் பரஸ்பர விஜயங்கள் மூலம் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகளின் பாதுகாப்பு படைகளின் செயற்திறன் மேம்படுத்தல் மற்றும் கூட்டு பயிற்சி நடவடிக்கள், பரிமாற்றங்கள் என்று இருதரப்ப பாதுகாப்பு ஒத்துழைப்புகள் புதிய வடிவில் வலுசேர்க்கப்பட்டுள்ளன. மேலும் பாதுகாப்பு தொழில்துறை ஒத்துழைப்புகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இருநாட்டு மீனவர் பிரச்சினை குறித்து பேச்சுவார்த்தைகள் நீண்ட காலமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மீனவர்களின் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு ஏற்படுத்தும் நோக்கில் இலங்கை இந்திய தலைவர்கள் முன்னுரிமையுடன் செயல்பட்டு வருகின்றனர். இருப்பினும் மீனவர்களின் பிரச்சினையை மனிதாபிமான அடிப்படையில் கையாளவும் தீர்வு காணவும் வேண்டும் என்ற விடயத்தை பிரதமர் நரேந்திர மோடி இலங்கை தரிப்பிடம் வலியுறுத்தியிருந்தார். இருநாட்டு மீனவர்களின் வாழ்வாதாரம் பாதித்து விடாமல் தீர்வை நோக்கி நகர வேண்டும் என்பது நிலைப்பாடாக உள்ளது. இருப்பினும் மீனவர் பிரச்சினையில் அண்மைய நடவடிக்கைகள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

இந்தியாவின் கோரிக்கையை ஏற்று மீனவர்களை இலங்கை விடுவித்திருந்தது. எனவே சிறந்த ஒத்துழைப்புகளுடன் இரு தரப்பினராலும் மீனவர் பிரச்சினை கையாளப்படுகின்றது. கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் ஆகுகையில் 6 சுற்று கலந்துரையாடல்கள் இடம் பெற்றிருந்தன. ஏற்படக்கூடிய நெருக்கடியான நிலைமைகளை தவிர்த்து மீனவர் பிரச்சினைக்கு சுமூகமான தீர்வை காண தொடர்ந்தும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றது என்றார்.

# சுழிபுரத்தில் மயானத்தை வாங்கிய தனிநபர் ஒருவர் சுற்றுலா மையமாக்க முயற்சி! கல்லறைகளை பாதுகாக்க கோரும் உறவுகள்!



யாழ்ப்பாணத்தில் இடுகாடு ஒன்றினை தனியார் ஒருவர் கொள்வனவு செய்து , அதில் கட்டடங்களை கட்ட நடவடிக்கை எடுத்துள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்

சுழிபுரம் பகுதியில் உள்ள காணி ஒன்றை நீண்ட காலமாக அப்பகுதி மக்கள் இடுகாடாக பயன்படுத்தி வருகின்றனர். அங்கு சுமார் 150 க்கும் மேற்பட்ட உடலங்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ள நிலையில் பல கல்லறைகளும் கட்டப்பட்டுள்ளன.

அத்துடன் அப்பகுதியில் சிறுமி ஒருவர் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட நிலையில் சிறுமியின் உடலம் நீதிமன்ற உத்தரவின் பேரில் குறித்த இடுகாட்டிலையே புதைக்கப்பட்டுள்ள நிலையில் குறித்த வழக்கு விசாரணைகள் நீதிமன்றில் நிலுவையில் உள்ளது

இந்நிலையில் குறித்த இடுகாடு அமைந்துள்ள காணியை அண்மையில் தான் பணம் கொடுத்து வாங்கியுள்ளதாகவும் அது தனக்கு சொந்தமானது என கூறி கல்லறைகளை அகற்றி விட்டு, அதில் சுற்றுலா மையம் ஒன்றினை அமைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக தனியார் ஒருவர் அப்பகுதி மக்களிடம் கூறியுள்ளார்.

இது தொடர்பில் பிரதேச செயலரிடம் தெரிவித்த நிலையில் குறித்த காணி தனியாருக்கு சொந்தமானது எனவும் இடுகாட்டுக்காக இனிவரும் மூளாய் பகுதியில் 2 ஏக்கர் காணியை ஒதுக்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்..

எமது உறவுகளின் கல்லறைகள் இந்த இடுகாட்டில் உள்ளது அதனை ஒருவர் அழித்து அதன் மீது சுற்றுலா தளம் ஒன்றினை அமைப்பதனை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது. எனவே எமது இடுகாட்டையும் எம் உறவுகளின் கல்லறைகளையும் பாதுகாத்து தாருங்கள் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ட்ரம்பின் வரி விதிப்புக்கு பிரிட்டன் பிரதமர் ஆதரவு?

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் கடுமையான வரிவிதிப்பு மற்றும் 'அமெரிக்கா முதலில்' என்ற கொள்கையைத் தொடர்ந்து சர்வதேச வர்த்தக சந்தை நிச்சயமற்ற நிலையை எட்டியுள்ளது.

இந்த நிலையில் பிரித்தானியாவின் பிரதமர் கெய்ர் ஸ்டார்மர், உலக மயமாக்கல் சகாப்தத்தின் முடிவை அறிவிக்கத் திட்டமிட்டுள்ளதாக அறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது.

நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் பிரித்தானியப் பிரதமர், கடந்த 1991ஆம் ஆண்டு சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட உலகமயமாக்கல் திட்டம் தோல்வியை எதிர் நோக்கியுள்ளதனை ஏற்றுக் கொண்டார் என 'த ரைம்ஸ்' செய்தி வெளியிட்டுள்ளது.

இது தவிர, சுதந்திர வர்த்தகம் மற்றும் வெகுசன குடியேற்றத்தால் எந்த நன்மையும் ஏற்படவில்லை என நம்பும் அமெரிக்க ஜனாதிபதியின் ஆதரவாளர்கள், அவரது பொருளாதார தேசியவாதம் ஏன் பிரபலமாக உள்ளது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைமை உருவாகியுள்ளதாகவும் அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டொனால்ட் ட்ரம்பின் 10 சதவீத அடிப்படை வரி மற்றும் பிற சமீபத்திய பாதுகாப்புவாத நடவடிக்கைகளுடன் பிரித்தானியா இணங்கவில்லை. இருப்பினும், டொனால்ட் ட்ரம்பின் வழிமுறைகளுக்கு பாரிய ஆதரவான ஒரு புதிய சகாப்தம் ஆரம்பமாகியுள்ளதாகவும், கெய்ர் ஸ்டார்மரின் அரசாங்கம் அதனை ஏற்றுக்கொள்வதாக பிரித்தானியாவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் சுட்டிக் காட்டியுள்ளதாக 'த ரைம்ஸ்' செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை திபெத்திய பகுதிகளுக்கு அமெரிக்க இராஜதந்திரிகள் உள்ளிட்ட அதிகாரிகள் செல்வதற்கு கட்டுப்பாடுகளை விதிப்பதற்கு பொறுப்பான சீன அதிகாரிகள் மீது வாஷிங்டன்



விசா கட்டுப்பாடுகள் நடைமுறைக்கு கொண்டு வந்துள்ளது. அமெரிக்க இராஜதந்திரிகள், ஊடகவியலாளர்கள் மற்றும் சர்வதேச கண்காணிப்பாளர்கள் திபெத் பிரதேசங்களுக்கு செல்வதற்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளுக்கு பதிலடியாக இந்நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருப்பதாக அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மார்கோ ரூபியோ இதனை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

# இலங்கை மித்ரவிபூஷண விருது எனக்கு வழங்கப்பட்டமை பெருமைக்குரிய விடயம் - இந்தியப் பிரதமர் மோடி பெருமிதம்



ஜனாதிபதி அநுரகுமார திசா நாயக்கவால் 'இலங்கை மித்ர விபூஷண' விருது எனக்கு வழங்கப்பட்டது பெருமைக்குரிய விடயம் ஆகும் என இந்திய பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையிலான இருதரப்பு ஒப்பந்தங்கள் ஜனாதிபதி அலுவலகத்தில் கடந்த 05 ஏப்ரல் 2025 சனிக்கிழமை கைச்சாத்திடப்பட்டதையடுத்து பிரதமர் மோடிக்கு 'இலங்கை மித்ர விபூஷண' விருது வழங்கப்பட்டது. இதன் போது கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்வாறு தெரிவித்தார்.

இந்திய பிரதமர் மோடி மேலும் தெரிவிக்கையில், இந்தப் பெருமை எனக்கு மட்டுமல்ல, 140 கோடி இந்தியர்களுக்கும் கிடைத்த பெருமையாகும். இது இந்திய இலங்கை மக்களுக்கு இடையிலான வரலாற்று உறவுகள் மற்றும் ஆழமான நட்புக்கு கிடைத்த மரியாதையாகும்.

உண்மையான அண்டை நாடாகவும் நண்பராகவும் நமது கடமைகளை நிறைவேற்றியிருப்பது இந்தியாவிற்கு பெருமை சேர்க்கும் விடயமாகும்.

2019 பயங்கரவாதத் தாக்குதல், கோவிட் தொற்றுநோய், சமீபத்திய பொருளாதார நெருக்கடி என ஒவ்வொரு கடினமான சூழ்நிலையிலும் இலங்கை மக்களுடன் நாம் நின்றுள்ளோம்.

எமது அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை என்ற கொள்கையிலும், தொலைநோக்குப் பார்வையான 'மகாசாகர்' ஆகிய இரண்டிலும் இலங்கைக்கு சிறப்பு இடம் உண்டு என இந்தியப் பிரதமர் மோடி மேலும் தெரிவித்துள்ளார்.

# தமிழ்த் தலைவர்களிடம் இந்தியப் பிரதமர் வாக்குறுதி



ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் சமூகத்திற்கு சமத்துவம், கௌரவம் மற்றும் நீதி ஆகியவற்றுடனான வாழ்க்கைக்கான எமது அசைக்கமுடியாத அர்ப்பணிப்பை தமிழ் கட்சிகளின் தலைவர்களுடனான சந்திப்பில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் சமூகத்திற்கு சமத்துவம், கௌரவம் மற்றும் நீதி ஆகிய வற்றுடனான வாழ்க்கைக்கான எமது அசைக்கமுடியாத அர்ப்பணிப்பை தமிழ் கட்சிகளின் தலைவர்களுடனான சந்திப்பில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் இந்தச் சந்திப்பு இடம் பெற்றுள்ளது. இதில் சி.வி.கே.சிவஞானம், சிறிதரன், செல்வம் அடைக்கல நாதன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சித்தார்த்தன், சாணக்கியன் சுமந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பு குறித்து இந்தியப் பிரதமர் தனது எக்ஸ் தளத்தில் பின்வருமாறு பதிவிட்டுள்ளார். இலங்கையில் உள்ள தமிழ் சமூகத்தினரது தலைவர்களை சந்திக்கின்றமை எப்பொழுதும் மகிழ்ச்சிக்குரிய ஒரு விடயமாகும்.

பெருமதிப்புக்குரிய தமிழ் தலைவர்களான திரு இரா. சம்பந்தன் மற்றும் திரு மாவை சேனாதிராஜா ஆகியோரது மறைவுக்கு இச்சந்தர்ப்பத்தில் அனுதாபம் தெரிவித்தேன். அவர்கள் இருவருமே தனிப்பட்ட ரீதியில் எனக்கு தெரிந்தவர்கள்.

அத்துடன் ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் சமூகத்திற்கு சமத்துவம், கௌரவம் மற்றும் நீதி ஆகியவற்றுடனான வாழ்க்கைக்கான எமது அசைக்க முடியாத அர்ப்பணிப்பு இச்சந்திப்பின் போது மீண்டும் வலியுறுத்தப்பட்டது.

எனது விஜயத்தின் போது ஆரம்பித்து வைக்கப்பட்ட பல திட்டங்களும் முன்னெடுப்புகளும் அவர்களது சமூக, பொருளாதார மற்றும் கலாசார முன்னேற்றத்துக்கான பங்களிப்பை வழங்கும்.

# இந்திய மீனவர்களை உடனடியாக விடுவித்து படகுகளுடன் அவர்களை திருப்தி அனுப்ப வேண்டும் -மோடி வலியுறுத்து

இந்திய மீனவர்களை உடனடியாக விடுவித்து, அவர்களின் படகுகளை திருப்பி அனுப்ப வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம் என இந்திய பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையிலான இருதரப்பு ஒப்பந்தங்கள் ஜனாதிபதி அலுவலகத்தில் கடந்த 05 ஏப்ரல் 2025 சனிக்கிழமை கைச்சாத்திடப்பட்டதையடுத்து பிரதமர் மோடிக்கு 'இலங்கை மித்ர விபூஷண' விருது வழங்கப்பட்டது. இதன் போது கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்வாறு தெரிவித்தார். இந்திய பிரதமர் மோடி மேலும் தெரிவிக்கையில் மீனவர்கள் விடயத்தில் மனிதாபிமான அணுகுமுறையுடன் நாம் முன்னேற வேண்டும் என்பதை ஒப்புக்கொள்கிறோம். அந்த வகையில் இந்திய மீனவர்களை உடனடியாக விடுவித்து, அவர்களின் படகுகளை திருப்பி அனுப்ப வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

2019 பயங்கரவாதத் தாக்குதல், கொவிட் தொற்று, சமீபத்திய பொருளாதார நெருக்கடி என ஒவ்வொரு கடினமான சூழ்நிலையிலும் இலங்கை மக்களுடன் நாம் நின்றுள்ளோம்.

எமது அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை என்ற கொள்கையிலும் தொலைநோக்குப் பார்வையான 'மகாசாகர்' ஆகிய இரண்டிலும் இலங்கைக்கு சிறப்பு இடம் உண்டு என பிரதமர் நரேந்திர மோடி மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த 11 இந்திய மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

அண்மைக் காலமாக கைது செய்யப்பட்டு யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்படிருந்த வர்களே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

நீரியல் வளத்துறை திணைக்களத்தால் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு அரசாங்கத்தினால் நல்லெண்ண அடிப்படையில் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தினால் இவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

விடுதலை செய்யப்பட்ட அனைவரும் யாழில் இருந்து மிரிகானைக்கு அனுப்பப்பட்டு அதன் பின்னர் இந்தியாவுக்கு அனுப்பப்படவுள்ளனர்.

# மோடியுடனான சந்திப்பு

இந்திய பிரதமர் நரேந்திர மோடி தெரிவு செய்யப்பட்ட தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகளை சந்தித்திருந்தார். இதே போன்று தெரிவு செய்யப்பட்ட மலையக கட்சிகளின் தலைவர்களையும் அவர் சந்தித்திருந்தார். வடக்கு, கிழக்கிலிருந்து சந்தித்த கட்சிகளின் பிரதிநிதிகள் போன்று மலையக கட்சிகளின் தலைவர்கள் முட்டி மோதிக்கொண்டு ஊடகங்களில் கருத்துத் தெரிவிக்கவில்லை.

நாங்கள் சந்தித்தோம் என்பதுடன் நிறுத்திக் கொண்டனர். ஏனெனில், அவர்கள் கட்சிகளாகப் பிரிந்திருந்தாலும் கூட இந்தியத் தலைவரை சந்திப்பதில் அவர்களுக்குள் பதற்றம் இல்லை. ஆனால், தமிழ் கட்சிகளின் தலைவர்கள் என்போரின் பிரச்சனையோ வேறு. அதாவது, தங்களில் யார் விடயங்களை சரியாக வலியுறுத்தினோம் என்பதில் தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு இடையே போட்டி உண்டு. அந்தப் போட்டியின் விளைவாகவே தனியான ஊடக சந்திப்புகள் நடக்கின்றன.

உண்மையில், என்ன செய்திருக்க வேண்டும் சந்திப்பில் பங்கு கொண்ட அனைத்து பிரதிநிதிகளும் இணைந்து ஓர் ஊடக சந்திப்பை நடத்தியிருக்க வேண்டும். ஆனால், முடியவில்லை. அடிப்படையில் இது ஒரு குறியீட்டு ரீதியான பெறுமதி கொண்ட சந்திப்பாகும்.

இலங்கையின் வடக்கு, கிழக்கை வரலாற்று வாழ்விடமாகக் கொண்டிருக்கும் ஈழத் தமிழ் மக்களின் அபிலாசைகள், இதேபோன்று இந்திய வம்சாவளி மக்களான மலையக மக்களின் பிரச்னைகள் தொடர்பில் இந்தியா தொடர்ந்தும் அதன் நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கிறது என்பதே இந்தச் சந்திப்பின் மூலம் இந்தியா அரசாங்கத்துக்கு உணர்த்த முற்படும் செய்தியாகும்.

இந்திய பிரதமரிடம் தாங்கள் என்ன பேசினோம் என்பதைப் பற்றி இலங்கை தமிழ் அரசு கட்சியின் சார்பில் பங்கு கொண்டவர்கள் உடனடியாக ஊடகங்களுக்குத் தெரிவித்தனர்.

அதிலும் சந்திப்பில் பங்கு கொண்ட தமிழ் அரசு கட்சியின் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் ஊடக சந்திப்பில் பங்கு கொள்ளவில்லை. இதனைத் தொடர்ந்து ஒற்றையாட்சிக்குள் தீர்வின் சாத்திய மின்மையை தான் வலியுறுத்தினார் என்று அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் (முன்னணி) கட்சியின் தலைவர் தெரிவித்திருக்கிறார்.

சந்திப்பில் பங்கு கொண்டவர்களில் அவர் மட்டுமே தமிழ் மக்களின் பிரச்னையை உறுதியாக இந்தியப் பிரதமரிடம் தெரிவித்தாரென அவரது ஆதரவாளர்கள் கொண்டாடுவதை காண முடிகிறது.

ஜன நாயக தமிழ்த் தேசிய கூட்டணியிலிருந்து பங்கு கொண்டவர்கள் தாங்கள் பேசியதைக் கூற வில்லை. சந்திப்பில் பங்கு கொண்ட தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகள் தெரிவித்து வரும் கருத்துகள் எதனைக் காண்பிக்கின்றது?

இந்தியப் பிரதமரை சந்திக்கும் போதும் தெருக்களில் சண்டையிடும் கட்சி மனோபாவத்துடன் தான் சந்தித்திருக்கின்றனர். இது தான் தமிழ் கட்சிகளின் நிலைமை என்றால், இவ்வாறான கட்சிகளை நம்பி ஒரு பிராந்திய சக்தி எவ்வாறு அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்க முடியும்?

தாங்கள் பிரதமரிடம் குறிப்பிட்டதை மக்களுக்குக் கூறி வரும் தமிழ் பிரதிநிதிகள் தங்களின் கருத்துகளுக்கு பிரதமர் மோடி வழங்கிய பதிலை எங்குமே கூறவில்லை.

உண்மையில், அவர் என்ன பதிலளித்தார். தமிழ் மக்களின் பிரச்னைக்கு சமஷ்டி தீர்வு மிகவும் சிறந்தது. அதனை தனது அரசாங்கம் நிச்சயம் கொழும்பிடம் வலியுறுத்துமென்று கூறினாரா? மீனவர் பிரச்னைக்கான நிரந்தரத் தீர்வு தொடர்பில் அவர் என்ன கூறினர்?

ஏனெனில், தங்களில் யார் சரியாகப் பேசினார்கள் என்பதில் முட்டி மோதிக் கொள்ளும் கட்சிகளின் தலைவர்கள் பிரதமர் மோடி தங்களுக்கு என்ன சொன்னார் என்பதையுமல்லவா மக்களுக்குச் சொல்ல வேண்டும். புதுடில்லிக்கு அழைக்குமாறு கோரியதாகவும் ஒரு கட்சியின் பிரதிநிதி கூறுகிறார்

அவ்வாறாயின் அதற்கு மோடி வழங்கிய பதில் என்ன? இந்திய பிரதமரின் கரிசனை என்ன என்பதையும் தமிழ் மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும் அல்லவா?

# அமெரிக்காவின் கதவுகள் மூடப்பட்டால் ஐரோப்பிய ஒன்றியத்தின் கதவு திறக்கப்படும் என்று நம்பாதீர்கள்!

அமெரிக்காவினால் கதவுகள் அடைக்கப்படும் போது ஐரோப்பிய ஒன்றியத்தின் தகவுகள் திறக்கப்படும் என்று எவராவது எண்ணினால் அது முற்றிலும் தவறாகும். ஐரோப்பிய பாராளுமன்றத்தினால் கொண்டு வரப்படவுள்ள புதிய சட்டத்துடன் புதிய ஜி.எஸ்.பி. பிளஸ் வரவுள்ளது. அதற்கமைய தற்போது ஜி.எஸ்.பி. பிளஸ் கிடைக்கப் பெறும் சுமார் 6 நாடுகள் அதனை இழக்க நேரிடும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.



கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் 06 ஏப்ரல் 2025 ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் விஜயம் மற்றும் இந்தியாவுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர்பில் அடுத்த பாராளுமன்ற அமர்வுகளில் கேள்வியெழுப்ப எதிர்பார்க்கின்றோம். கைசாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர்பில் தெரிந்து கொள்வதற்கான உரிமை சகலருக்குமுள்ளது.

இந்திய பரவாலக்கத்தை கடுமையாக எதிர்த்த குழுவொன்று இன்று இந்திய பிரதமருக்கு பிரம்மாண்ட வரவேற்பளித்து அவருக்கு இலங்கையில் வழங்கப்படும் அதியுயர் கௌரவ நாமத்தையும் வழங்கியிருக்கின்றமை உண்மையில் மகிழ்ச்சியளிக்கிறது. இலங்கைக்கு மிக அருகிலுள்ள பாரிய பொருளாதார சக்தி இந்தியாவாகும்.

தென்னிந்தியாவின் தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, தெலுங்கானா மற்றும் ஆந்ரா ஆகிய மாநிலங்கள் அடுத்த தசாப்தத்தில் உலகில் மிக வேகமாக அபிவிருத்தியடையும் வலயமாக அமையும். இவற்றின் இந்த துரித அபிவிருத்தியில் பயன் பெறுவதற்கு எமக்கு சிறந்த வாய்ப்பிருக்கிறது. எவ்வாறிருப்பினும் அதற்கான முன்னெடுப்புக்களுக்கு தமது சிந்தனையை மாற்றிக் கொள்ள வேண்டும்.

இந்த அரசாங்கம் ஆட்சியமைத்ததிலிருந்து சுவர்களை உடைத்து, பாலங்களை அமைக்குமாறு நான் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றேன். அவ்வாறு சுவர்களை உடைத்து, பாலங்களை அமைத்தவர்களுக்கு அமெரிக்காவால் தடை விதிக்கப்படவில்லை. மாறாக பாலங்களை உடைத்து சுவர்களை அமைத்தவர்களுக்கு தடையிருக்கிறது. இதன் மூலம் நாம் பாடத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும்.

வருடாந்தம் உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகளுக்கு அரச குழுவொன்று செல்வது வழமையாகும். இதன் போது அமெரிக்காவின் வரி குறித்து பேசப்படப் போகிறதா என்பது எமக்குத் தெரியாது. நாணய நிதியத்திலிருப்பதால் எமக்கு நிவாரணம் வழங்குமாறு கோரினால் அதனை ஏற்கக் கூடியவரல்ல ட்ரம்ப். வியட்நாம் ட்ரம்பிடம் முன்மொழிந்துள்ளதைப் போன்று அசாதாரணமான வாய்ப்பொன்றை வழங்கினால் வரி குறைப்பு குறித்து சிந்திக்க முடியும் என்று அமெரிக்கா கூறுகிறது. அவ்வாறெனில் அந்த அசாதாரணமான வாய்ப்பு என்ன என்பது குறித்து அரசாங்கமும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சும் தீர்மானிக்க வேண்டும்.

பிராந்திய பொருளாதார ஒப்பந்தங்களுக்குச் செல்லாமல் நாட்டுக்கு தேவையான பொருளாதார வளர்ச்சியை அடைய முடியாது. சிந்தனைகளில் மாற்றங்களை ஏற்படுத்தாமல் எம்மால் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியாது. ஐக்கிய மக்கள் சக்தியின் ப்ளு பிரின்ட் வெளியீட்டில் இது தொடர்பில் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றோம்.

இந்திய பிரதமருடன் தற்போது பேச வேண்டிய மிக முக்கிய காரணி எக்டாவாகும். பொருளாதார ரீதியில் எவ்வாறு இணைந்து செயற்படுவது, தென்னிந்திய 5 மாநிலங்களின் தீவிர அபிவிருத்தியிலிருந்து எவ்வாறு பயன் பெறுவது என்பது குறித்து கலந்தாலோசிக்க வேண்டும். ஜி.எஸ்.பி. பிளஸ் இருப்பதால் அமெரிக்க வரி அதிகரிப்பினால் சிக்கல் இல்லை என்று சிலர் கூறுகின்றனர்.

இவ்வாண்டுடன் ஜி.எஸ்.பி. பிளஸ் நிறைவடையப் போகிறது. ஐரோப்பிய பாராளுமன்றத்தில் ஜி.எஸ்.பி. பிளஸ் தொடர்பான புதிய முன்மொழிவுகள் (22ம் பக்கம் பார்க்க)

கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும்! நிபந்தனைகளைப் பின்பற்றா விட்டால் ஜி.எஸ்பி சலுகையை இழக்க நேரிடும் -ஐரோப்பிய ஒன்றியம்

ஜி.எஸ்.பி. பிளஸ் வரி சலுகை இலங்கைக்கு வேண்டுமானால் ஐரோப்பிய ஒன்றியம் முன் வைத்திருக்கிற நிபந்தனைகளை இலங்கை பின்பற்றியாக வேண்டும். இணக்கப்பாடுகளை நிறைவேற்றியாக வேண்டும். இல்லாவிடின், ஜி.எஸ்.பி. பிளஸ் வரி சலுகை இலங்கைக்கு கிடைக்காமல் போய் விடும் என்று இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் கார்மென் மொரினோ தெரிவித்தார்.

மேலும் ஜி.எஸ்.பி. பிளஸ் வரி சலுகை இலங்கையே ஐரோப்பிய ஒன்றியத்திடம் கேட்கிறது. எனவே, அந்த சலுகையை கேட்டால் அதற்கேற்றவாறு இலங்கை நடந்து கொள்ள வேண்டும். எங்களது நிபந்தனைகளை தளர்த்துமாறு இலங்கை எமக்கு கூற முடியாது.

அதேபோன்று ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு வழங்கியிருக்கின்ற சலுகையை இலங்கை முழுமையாக பயன்படுத்திக் கொள்ளவில்லை. அதனை முழுமையாக பயன்படுத்தினால் ஐரோப்பிய ஒன்றியத்துக்கான ஏற்றுமதியை இரண்டு மடங்காக அதிகரிக்க முடியும் என்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் சுட்டிக்காட்டினார்.

பாத்பைன்டர் நிறுவனத்தினால் கொழும்பில் 08 ஏப்ரல் 2025 ஏற்பாடு செய்யப்பட்ட ஐரோப்பிய ஒன்றிய தூதுவருடனான வட்டமேசை கலந்துரையாடலிலேயே அவர் இந்த விடயங்களை குறிப்பிட்டார்.

இலங்கைக்கு ஐரோப்பிய ஒன்றியம் வழங்கும் ஜி.எஸ்.பி. பிளஸ் வரி சலுகை அடுத்த வருடம் இறுதியுடன் நிறைவடைகிறது. மீண்டும் அதனை பெற்றுக் கொள்ள இலங்கை அதற்கு மீள் விண்ணப்பிக்க வேண்டும்.

மேலும், ஐரோப்பிய ஒன்றியம் 2027ஆம் ஆண்டிலிருந்து புதிய நிபந்தனைகளையும் விதிக்கவிருக்கிறது. சில தினங்களில் ஐரோப்பிய ஒன்றியத்தின் கண்காணிப்புக் குழு இலங்கைக்கு விஜயம் செய்து 27 நிபந்தனைகள் எவ்வாறு நிறைவேற்றப்படுகின்றன என்பது தொடர்பாக ஆராய்ந்து பார்க்கவிருக்கிறது. அந்த கண்காணிப்பின் பின்னரேயே இலங்கைக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் வரி சலுகையை மீண்டும் வழங்குவதா, இல்லையா என்பது தீர்மானிக்கப்படவிருக்கிறது.



அமெரிக்கா இலங்கைக்கு 44 வீத தீர்வையை விதித்திருக்கின்ற நிலையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்த ஜி.எஸ்.பி. பிளஸ் வரி சலுகையும் முடிவுக்கு வருமானால் இலங்கையை பாரிய நெருக்கடியை சந்திக்கும் என்று நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். இந்த பின்னணியிலேயே ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் இந்த விடயங்களை சுட்டிக் காட்டியிருக்கிறார்.

அரசாங்கம் உரையாடலைத் தொடங்க வேண்டும், தகவல்களை வழங்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். இன்னும் எதையும் செய்யவில்லை என்றால், ஏன்? என்ன தடைகள் உள்ளன என்பதனை கூறுங்கள். அதைச் செய்வதற்கான வழிமுறை என்ன? இந்த வகையான ஈடுபாட்டைத் தான் கேட்கிறோம். அனைத்து விடயங்களும் இன்று தீர்க்கப்பட வேண்டும் என்று நாம் கூறவில்லை. நிபந்தனைகள் சர்வதேச மரபுகளுக்கு இணங்கும் வகையில் உள்ளன. இப்போது 27 நிபந்தனைகள் உள்ளன. இன்னும் பல உள்ளீர்க்கப்படும்'' என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் குறிப்பிட்டார்.

இலங்கை ஐரோப்பிய ஒன்றியத்துக்கு கிட்டத்தட்ட 2.5 பில்லியன் டொலர்களுக்கு ஏற்றுமதி செய்கிறது. அதிகளவில் ஆடைகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதில் ஜி.எஸ்.பி வரிச் சலுகையினால் இலங்கை 66 வீத நிவாரணத்தை இலங்கை பெறுகிறது. ஐரோப்பிய ஒன்றியம் 27 நாடுகளைக் கொண்ட 450 மில்லியன் மக்கள் தொகையைக் கொண்ட ஒற்றை சந்தையாக காணப் படுகிறது. இந்த 27 நாடுகளுக்கும் ஓர் எல்லையின் ஊடாக பிரவேசிக்க முடி யும்.

ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு வழங்கியிருக்கின்ற ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையை இலங்கை முழுமையாக பயன்படுத்திக்கொள்ளவில்லை. அதனை முழுமையாக பயன்படுத்தினால் ஐரோப்பிய ஒன்றியத்துக்கான ஏற்றுமதியை இரண்டு மடங்காக அதிகரிக்க முடியும். இலங்கை தற்போது பிரான்ஸ், ஜேர்மன், ஸ்பெய்ன், பெல்ஜியம் போன்ற சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்கிறது. 27 நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யலாம். 27 நாடுகளும் ஒரு சந்தையாகும் என்றும் தூதுவர் குறிப்பிட்டார்.

மேலும் இம்மாதம் 20ஆம் திகதி ஐரோப்பிய ஒன்றியத்தின் கண்காணிப்புக் குழு இலங்கைக்கு விஜயம் செய்யும். அந்த குழு இலங்கையில் இருந்து கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும். அதன் பின்னர் இலங்கை 2026ஆம் ஆண்டில் ஜி.எஸ்.பி பிளஸ் சலுகைக்காக மீள் விண்ணப்பிக்க வேண்டும். புதிய விதிமுறைகளும் அதில் உள்ளடக்கப்படும். இது நாங்கள் வழங்குகின்ற ஒரு சலுகையாகும். எனவே அந்த சலுகையை பெற்றுக் கொள்ள வேண்டுமாயின், அதன் நிபந்தனைகள் நிறைவேற்றப்பட வேண்டும். எமது நிபந்தனைகளை தளர்த்துமாறு யாரும் கூற முடியாது.

சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தில் நிபந்தனைகளை தளர்த்துமாறு உங்களால் கூற முடியுமா? முடியாது. அதேபோன்று ஐரோப்பிய ஒன்றியத்தின் நிபந்தனைகளையும் தளர்த்துமாறு கூற முடியாது. உங்களுக்கு இந்த சலுகை வேண்டுமானால், நீங்கள் அதனை நிறைவேற்றியாக வேண்டும். நாங்கள் அரசாங்கத்துக்கு கூறுவது என்னவென்றால், தயவுசெய்து எங்களுடன் கலந்துரையாடல்களில் ஈடுபட்டு உங்களது விடயங்களை முன்வையுங்கள் என்பதாகும்.

முக்கியமாக பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குமாறு நாங்கள் தொடர்ந்து கூறி வருகிறோம். ஆனால், அரசாங்கம் அதனை நீக்கவில்லை. அந்த சட்டம் இன்னும் பயன்படுத்தப்படுகிறது. இதற்கு பதிலாக கடந்த அரசாங்கத்தில் உருவாக்கப்பட்ட புதிய சட்டமும் மிக மோசமானதாக இருக்கிறது. எந்த சட்டமும் சர்வதேச சட்டங்களை மரபுகளை பின்பற்றுவதாக அமைய வேண்டும் என்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் குறிப்பிட்டார்.

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் அதிகாரங்களை அரச அதிகாரிகள் துஷ்பிரயோகம் செய்கின்றனர் நீதியமைச்சருக்கு சர்வதேச மன்னிப்புச்சபை கடிதம்

இலங்கை அதிகாரிகள் விசாரணைகளுக்காக பயங்கரவாத தடைச்சட்டத்தின் பரந்த அதிகாரங்களை அதிகாரிகள் தற்போது நாடுகின்றார்கள் மற்றும் துஸ்பிரயோகம் செய்கின்றார்கள் என தெரிவித்துள்ள சர்வதேச மன்னிப்புச் சபை பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்துவதற்கு உடனடியாக தடைவிதிக்கவேண்டும், என வேண்டுகோள் விடுத்துள்ளது.

நீதியமைச்சர் ஹர்சன நாணயக்காரவிற்கு எழுதியுள்ள கடிதத்தில் சர்வதேச மன்னிப்புச்சபையின் தென்னாசியாவிற்கான பிராந்திய இயக்குநர் ஸ்மிரிதி சிங் இதனை தெரிவித்துள்ளார்

பயங்கரவாத தடைச் சட்டம் குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, சர்வதேச மன்னிப்புச்சபை பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கவேண்டியதன் அவசியம் குறித்து பல அறிக்கைகளை வெளியிட்டுள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டம் அரசாங்கத்தை கேள்வி கேட்பவர்கள் உடன்படமறுப்பவர்களிற்கு மீண்டும் மீண்டும் ஆயுதமாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

இந்த பயங்கரமான சட்டத்தை நீக்குவது குறித்து நீங்கள் உறுதிமொழி வழங்கிய போதிலும் அது தொடர்ந்தும் சட்டப்புத்தகத்தில் நீடிப்பது குறித்தும் , பயங்கரவாத செயல் அல்லாத குற்றங்கள் உட்பட பலவற்றிற்கு தொடர்ந்தும் பயன்படுத்தப்படுவது குறித்து அறிந்துள்ள நாங்கள் அது குறித்து ஏமாற்றமடைகின்றோம்.

சமீபத்தில் நீதிமன்றத்தில் இடம் பெற்ற கொலை தொடர்பில் கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேகநபர்கள் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்டுள்ள தடுப்புக்காவலின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இது பயங்கரவாத தடைச்சட்டத்தை தெளிவாக துஸ்பிரயோகம் செய்யும் நடவடிக்கை. இதற்கு அப்பால் இந்த அரசாங்கம் பதவிக்குவந்தது முதல் பல தடவை பயங்கரவாத தடைச்சட்டத்தின் அதிகாரங்கள் ஏற்பாடுகளை பயன்படுத்தியுள்ளது. 2024 ஒக்டோபர் முதல் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் ஆறு பேரை தடுப்புக்காவலில் வைப்பதற்கான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. மேலும் மார்ச் 2025 இல் 22 வயது இளைஞனை தடுத்து வைப்பதற்கும் பயங்கரவாத தடைச்சட்டத்தினை பயன்படுத்தியுள்ளனர்.

நாங்கள் அறிந்த வகையில் இவர்களிற்கு எதிராக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் எந்த குற்றச்சாட்டும் இதுவரை சுமத்தப்படவில்லை.

பயங்கரவாத குற்றங்கள் இடம்பெற்றன என்பதற்கான நியாயபூர்வமான சந்தேகங்கள் இல்லாத போதிலும் அதிகாரிகள் விசாரணைகளுக்காக பயங்கரவாத தடைச் சட்டத்தின் பரந்த அதிகாரங்களை அதிகாரிகள் தற்போது நாடுகின்றார்கள் மற்றும் துஸ்பிரயோகம் செய்கின்றார்கள் என்பது கவலைக்குரிய விடயம்.

புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் சர்வதேச தராதரங்களிற்கு ஏற்ப அமைந்திருப்பதையும் பயங்கரவாதத்தை எதிர்கொள்ளும் அதேவேளை மனித உரிமைகளை பாதுகாப்பதற்கான சமகால சிறந்த நடைமுறைகளை கொண்டுள்ளதையும் உறுதி செய்ய வேண்டும்.

பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்துவதற்கு உடனடியாக தடைவிதிக்க வேண்டும், தனிநபர்களை தடுத்து வைப்பதற்காக சட்டத்தின் பரந்துபட்ட அதிகாரங்களை பயன்படுத்துவதை நிறுத்துங்கள். பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதற்கான தெளிவான காலவரையறையை முன்வையுங்கள்.

# 14வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! ஏப்ரல் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள், அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

14 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

"தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

05 ஏப்ரல் 2025 - 11 ஏப்ரல் 2025 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

மேலதிக விபரங்களுக்கு:-

ஈழநாடு பரமேஸ் 416 841 9600

## 7வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தெய்வானைப்பிள்ளை முருகேசபிள்ளை

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி தெய்வானைப்பிள்ளை முருகேசபிள்ளை அவர்களுடைய ஏழாவது ஆண்டு நினைவு நாள் 29 மார்ச் 2025 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி தெய்வானைப்பிள்ளை முருகேசபிள்ளை அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த் திக்கின்றார்கள்.

## 15வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சின்னையா நல்லதம்பி

யாழ்ப்பாணம் இணுவிலைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சின்னையா நல்லதம்பி அவர்களுடைய 15வது ஆண்டு நினைவு நாள் 10 ஏப்ரல் 2025 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சின்னையா நல்லதம்பி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து செஞ்சோலை இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 7வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு குலசேகரம்பிள்ளை இராமலிங்கம்

புங்குடுதீவு 6ம்வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தை கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு குலசேகரம்பிள்ளை இராமலிங்கம் அவர்களது ஏழாவது ஆண்டு நினைவு நாள் 01 ஏப்ரல் 2025 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு குலசேகரம்பிள்ளை இராமலிங்கம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பசுபதிப்பிள்ளை சற்குணம்

புங்குடுதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சுவிஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பசுபதிப்பிள்ளை சற்குணம் அவர்களின் முதலாவது ஆண்டு நினைவு நாள் 30 மார்ச் 2025 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு, பாரதி, இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பசுபதிப்பிள்ளை சற்குணம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு, பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 3வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி சுப்பிரமணியம் நாகேஸ்வரி

புங்குடுதீவு 9ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த மகேஸ்வரி என்று அன்பாக அழைக்கப்படும் திருமதி சுப்பிரமணியம் நாகேஸ்வரி அவர்களின் மூன்றாவது ஆண்டு நினைவு நாள் 10 ஏப்ரல் 2025 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி, இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி சுப்பிரமணியம் நாகேஸ்வரி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 14வது ஆண்டு நினைவஞ்சலி




### திரு கனகசபை பரமநாதன்

வடலியடைப்பு பண்டத்தரிப்பைச் சேர்ந்த திரு கனகசபை பரமநாதன் அவர்களது 14வது ஆண்டு நினைவு நாள் 12 ஏப்ரல் 2025 சனிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு கனகசபை பரமநாதன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



29 மார்ச் 2025 சனிக்கிழமை புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி முருகேசபிள்ளை தெய்வானைப்பிள்ளை அவர்களது 7வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



29 மார்ச் 2025 சனிக்கிழமை வேலணையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருக்கும் சமூக சேவையாளரும் கனடா இலங்கை முன்னாள் வர்த்தகர் சங்கத்தின் மூத்த உறுப்பினருமான திரு கல்யாணசுந்தரன் குமாரசிங்கம் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு கல்யாணசுந்தரன் அவர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



30 மார்ச் 2025 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி ஸ்ரீகுமார் ரோகினிதேவி தம்பதிகளின் செல்வப்புதல்வன் அம்சயன் ஸ்ரீகுமாரின் 15வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் அம்சயன் தனது பெற்றோர்கள் சகோதரங்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



30 மார்ச் 2025 ஞாயிற்றுக்கிழமை புங்குடுதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சுவிஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பசுபதிப்பிள்ளை சற்குணம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



30 மார்ச் 2025 ஞாயிற்றுக்கிழமை புங்குடுதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சுவிஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பசுபதிப்பிள்ளை சற்குணம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



30 மார்ச் 2025 ஞாயிற்றுக்கிழமை கனடா Exevitive woodwork Ltd ஊழியர்கள் செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.



31 மார்ச் 2025 திங்கட்கிழமை அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சின்னத்துரை பத்மநாதன் அவர்களது ஆறாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள்



01 ஏப்ரல் 2025 செவ்வாய்க்கிழமை புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு குலசேகரம்பிள்ளை இராமலிங்கம் அவர்களது 7வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள்



01 ஏப்ரல் 2025 செவ்வாய்க்கிழமை கனடாவில் வாழும் திரு கிருஷ்ணபிள்ளை செல்வராஜா அவர்களது 65வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு கிருஷ்ணபிள்ளை செல்வராஜா அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



06 ஏப்ரல் 2025 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி இராமதாசன் விஜயஸ்ரீ தம்பதிகளுன் செல்வப்புதல்வி லக்ஷனாவின் பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி லக்ஷனா தனது பெற்றோர் உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவும் குளிர்பானமும் வழங்கி மகிழ்ந்தார்.



10 ஏப்ரல் 2025 வியாழக்கிழமை புங்குடுதீவு 9ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி சுப்பிரமணியம் நாகேஸ்வரி (மகேஸ்வரி) அவர்களது மூன்றாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள்



10 ஏப்ரல் 2025 வியாழக்கிழமை யாழ்ப்பாணம் இணுவிலைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சின்னையா நல்லதம்பி அவர்களது 15வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள்




11 ஏப்ரல் 2025 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திரவியம் பாலகுமாரன் (கண்ணன்) அவர்களது 50வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு பாலகுமாரன் அவர்கள் தனது மனைவி, பிள்ளைகள், பெற்றோர், நண்பர்களுடன் இணைந்து செஞ்சோலை இல்லக் குழந்தைகக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



11 ஏப்ரல் 2025 வெள்ளிக்கிழமை கனடா Exevitive woodwork Ltd ஊழியர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.



27 மார்ச் 2025 வியாழக்கிழமை அனலைதீவு 7ம் வட்டாரத்தைச் சேர்ந்த திரு கந்தையா சுப்பிரமணியம் அவர்களது 61வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்


APRIL
18&19
2025
TICKETS
$30 $50 VIP($100)
416-566-0790
RAMU
Playback Singer
TMS SELVAKUMAR
AKSHAYA SHIVKUMAR
Zee Tamil Singer
OLD IS GOLD
KARIS
EVENT PLACE
55 Nugget Ave unit 10,
Scarborough, ON M1S 4L4
AAROSAI
APRIL 18
ATCHATHRAA
MUSIC GROUP
APRIL 19



நாட்டுப்பற்றாளர் **திரு. மதிசூடி** நினைவரங்கத்தில்
உங்கள் அபிமான
**ஈழநாடு** பத்திரிகையின்

# 32 வது ஆண்டு விழா




SUNDAY
JUNE 01
2025

METROPOLITAN CENTRE
3840 FINCH AVE EAST
SCRBOROUGH ( FINCH/ KENNEDY)

தொடர்புகளுக்கு
ஈழநாடு
பரமேஸ்
416-841-9600
eelanadu1993@gmail.com



# போலி இந்துமத குரு எவ்வாறு பொலிவியாவின் பூர்வீக மக்களின் பெருமளவு நிலங்களை கைப்பற்ற முயல்கின்றார்?



தலைமறைவாக உள்ள இந்திய மதகுரு ஒருவர் தனக்கென ஒரு நாட்டை உருவாக்க முயல்கின்றார் அவரை பின்பற்றும் பலர் இலத்தீன் அமெரிக்காவின் பல நாடுகளில் புதிதாக தோன்றியுள்ளதுடன். ஈக்குவடோர் பராகுவே பொலிவியாவில் நிலங்களை கொள்வனவு செய்யும் நடவடிக்கைககளில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த வருடம் பொலிவியா அமேசனில் உள்ள பௌர் பழங்குடி இன மக்களின் பிரதி ஒருவர் அவர்களின் பரந்த மழைக் காடுகளில் 60.000 ஹெக்டரை குத்தகைக்கு எடுக்கும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார். கயுபா பழங்குடி இன பிரதிநியொருவரும் இதே போன்ற ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். வருடாந்தம் 55800 ஹெக்டயரை குத்தகைக்கு எடுத்தார். இந்த ஒப்பந்தங்கள் மூலம் இலாபம் சம்பாதித்த நாடு ஐக்கிய கைலாசா.

இது பழங்குடி இனமக்களிற்கு தன்னை ஒரு தேசமாக காட்டிக் கொண்டாலும். எந்த நாட்டாலும் இதுவரை அங்கீகரிக்கப்படவில்லை ஐநாவும் இதனை அங்கீகரிக்கவில்லை.

தனது ஆசிரமத்திற்காக குழந்தைகள் சிறுமிகளை கடத்தியதாகவும் பாலியல் துஸ்பிரயோகங்களில் ஈடுபட்டதாகவும். குற்றச்சாட்டுகளை எதிர்கொண்ட நிலையில் 2019ம் ஆண்டு இந்தியாவிலிருந்து தப்பிச் சென்ற. தன்னை தானே கடவுள் எனவும் இந்து மதத்தின் அதி உயர் மதகுரு அறிவித்துக் கொண்ட நித்தியானந்தாவே இந்த கற்பனை தேசத்தினை உருவாக்கினார்.

ஈக்குவடோர் பராகுவேயில் நிலங்களை கொள்வனவு செய்வதற்கு மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்த பின்னர் அமெரிக்காவின் நியுவார்க் என்ற நகரத்தை கொள்வனவு செய்வதற்கான உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட பின்னர் (அதிகாரிகள் கைலாசா என்ற நாடே இல்லை என்பதை அறிந்த பின்னர் கைவிடப்பட்டது) இந்த போலி நாடு பொலிவியாவை நோக்கி தனது கவனத்தை திருப்பியுள்ளது.

செப்டம்பர் நவம்பர் 2024ம் ஆண்டுகளிற்கு இடையில் கைலாசாவின் பிரதிநிதிகள் நாலு சுதேசிய மக்கள் சமூகத்தின் பிரதிநிதிகளுடன் உடன்படிக்கையில் கைசாத்திட்டுள்ளனர். நிலங்களை ஆயிரம் வருட குத்தகைக்கு எடுப்பது தொடர்பானதே இந்த உடன்படிக்கை.

அனைத்து கைலாசாவிற்கு சாதகமாக நடைபெற்றுக் கொண்டிருந்த ஒரு சூழ்நிலையில் பொலிவியாவின் எல்டெபர் கடந்த மாதம் இந்த மோசடியை அம்பலப்படுத்தியுள்ளது.

நான் முதன் முதலில் இது தொடர்பான ஒப்பந்தங்களை படித்த போது நான் கற்பனை செய்கின்றேன் என நினைத்தேன் என்கின்றார் இந்த உண்மையை அம்பலப்படுத்திய பத்திரிகையாளர் சில்வானாவிசென்டி. அவை மிகவும் பகுத்தறிவற்றவையாக மாயாஜால கதைகளை போல காணப்பட்டன என அவர் குறிப்பிடுகின்றார்.



கைலாச தொடர்பான ஒப்பந்தங்களை கார்டியன் பார்வையிட்டுள்ளது.' இந்த ஆவணங்களின்படி கைலாசா பெருமளவு நிலங்களை தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கும்.

# தமிழக தலைவர்கள் எவரும் தமிழில் கையெழுத்திடுவதில்லை தமிழக முதல்வரை கடுமையாகச் சாடிய இந்தியப் பிரதமர் மோடி!



தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலினை கடுமையாக விமர்சித்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி. தமிழக தலைவர்களிடமிருந்து பல கடிதங்களைப் பெற்றாலும். அவர்களில் எவரும் தமிழில் கையெழுத்திடுவதில்லை என்றும். அவர்கள் தங்கள் மொழியைப் பற்றி உண்மையிலேயே பெருமைப்படுவார்கள் என்றால். குறைந்த பட்சம் தமிழில் கையெழுத்திட வேண்டும் என்றும் கூறினார்.

ராம நவமியை முன்னிட்டு. தமிழ்நாட்டின் ராமேஸ்வரம் ரயில் நிலையத்திலிருந்து மண்டபம் ரயில் நிலையத்திற்கு செல்லும் வழியில் கடல் நடுவே புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள செங்குத்து தூக்கு ரயில் பாலத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

இது குறித்து மேலும் பேசிய இந்தியப் பிரதமர் மோடி தமிழ் மொழி மற்றும் தமிழ் பாரம்பரியம் உலகின் ஒவ்வொரு மூலையையும் சென்றடைவதை உறுதி செய்வதற்காக அரசாங்கம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

சில நேரங்களில் தமிழ்நாட்டின் சில தலைவர்களிடமிருந்து கடிதங்களைப் பெறும்போது நான் ஆச்சரியப்படுகிறேன் அவர்களில் யாரும் தமிழில் கையெழுத்திடுவதில்லை.

நாம் தமிழைப் பற்றி பெருமைப்படுகிறோம் என்றால். அனைவரும் குறைந்த பட்சம் தமிழில் கையெழுத்திட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன் என்றார்.

ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகள் பயனடையும் வகையில் தமிழ் மொழியில் மருத்துவப் படிப்புகளை அறிமுகப்படுத்த வேண்டும் என்றும் பிரதமர் தமிழக அரசை இதன் போது வலியுறுத்தினார்.

மத்திய பாஜக அரசு இந்தியை திணிக்க முயற்சிப்பதாக மாநில அரசு குற்றம் சாட்டியதால். மு.க. ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசும் மத்திய அரசும் கடுமையான வார்த்தைப் போரில் ஈடுபட்டுள்ளன.

புதிய கல்விக் கொள்கையின் (NEP) மும்மொழி சூத்திரம் அண்மைய முக்கிய அம்சமாகும். இந்த நடவடிக்கைகள் தமிழ் மொழி மற்றும் கலாச்சாரத்தை அச்சுறுத்துவதாக தமிழக மாநில அரசு குற்றம் சாட்டியுள்ளது.

இதற்கிடையில். பாம்பன் பாலம் திறப்பு விழா நிகழ்வை தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் புறக்கணித்தார்.

ஊட்டியில் நடைபெற்ற பேரணியில் உரையாற்றிய அவர். மக்கள் தொகை வளர்ச்சியை வெற்றி கரமாகக் கட்டுப்படுத்திய தமிழ்நாடு மற்றும் பிற மாநிலங்கள் வரவிருக்கும் எல்லை நிர்ணய நடவடிக்கையில் தண்டிக்கப்படாது என்றும். நாடாளுமன்ற இடங்களின் சதவீதத்தில் அவற்றின் பங்கு மாறாமல் இருக்கும் என்றும் பிரதமர் தெளிவான உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

### அ.தி.மு.க.- பா.ஜ.கட்சி இணைவு?

இது இவ்வாறிருக்க அ.தி.மு.க. பொதுச் செயலாளரும். தமிழக எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி டெல்லி சென்று மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவைச் சந்தித்தது அரசியல் வட்டாரத்தில் பேசு பொருளாகி இருந்தது. இதன் மூலம் அ.தி.மு.க. – பா.ஜ.க. கூட்டணி மீண்டும் ஏற்பட வாய்ப்புள்ளதாகப் பரபரப்பாகப் பேசப்பட்டது. அதே சமயம் கடந்த 2021ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற தேர்தலுக்குப் பின் அ.தி.மு.க., பா.ஜ.க. கூட்டணியில் இருந்து விலகுவதற்கு தற்போதைய தமிழக பா.ஜ.க. மாநில தலைவர் தான் காரணம் என அ.தி.மு.க. தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து பா.ஜ.க.வின் தற்போதைய மாநில தலைவரை மாற்ற வேண்டும் என்ற கோரிக்கையை எடப்பாடி பழனிசாமி. மத்திய அமைச்சர் அமித்ஷாவிடம் வைத்திருந்ததாகவும் தகவல்கள் வெளியாகி இருந்தது. அதனைத் தொடர்ந்து தமிழக பா.ஜ.க. தலைவர் மற்றும் நயினார் நாகேந்திரன் உள்ளிட்டோர் எடப்பாடி பழனிசாமி டெல்லி சென்றதற்கு அடுத்த நாளே டெல்லியில் முகாமிட்டனர். இதனால் தமிழக பா.ஜ.க. தலைவர் விரைவில் மாற்றப்படுவார் எனச் செய்திகள் வெளியாகி இருந்தது.

அதோடு பா.ஜ.க. அ.தி.மு.க. கூட்டணிக்கு வசதியாகத் தமிழக பா.ஜ.க.வுக்கு புதிய தலைவரை நியமிக்க வாய்ப்பு இருப்பதாகத் தகவல்கள் வெளியாகி இருந்தது. அடுத்த தமிழக பா.ஜ.க. தலைவருக்கான பட்டியலில் தமிழக பா.ஜ.க. முன்னாள் தலைவர் தமிழிசை சௌந்தரராஜன். கோவை தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வானதி சீனிவாசன். பா.ஜ.க. சட்டமன்ற குழுத் தலைவரும். அக்கட்சியின் மாநில துணைத்தலைவரான நயினார் நாகேந்திரன் ஆகியோர் உள்ளதாகக் கூறப்படுகிறது.




# கைபேசிச் சாட்சி!

முல்லைத்தீவு, சின்னசாளம்பன் கிராமத்தில் ஓர் ஆண் ஒரு பெண்ணைக் கதறக் கதற அடிக்கிறார். அதை ஒருவர் கைபேசியில் படம் பிடிக்கிறார்.அக்காட்சி சமூகவலைத் தளங்களில் அதிகமாகப் பகிரப்பட்டது. விளைவாக போலீசார் அந்த நபருக்கு எதிராக நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்.

சமூகவலைத் தளங்கள் எந்தளவுக்கு இது போன்ற விடயங்களில் வினைத்திறனோடு செயல்பட முடியும் என்பதற்குத் தமிழ்ச் சமூகத்தில் இது ஆகப் பிந்திய எடுத்துக்காட்டு. இதுபோன்று சிறுவர்களைத் தாக்கும் காட்சிகள், முதியவர்களைத் தாக்கும் காட்சிகள் இடைக்கிடை சமூகவலைத் தளங்களில் யாராலாவது பகிரப்படும். பெரும்பாலும் அவற்றுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும். இது ஒரு நல்ல போக்கு. அதே சமயம் இந்த போக்குக்கு பின்னால் உள்ள உளவியலையும் சற்று ஆழமாக ஆராய வேண்டும்.

பல ஆண்டுகளுக்கு முன்பு ஒரு சிங்கள ஊடகவியலாளர் கொழும்பு டெலிகிராப் இணையதளத்தில் எழுதியிருந்தார் மனிதன் இப்பொழுது நடமாடும் கமராவாக மாறி விட்டான் என்று. அது உண்மை. இது போன்ற அக்கிரமங்கள் நிகழும் போது மட்டுமல்ல ஒரு இனத்துக்கு எதிரான இன அழிப்புப் போரையும் கைபேசிக் கமராக்கள் வெளியே கொண்டு வருகின்றன.வேறு எங்குமல்ல. இலங்கையில் தான்.

முள்ளிவாய்க்காலில் இறுதிக் கட்டப் போரில் தமிழ்க் கமராக்கள் மிகச் சில தான் இருந்தன. அவை படையினரின் பகுதிக்குள் போக முடியாத கமராக்கள். அவை தவிர செய்மதிக் கமராக்கள் இருந்தன. எனினும் சனல் நாலு போன்ற ஊடகங்களில் வெளிவந்த சான்றுகளில் பல தமிழ்க் கமராக்களால் பிடிக்கப்பட்டவை அல்ல. அவை அதிகமாக படைத்தரப்பினரின் கமராக்களால் கைப்பற்றப்பட்ட காட்சிகள். வெற்றிக் களிப்பில் தன்னிலை மறந்து தற்காப்பு உணர்வை இழந்து அந்த குற்றச் செயல்களை புரிந்த படைத்தரப்பே படம் பிடித்த காட்சிகள்.

அதனால் நாடு இப்பொழுது ஐநாவில் குற்றவாளிக் கூண்டில் நிற்கின்றது. அப்போரை வழி நடத்திய தளபதிகளுக்கு எதிராக இது வரையிலும் மூன்று நாடுகள் தடைகளை அறிவித்துள்ளன. அண்மையில் பிரித்தானியா நான்கு பேருக்கு எதிராகத் தடைகளை அறிவித்தது. இப்படிப் பார்த்தால் தன் சொந்தக் கைபேசிகளால் காட்டிக் கொடுக்கப்பட்ட ஒரு நாடு இலங்கை எனலாம்.

அமெரிக்காவில் 2020இல் ஒரு கைபேசிக் கமராவில் படம் பிடிக்கப்பட்ட கொலைக் காட்சி கொல்லப்பட்ட கறுப்பினத்தவருக்கு நீதியைப் பெற்றுக் கொடுத்தது. ஒரு கறுப்பினத்தவரை அமெரிக்கப் போலீசார் நிலத்தில் குப்புறக் கிடத்தி கழுத்தில் முழங்காலை வைத்து நெரித்துக் கொல்லும் காட்சியை அந்த இடத்தில் நின்ற Darnella Frazier-lhu;neyா ஃப்ரேசியர் என்ற 17 வயதுடைய பெண் படம் பிடித்தார்.

அந்தக் காணொளி அமெரிக்கா முழுவதும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. அந்தக் காணொளிக்காக டார்நெலா ஃப்ரேசியர் புலிஸ்டர் விருது பெற்றார்.

எனவே தம் கண் முன்னே நிகழும் அநீதிகளை, அக்கிரமங்களை படம் பிடிக்கும் கமராக்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை பெற்றுக் கொடுப்பவை என்ற பொருளில் போற்றுதலுக்குரியவை. அதேசமயம் அந்தக் கமராக்களுக்கு பின்னால் உள்ள உளவியல் தொடர்பில் வேறு ஒரு வாசிப்பும் வாதப்பிரதிவாதங்களும் உண்டு.உலகப் பரப்பில் முக்கியமாக இரண்டு சம்பவங்கள் தொடர்பாக அவ்வாறான வாதப்பிரதிவாதங்கள் அதிகம் நிகழ்ந்தன.

முதலாவது சம்பவம் வியட்நாமில் 1972ல் இடம் பெற்றது.அங்கே அமெரிக்கக் குண்டு வீச்சு விமானங்கள் ஒரு கிராமத்தின் மீது தீக்குண்டுகளை வீசின. அக்குண்டுகளால் பற்றி எரிந்த கிராமத்திலிருந்து Phan Thi Kim Phuc -பான் தி கிம் என்ற சிறுமி நிர்வாணமாக ஓடி வருகிறார். அதை அசோசியேட்டட் பிரஸ் நிறுவனத்தைச் சேர்ந்த Nick Ut — நிக் உட் படம் பிடிக்கிறார். அந்தப் படம் உலகப் புகழ் பெற்றது. அது பின்னாளில் பல விருதுகளை வென்றது. வியட்நாமில் அமெரிக்கா நிகழ்த்திய ஆக்கிரமிப்புப் போருக்கு எதிராக ஒரு சான்றாக அது என்றென்றும் நிலைத்து நிற்கின்றது. அதே சமயம் அதில் சம்பந்தப்பட்ட சிறுமி பின்னாளில் ஐநாவின் சமாதானத்துக்கான தூதுவர்களில் ஒருவராக கௌரவிக்கப்பட்டார். இது முதலாவது சம்பவம்.

இரண்டாவது சம்பவம் சோமாலியாவில் 1993இல் நிகழ்ந்தது. அங்கே பஞ்சத்தால் மெலிந்து எலும்புக் கூடாகிய ஒரு சிறுவன் ஐநாவின் நிவாரண மையம் ஒன்றை நோக்கி நடக்கச் சக்தி இல்லாமல் தவழ்ந்து போகிறான். அவன் எப்பொழுது இறப்பான், அந்த உடலை எப்பொழுது தூக்கிக் கொண்டு போகலாம் என்று ஆர்வத்தோடு அருகே ஒரு பிணந்தின்னிக் கழுகு காத்துக் கொண்டிருக்கிறது. இந்தக் காட்சியை. கெவின் கார்ட்டர் -kevin Carter என்ற ஒளிப்படக் கலைஞர் படம் எடுத்தார். சோமாலியாவின் பஞ்சத்தை அந்தளவுக்கு வேறு யாரும் ஒளிப்படமாக வெளியே கொண்டு வரவில்லை. அந்தப் படத்துக்கும் புலிஸ்டர் விருது கிடைத்தது.

இந்த இரண்டு சம்பவங்களும் கைபேசி காலத்துக்கு முந்தியவை. அந்த இரண்டு சம்பவங்களின் மீதும் அறம் சார்ந்த ஒரு விவாதம் நடந்தது. என்னவெனில், வியட்நாமில் தீக்காயங்களோடு ஓடி வந்த அந்த சிறுமியை காப்பாற்றாமல் அந்த ஊடகவியலாளர் படம் எடுப்பதில் கவனமாக இருந்தது ஒரு மனிதாபிமானப் பிரச்சினையாக விவாதிக்கப்பட்டது. அதுபோலவே சோமாலியாவிலும் பிணந்தின்னிக் கழுகு ஆர்வத்தோடு பார்த்துக் கொண்டிருந்த அந்தச் சிறுவனின் பசிக்கு உணவைக் கொடுக்காமல், பிணந்தின்னிக் கழுகைத் துரத்தாமல், நிதானமாக அதைப் படம் எடுத்த அந்த ஒளிப்படக் கலைஞரின் மனிதாபிமானம் பற்றிய கேள்வி.

இந்த இரண்டு கேள்விகளிலும் நியாயம் உண்டு. ஆனால் கமராவை ஃபோகஸ் செய்வது ஒரு தேர்ந்த கலைஞருக்கு பல நிமிட வேலை அல்ல. அவர் அதனை மிகக் குறுகிய காலத்துக்குள் செய்து விடுவார். எனவே ஒளிப்படம் எடுப்பதில் செலவழித்த நேரத்தில் அந்தச் சிறு பிள்ளைகளுக்கு நிவாரணம் வழங்கியிருக்கலாம் என்ற விவாதம் ஏற்புடையது அல்ல. அதைவிட முக்கியமான வாதம் என்னவென்றால், அந்தப் படங்கள் தான் அந்தப் பிள்ளைகளுக்கும் அவர்கள் சார்ந்த சமூகத்துக்கும் நீதியை நிவாரணத்தைப் பெற்றுக் கொடுக்க உதவிய சான்றுகளாகும். அந்த இடத்தில் ஒளிப்படக் கலைஞரின் தொழில் சார்ந்த தர்மம் என்று பார்க்கும் பொழுது அவர் அந்த படங்களை எடுத்தது சரி. அந்தப் படங்களை எடுத்த பின் அவர் அந்தச் சிறு பிள்ளைகளுக்கு உதவியிருக்கலாம். எனினும் இதில் இரண்டாவது சம்பவத்தில் சம்பந்தப்பட்ட ஒளிப்படக் கலைஞர் குற்ற உணர்ச்சியால் புலிஸ்டர் விருது கிடைத்த நான்கு மாதங்களில் தற்கொலை செய்து கொண்டதாக ஒரு தகவல் உண்டு.அவர் குற்ற உணர்ச்சியால் தற்கொலை செய்தாரா இல்லையா என்பதனை உறுதிப்படுத்த வேண்டும்.

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -



மேற்கூறிய இரண்டு சம்பவங்களையும் இப்பொழுது இக்கட்டுரையில் தொடக்கத்தில் கூறப்பட்ட சம்பவங்களோடு பொருத்திப் பார்க்கலாம். மூர்க்கமாகத் தாக்கப்படும் ஒரு பெண்ணைக் காப்பாற்றாமல் அந்தக் காட்சியைப் படம் பிடித்துக் கொண்டிருந்தது சரியா என்ற கேள்வி சமூக வலைத்தளங்களில் எழுப்பப்படுகிறது. ஆனால் யாரோ ஒருவர் அதைப் படம் எடுத்ததால்தான் அந்தப் பெண்ணுக்கு நீதி கிடைத்திருக்கிறது.

படம் எடுப்பதும் அந்த அக்கிரமம் தொடர்பாக சமூகவலைத் தளங்களில் எழுதுவதும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை பெற்றுக் கொடுப்பதற்கு ஏதோ ஒரு விகிதமளவுக்கு உதவுகின்றன. அதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.அதே சமயம் அது சமூக வலைத்தள உளவியலையும் பிரதிபலிக்கின்றது. படம் எடுப்பதோடும் அது தொடர்பாக சமூக வலைத் தளங்களில் பகிர்வதோடும் தமது பொறுப்பு முடிந்து விட்டது என்று கருதும் ஒரு மனோநிலை.

ஆனால் எல்லாச் சமூகங்களிலும் ஒரு பகுதியினர் அப்படித் தான் இருப்பார்கள். அவர்களால் முடிந்த நற்செயல் அவ்வளவு தான். அதைக் குறை சொல்லிக் கொண்டிருக்க முடியாது. ஒரு சமூகத்தில் இருக்கும் எல்லாருமே சிறுமை கண்டு பொங்கும் போராளிகளாக இருப்பதில்லை. அதிகமானவர்கள் வாயால் பொங்கும் போராளிகள் தான். பொதுவாக மனிதர்கள் தியாகம் செய்யாமல் எப்படி மற்றவர்களுக்கு உதவலாம் என்றுதான் சிந்திப்பார்கள். இங்கு ஒரு கூர்மையான உதாரணத்தைச் சொல்லலாம். மோட்டார் சைக்கிள் ஓடும் பொழுது கவலையீனமாக ஸ்டாண்டைத் தட்ட மறந்தால் எதிர்ப்படும் யாராவது ஒருவர் ஏதோ ஒரு சமிக்ஞையைக் காட்டி ஸ்டாண்ட் தட்டப்படவில்லை (22ம் பக்கம் பார்க்க)

# பிட்டுக்கு மண் சுமந்த பெருமானார்

கட்டுரையாளர்
அழகு குணசீலன்

சிவபெருமான் பிட்டுக்கு மண் சுமந்த கதை நாம் எல்லோரும் அறிந்ததும், தெரிந்ததும் தான். ஆனாலும் அமெரிக்க ஜனாதிபதியின் புதிய சுங்கவரிக் கொள்(கை)ளையானது உலகம் முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ள இன்றைய சூழலில் அது நினைவுக்கு வருகிறது.

சிவபெருமானுக்கு விழுந்த பிரம்படி அவரைத் தவிர்த்து எல்லா மக்களுக்கும் விழுந்ததாம். அதுவும் தாயின் கருவறையில் இருந்த குழந்தைகளுக்கும் அதன் தழும்பு இருந்ததாம் என்று அந்த கதை பேசுகிறது. அதுபோல் தான் அமெரிக்க ஆட்சியாளர்களின் அரசியல், பொருளாதார கொள்கைகளின் தவறான அணுகுமுறைகள் அமெரிக்காவின் இன்றைய நிலைக்கு காரணமாகிறது. அதற்கான தண்டனையை ட்ரம்ப் உலக நாடுகளுக்கும், மக்களுக்கும், அவர்களின் அடுத்த சந்ததிக்கும் வழங்கியிருக்கிறார்.

உலக மயமாக்கல் சர்வதேச வர்த்தகத்தின் அடிப்படை தாற்பரியமே ஒவ்வொரு நாடுகளும் தனக்கு வாய்ப்பான பொருட்களை மிகையாக உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்வதும், வாய்ப்பு குறைவான பொருட்களை மற்றைய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதுமாகும். இங்கு ஏற்றுமதி வருமானத்திற்கும், இறக்குமதி செலவுகளுக்கும் இடையில் ஒரு சமநிலையை (ஏற்றுமதி வருமானம் — இறக்குமதி செலவு பூச்சியம்) எதிர்பார்க்க முடியாது. எல்லா நாடுகளிலுமே இது ஒரு பற்றாக்குறை வெளிநாட்டு வர்த்தக மீதியை ஏற்படுத்துகிறது. சிலவேளைகளில் இரு நாடுகளுக்கு இடையிலான வர்த்தக மீதி மிகையாக இருந்தாலும் ஒட்டு மொத்த சர்வதேச வர்த்தக மீதி மிகையாக இருப்பதற்கான வாய்ப்புகள் குறைவானவை.

சர்வதேச வர்த்தக மீதி அமெரிக்காவுக்கு சாதகமாக அமையவேண்டும் என்று, ஜனாதிபதி ட்ரம்ப் அரசாங்கம் எதிர்பார்த்தால் அமெரிக்கா கட்டற்ற வர்த்தக, தாராள திறந்த பொருளாதார, உலகமயமாக்கல் வெளிநாட்டு வர்த்தக முதலாளித்துவ கொள்கையில் இருந்து விலகி சமவுடமை கொள்கை பேசுகின்ற கட்டுப்பாடான, மூடப்பட்ட பொருளாதார வர்த்தக கொள்கை பற்றி சிந்திக்க வேண்டும். அதை விடுத்து ஒரு பக்க நியாயத்துடனும், தன்நிலை சார்ந்தும் சர்வதேச நாடுகளின் மீது தனது சுமையை சுமத்த முயல்வது பரஸ்பர இருதரப்பு வர்த்தக நன்மைகளை ஒரு தலைப்பட்சமாக நிராகரிக்கும் இராணுவ, பொருளாதார அதிகார மேலாதிக்கத்தின் வெளிப்பாடாகும்.

உண்மையில் அமெரிக்காவின் உலக மயமாக்கல் அரசியல், பொருளாதார இராஜதந்திரத்தின் சர்வதேச தோல்வியாகவே இதனைக் கொள்ள முடியும். முதலாளித்துவ உலகிற்கு தலைமை தாங்குகின்ற அமெரிக்க பொருளாதாரத்திற்கு உலகமயமாக்கம் பெற்றுக் கொடுத்துள்ள தோல்வி. இது முதலாளித்துவ பொருளாதார கட்டமைப்பின் தோல்வி. இது ஒன்றும் புதியதல்ல.

மார்க்சிய சிந்தனையாளர்களின் கருத்துக்கள், கோட்பாடுகளின் படி முதலாளித்துவத்தில் காலத்திற்கு காலம் இந்த பொருளாதார ஸ்திரமின்மை தவிர்க்க முடியாதது. அப்படி விழும்போது முதலாளித்துவம் மீண்டெழுவதற்கான வழிகளை சோஷலிச கோட்பாடுகளுக்குள் தேடுகிறது. இதையே ட்ரம்ப் இப்போது செய்துள்ளார்.


இந்த தோல்வி சர்வதேச பொலிஸ்காரனாக அமெரிக்கா உலகம் முழுவதும் அரசியல், பொருளாதார காரணங்களுக்காக இறைமை கொண்ட அரசியல் தேசங்கள் மீது பல்வேறு சாட்டுக்களை கூறி மேற்கொண்ட ஆக்கிரமிப்பு யுத்தங்களின் விளைவாகும். சுய பொருளாதார நலன்கள் சார்ந்தும், அரசியல் எதிர் நிலை சார்ந்தும் அமெரிக்கா கடந்த காலங்களில் யுத்தத்திற்கு விரயமாக்கிய தேசிய வளங்களின் ஒட்டு மொத்த பிரதிபலிப்பு இது. ஆனால் டொனால்ட் ட்ரம்ப் அதுபற்றி பேசாது மற்றைய நாடுகள் மீது பழியையும், சுமையையும் சுமத்தி அமெரிக்க திறைசேரியை நிரப்பப் பார்க்கிறார். அமெரிக்காவின் இந்த புதிய சுங்கவரிக் கொள்கையினால் கைத்தொழில், தொழில் நுட்பத்தில் வளர்ச்சி அடைந்த நாடுகள் கூட திகைத்து நிற்கின்ற நிலையில் இலங்கை போன்ற சிறிய, பொருளாதார பலம் அற்ற, பொருளாதார மந்த நிலையில் உள்ள நாடுகள் இந்த வரியை செலுத்தி சர்வதேச வர்த்தக நிலுவையை ஆகக் குறைந்த பட்சம் சமநிலையிலாவது வைத்துக் கொள்வது ஒன்றும் இலகுவானதல்ல.

இதில் கவனிக்கத்தக்க முக்கிய பொருளாதார– அரசியல் செய்தி என்னவெனில் அமெரிக்கா கடந்த காலங்களில் யாரை எல்லாம் பரம எதிரிகளாக பிரகடனம் செய்து செயற்பட்டதோ அவர்களுக்கு வரியில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. ரஷ்யா, வடகொரியா, பெலாருஷ், கியூபா என்பன இதில் அடங்குகின்றன.

மாறாக உக்ரைன் உள்ளிட்ட, அமெரிக்காவினாலும், பின்னால் போன நேசசக்திகளாலும் அழிக்கப்பட்ட அரசியல், பொருளாதார சமூக அழிவுகளுக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை. வரிவிலக்கு அளிக்கப்பட்ட நாடுகளுக்கு ஏற்கனவேயுள்ள பொருளாதாரத் தடைகளை காரணம் காட்டுகிறது வெள்ளைமாளிகை. ஆனால் இந்தத் தடைகள் இதுவரை சாதித்தது என்ன? ஒரு வகையில் மற்றைய அப்பாவி நாடுகளுக்கான இந்த வரிவிதிப்பை மறைமுகமான ஏற்றுமதி வர்த்தக பொருளாதார தடையாகவே பார்க்கவேண்டியும் உள்ளது. இதில் அமெரிக்கா வெல்லுமா? உலகம் வெல்லுமா என்பதற்கு பதில்காண குறைந்தது ஒன்றரை ஆண்டுகள் காத்திருக்க வேண்டும் என்கிறார்கள் சர்வதேச பொருளியலாளர்கள். ஆனால் வரிவிதிப்பை மீளாய்வு செய்ய தயார் என்று ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

அமெரிக்காவின் புதிய சுங்க வரியில் ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றங்களை சில தெரிவு செய்யப்பட்ட நாடுகளை இலங்கையுடன் ஒப்பிட்டு நோக்கமுடியும்.

America First- America Great என்ற சுலோகங்களுடன் ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரங்களை ஆரம்பித்த டொனால்ட் ட்ரம்ப் சுங்கவரிக் கொள்கையில் பாரிய மாற்றம் ஒன்றை செய்ய இருப்பதாக வாக்காளர்களுக்கு அறிவித்திருந்தார்.




அதன்படி ஏப்ரல் 5, 2025இல் அறிவிக்கப்பட்ட வரி மாற்றங்கள் ஏப்ரல் 9, 2025 இல் அமுலுக்கு வருகிறது. அப்போது இருந்தே பொருளாதார தந்திரோபாயங்களை ஆராய்ந்த சீனா, இந்தியா, போன்ற பிராந்திய நாடுகள் இருக்கின்றன. ஆனால் இது பற்றி அலட்டிக் கொள்ளாது கொழும்பில் அமெரிக்க தூதுவருக்கு கட்சி காரியாலய கதவுகளை திறந்து விட்டு ஜே.வி.பி. உள்ளிட்ட அரசியல் கட்சிகள் அமெரிக்காவுக்கு முதுகு சொறிந்தார்கள். கொழும்பு முதுகு சொறிந்த வேளை வாஷிங்டன் வரிக்கணக்கை கச்சிதமாக பார்த்து முடித்திருந்தது.

இது அமெரிக்காவின் பொருளாதார சுதந்திர பிரகடனம். அமெரிக்க சர்வதேச கைத்தொழில் வர்த்தகத்தின் மறுபிறப்பு. அமெரிக்காவின் தேறிய வர்த்தக சமநிலையைப்பேணவும், அமெரிக்க வேலைவாய்ப்புக்களையும், உற்பத்திகளையும் பாதுகாக்கவும் இது அவசியம். இறக்குமதி வரியில் இருந்து, தப்ப வேண்டுமானால் உங்கள் முதலீடுகளை அமெரிக்காவுக்கு நகர்த்தி உற்பத்தி செய்யுங்கள். நாளை நாடுகளின் தலைவர்கள், பிரதமர்கள், மன்னர்கள்எனக்கு ரெலிபோன் பண்ணி வரியை குறைக்க கோருவார்கள். அவர்களுக்கு முதலில் உங்கள் வரிகளை குறையுங்கள் என்று கூறுவது தான் எனது பதிலாக இருக்கும் என்று கூடியிருந்தவர்களின் கைதட்டல்களுக்கு மத்தியில் தனது வழக்கமான பாணியில் கூறினார் ஜனாதிபதி ட்ரம்ப்.

அவர் சுயமாக என்ன கற்பிதத்தைக் கொண்டிருந்தாலும் முதலாளித்துவ உலகமயமாக்கம் அமெரிக்க பொருளாதாரத்தில் ஏற்படுத்திய தங்கியிருத்தலையும், அதை மீட்டெடுப்பதையுமே பொருளாதார விடுதலை, பொருளாதார மீளுருவாக்கம் பற்றி பேசுகிறார் என்பது வெளிப்படை. ஒரு வகையில் இந்த வரிக்கொள்கையை நவகாலனித்துவத்தின் சட்டரீதியான ஒரு சுரண்டல், பொருளாதார வன்முறை என்றும் கூறமுடியும்.

எமக்கு இருக்கின்ற இன்றைய கேள்வி, இலங்கையின் இன்றைய பொருளாதார சூழலில் இடதுசாரி சிவப்பு போர்வையை போர்த்தி உள்ள என்.பி.பி.- ஜே.வி.பி. அரசாங்கம் அமெரிக்காவுக்கு வழங்கப்போகின்ற பதில் என்ன என்பது தான். அதிகமான உலக நாடுகளின் ரியக்ஷன் காலில் விழுவதாகவே இருக்கப்போகிறது. ஆனால் இது சாமிக்கு சாமரை வீசி கோபத்தை குறைக்க உதவுமா? அப்படி நடந்தால் அது அவருக்கு அமெரிக்க அரசியலில் ஒரு பெரும் பின்னடைவாக அமையும். மறுபக்கத்தில் உள்ள மாற்றுவழி திருப்பியடித்தல் இதை இலங்கை போன்ற சிறிய நாடுகளால் தனித்து நின்று செய்யமுடியாது. ஐரோப்பிய ஒன்றியம், சீனா, இந்தியா, மெக்சிகோ, ஜப்பான் போன்றவை முதலில் இராஜதந்திர பேச்சுக்கள், இல்லையேல் எதிர் நடவடிக்கை என்று திரைமறைவில் திட்டமிடுகின்றன. ஆனால் எதிர் நடவடிக்கை ஒன்றை எடுப்பதற்கு முன்னர் இணைந்த செயற்பாட்டிற்கான ஒரு கூட்டும், இணக்கப்பாடும் தேவையாகிறது. இந்த மாற்று வழிக்கு அமைப்பு மாற்றம் பேசி ஆட்சிக்கு வந்த அநுர குமார திசாநாயக்கவின் அரசாங்கத்தின் காய்நகர்வுகள் எவ்வாறு அமையப் போகின்றன.?

இலங்கை அமெரிக்க ஏற்றுமதிகளுக்கான மாற்றுச்சந்தைகளை தேட வேண்டும். அதேவேளை சமாந்தரமாக அமெரிக்க இறக்குமதிகளுக்கான மாற்றையும் கண்டறிய வேண்டும். இதை தனித்து ஓடாது இந்தியா, சீனா, ஜப்பான், வியட்நாம், வங்காள தேசம் போன்ற பிராந்தியநாடுகளிலும், ஐரோப்பிய ஒன்றியத்திலும், மத்திய கிழக்கிலும் தேட வேண்டும். இங்கு முக்கியமானது அமெரிக்காவுக்கான பிரதான ஏற்றுமதியாக இருக்கின்ற ஆடைகள் ஏற்றுமதி. ஆடைகளை வங்காளதேசம், இந்தியா, வியட்நாம் என்பனவும் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்கின்றன. இதன்படி அமெரிக்க — இலங்கை வர்த்தக நிலுவைத் சுட்டெண் 88. அதாவது வரி வீதம் 44. வங்காளதேசம் (37வீதம்) இந்தியாவுக்கு (26 வீதம்) விதிக்கப்பட்டிருப்பதை விடவும் அதிகமானது.

இது இலங்கையின் ஆடைகளின் விலையை அமெரிக்க சந்தையில் உயர்த்தும். சந்தை விலை அதிகரிக்கும். இந்த நிலையில் அமெரிக்கர்களுக்கு இந்திய ஆடைகள் மலிவாக அமைவதால் அதற்கான சந்தை வாய்ப்பு அதிகமாக அமையப் போகிறது. இந்த சவாலை வங்காளதேசமும், இலங்கையும் எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றன? இலங்கை -இந்திய கூட்டு பொருளாதார ஒத்துழைப்பு மூலம் இலங்கை பொருட்களை இந்திய லேபலில் ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புகள் ஆராயப்பட வேண்டும்.

அமெரிக்காவுக்கான இலங்கை ஆடைகளின் ஏற்றுமதி 23 வீதமாக இருக்கிறது. இலங்கை 2022 இல் அமெரிக்காவுக்கு 3.4 பில்லின் டொலர் பெறுமதியான பொருட்களை ஏற்றுமதி செய்துள்ள போது அமெரிக்காவில் இருந்து 337 மில்லியன் பெறுமதியான பொருட்களையே இறக்குமதி செய்துள்ளது. இதுவே ட்ரம்பின் தலையில் பித்தத்தை ஏற்றிய விடயம். இதையே சுட்டெண் 88 பிரதிபலிக்கிறது.

அமெரிக்காவில் இருந்து இலங்கை அதிகமாக சோயாமாவு, மற்றும் மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்கிறது. இவற்றில் கடந்த ஐந்து ஆண்டுகளில் 7.5 வீத அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இலங்கை இவற்றை அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யவேண்டும் என்ற கட்டாயம் இல்லை என்றால் இவற்றை இந்தியா, சீனா, மற்றும் தென்கிழக்காசியாவில் இருந்து இறக்குமதி செய்யமுடியும். உள்நாட்டிலும் சோயா பயிர்ச்செய்கை ஊக்குவிக்கப்படவேண்டும். இந்த சந்தர்ப்பத்தை இலங்கை ஏற்றுமதிகளை இந்த நாடுகளுக்கு பன்முகப்படுத்தவும் இலங்கை முயற்சிக்க முடியும். அமெரிக்கா வரி அதிகரிப்பை தனக்கு தேவையான முக்கிய பொருட்களின் இறக்குமதிக்கு தவிர்த்திருக்கிறது. முக்கியமாக மருந்து பொருட்கள் இதனால் அதிகமான நன்மையை இந்தியா, சுவிட்சர்லாந்து என்பன அடைகின்றன.

மற்றைய நாடுகளைப் போன்று அமெரிக்காவுக்கு எதிர் நடவடிக்கை (29ம் பக்கம் பார்க்க)

# இது விதியின் திருப்பம் அல்ல! அரசியல் விதியின் யதார்த்தம்!

இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி நான்காவது தடவையாக இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார். இதன் போது பல புதிய உடன்பாடுகள் கைச்சாத்திடப்பட்டன. பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாடும் இதில் ஒன்று. நீண்டகாலமாக இழுபறி நிலையில் இருந்த திருகோணமலை, சம்பூர் சூரிய மின்கலத் திட்டத்தை இரு நாட்டுத் தலைவர்களும் அங்குராப்பணம் செய்து வைத்திருக்கின்றனர்.

ஜே.வி.பியின் தலைமையிலான ஆட்சியில் இந்தியாவுடன் பாதுகாப்பு உடன்பாடு செய்து கொள்வதை குமார் குணரத்தினம், ஒரு குற்றமாக சுட்டிக் காட்டியிருக்கின்றார்.

குணரத்தினம் ஜே.வி.பின் முன்னைநாள் மத்திய குழு உறுப்பினர். பின்னர் ஜே.வி.பியிலிருந்து வெளியேறிய அவர் தற்போது முன்னிலை சோசலிசக் கட்சி என்னும் அடையாளத்துடன் இயங்கி வருகின்றார்.

ஜே.வி.பியின் முதலாவது கிளர்ச்சி 1971, ஏப்பிரல். 5ம் திகதி இடம் பெற்றது. அதே திகதியில் தான் இந்தியாவுடன் பாதுகாப்பு உடன்பாடும் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இதனை விதியின் திருப்பம் என்று குமார் குணரட்டணம் குறிப்பிட்டிருக்கின்றார்.

ஜே.வி.பி சோசலிசப் பாதையில் பயணிக்கவில்லை மாறி விட்டது சோசலிசத்தின் மீது நம்பிக்கை கொண்டிருக்கும் உண்மையான ஜே.வி.பி உறுப்பினர்கள் அமைதியாக இருக்கக் கூடாது என்றும் குணரட்ணம் குறிப்பிட்டிருக்கின்றார்.

ஜே.வி.பியின் கிளர்ச்சி இடம் பெற்ற அதே திகதியில் இந்திய பிரதமரின் பயணத்தை ஜே.வி.பி விரும்பியதா அல்லது இது ஒரு தற்செயல் நிகழ்வா? எதுவாகவும் இருக்கலாம் ஆனால் இப்போது அது ஒரு பிரச்சினையில்லை.

ஜே.வி.பியின் கடந்த காலம் முழுவதும் இந்திய எதிர்ப்புடன் பயணித்த காலம் தான் ஆனால் ஜே.வி.பி விடுதலைப் புலிகள் போல் இந்திய அமைதிப் படையை எதிர்த்து இராணுவ ரீதியான நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை. இந்தியாவுடன் உறவை புதுபித்துக் கொள்ள முடியாதளவிற்கான வரலாற்று நெருக்கடிக்குள் சிக்கவில்லை. ஒரேயொரு சம்பவம் தான் அந்தக் காலத்தில் பதிவாகியிருக்கின்றது.

ஜே.வி.பியின் திருகோணமலை நடவடிக்கைகளை கையாண்ட குமார் குணரட்ணம், இந்திய அமைதிப் படையை நோக்கி கைக்குண்டுத் தாக்குதலை மேற்கொண்டதாகப் பதிவுண்டு. இந்த ஒரு சம்பவத்தைத் தவிர வேறு எந்தவொரு சம்பவங்களும் பதிவாகவில்லை.

ஜே.வி.பியின் இந்திய எதிர்ப்பு என்பது அடிப்படையில் இந்தியாவை எதிரியாகக் காண்பித்து, சிங்கள தேசியவாத அரசியலுக்கு தலைமை தாங்கும் நோக்கம் கொண்டது. அன்றைய சூழலில் ஜே.வி.பி இந்தியாவை ஒரு விஸ்தஸ்தரிப்புவாத நாடாக நோக்கியது.

அந்த அடிப்படையில் தான் அதன் ஐந்து அரசியல் வகுப்புக்களில் ஒன்று இந்திய விஸ்தரிப்பு வாதம் பற்றியதாக இருந்தது. ஆனால் அரசியலில் அதிகாரத்தில் இருப்பதும், வெறும் கலக அமைப்பாக இருப்பதும் ஒன்றல்ல - மலையும் மடுவும் போன்றது. கலக அரசியலில் எதனையும் பேசலாம் ஆனால் ஒரு நாட்டை கலக வழியில் நடத்திச் செல்ல முடியாது. அதிலும் ஒரு பிராந்திய பேரரசிற்கு அருகில் இருக்கும் போது நிதானமும் தூர நோக்கும் ஆட்சியாளருக்கு அவசியம். ஏனெனில் கரணம் தப்பினால் மரணம். இந்த அடிப்படையில் நோக்கினால் இன்றைய ஜே.வி.பியானது, இந்தியாவின் கரிசனைகளையும் தேவைகளையும் புறம் தள்ளினால் நாட்டை நிர்வகிக்க முடியாது என்பதை சரியாகவே புரிந்து வைத்திருப்பதாகத் தெரிகின்றது.



விடுதலைப் புலிகள் இயக்கம் தொடர்பில் எரிக் சூல்கெய்ம் ஒன்றைக் கூறுவார். அதாவது, விடுதலைப் புலிகள் அமைப்பு இறுதி வரையில் இந்தியாவைப் புரிந்து கொள்ளவேயில்லை. எல்லாம் முடியும் தறுவாயில் அன்ரன் பாலசிங்கம் கடந்த காலத்தை பெருந் தன்மையுடன் பின்னுக்கு வைக்குமாறு இரந்து பார்த்தார் ஆனால் அரசியலில் அவ்வாறான இரத்தல்களுக்கு எப்போதுமே பெறுமதியிருப்பதில்லை.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால், ஜே.வி.பியின் இன்றைய புரிதல் மற்றும் அணுகுமுறை விதியின் திருப்பம் அல்ல அது அரசியல் விதியின் யதார்த்தம். அரசியலில் விருப்பங்களும் யதார்த்தங்களும் என்றுமே ஒரு புள்ளியில் சந்திப்பதில்லை. அரசியலில் விருப்பங்களை உயர்வாக எவர் கருதுகின்றாரோ, அவர்கள் பிரநிதித்துவப்படுத்தும் மக்கள் கூட்டம், ஒரு போதுமே எதையும் அடையாது மாறாக, இருப்பதையும் இழப்பார்கள்.

இதற்கான சிறந்த ஆதாரம் தான் ஈழத்தமிழர் அரசியல். கடந்த எழுபந்தைந்து

வருடங்களாக விருப்பங்களை மட்டுமே தமிழ் அரசியல் தரப்பினர் கூறிக் கொண்டிருக்கின்றனர் ஆனால் அந்த விருப்பங்களை நோக்கி இதுவரையில் சிறிய முன்னேற்றத்தைக் கூட அடைய முடியவில்லை. ஆனாலும் இப்போதும் விருப்பங்களை கூறுவதிலும், யார் சிறப்பாக கூறுகின்றனர் என்பதிலும் தங்களுக்குள் மோதிக் கொள்கின்றனர்.

ஆனால் யதார்த்தமோ வேறாக இருக்கின்றது. கடந்த 75 வருட கால அரசியலில் என்ன நடந்தது என்பது பற்றி பேசிக் கொண்டிருப்பதில் எந்தப் பயனும் இல்லை ஆனால், இந்தக் காலகட்டத்திலிருந்து நாம் எதனைக் கற்றுக் கொண்டோம் என்பதுதான் முக்கியமானது.

மோடியின் விஜயத்தின் போது மீண்டும் இந்தியாவின் கரிசனைகள் தெளிவாக முன் வைக்கப்பட்டிருக்கின்றது.

அரசியல் யாப்பை முழுமையாக அமுல்படுத்துவது, மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவது தொடர்பில் இந்தியாவின் கரிசனைகளை மோடி வெளிப்படுத்தியிருக்கின்றார்.

இதற்கப்பால் இந்தியா எதனையும் கூறப் போவதில்லை கூறவும் முடியாது.

மோடியின் விஜயத்தின் போது முன்னைய ஆட்சியாளர்கள் எவருமே செய்யாத ஒரு விடயத்தை அனுர குமார செய்திருக்கின்றார். இலங்கை மித்திர விபூசன என்னும் அதியுயர் கௌரவத்தையும், இந்தியப் பிரதமர் மோடிக்கு வழங்கியிருக்கின்றார். இந்த விடயத்தை எவருமே கற்பனை கூட செய்திருக்க மாட்டார்கள்.

ஒரு காலத்தில் விஸ்தரிப்புவாத நாடு என்று கூறி, இந்தியாவை எதிர்ப்பதை ஒரு பிரதான அரசியலாகக் கொண்டிருந்த தலைமுறையிடம் அரசியலை கற்றுக் கொண்ட ஒருவர் இந்தியாவை உற்ற நண்பன் என்று கௌரவிக்கின்றார்.

இதனை ஒரு வரியில் கூறுவதாயின், இதுதான் அரசியல் யதார்த்தம். இங்கு யதார்த்தங்களே வெல்லுகின்றன. யதார்த்தங்களை விருப்பங்களால் தோற்கடிக்க முடியும் என்று எண்ணுபவர்கள் வரலாற்றில் பரிதாபமாக தோற்றுப் போகின்றனர்.

ஜே.வி.பி பல தசாப்தகால முயற்சிகளுக்கு பின்னர் அதிகாரத்தை கைப்பற்றியிருக்கின்றது அதனை பேணிப் பாதுகாப்பதும், மீண்டும் வீழ்ந்து தொலைந்து போகாமல் இருப்பதும் முற்றிலுமாக, அவர்


கட்டுரையாளர்:-
தாயகத்தில் இருந்து
- யசீந்திரா -





களுடைய அணுகுமுறைகளில் மட்டுமே தங்கியிருக்கின்றது.

அரசியலை பொறுத்தவரையில் தீதும் நன்றும் வெளியிலிருந்து வருவதில்லை. நலன்களுக்கான சூதாட்டங்களால் சூழப்பட்டிருக்கும் அரசியல் அரங்கில் எழுவதும் வீழ்வதும் குறிப்பிட்ட சூழலை ஒரு அரசியல் அமைப்பு எவ்வாறு கையாளுகின்றது என்பதிலேயே தங்கியிருக்கின்றது.

ஈழத் தமிழர் அரசியல் நின்றுநிலைப்பதும் வெறும் சுலோகங்களால் சீரழிந்து போவதும் தமிழ் மக்களை பிரதிநித்துவம் செய்வதாக தம் பட்டமடிக்கும் அரசில் தரப்புக்களின் புத்திசாலித்தனமான செயற்பாடுகளிலேயே தங்கியிருக்கின்றது. இந்தியா ஈழத்தமிழரோடு இருக்கும் வரைக்கும் தான், ஈழத் தமிழ் சமூகத்திற்கு அரசியல் ரீதியில் பெறுமதியிருக்கும். ஈழத் தமிழரின் அரசியல் முகம் என்பது தனித்த ஒன்றல்ல - தனித்து இருக்கும் போதேல்லாம் முகத்தை பாதுகாப்பதற்கே தமிழர் திண்டாட நேரிடும் ஆனால் ஒரு அர்த்தநாரீஸ்வர தோற்றத்தில் அரசியலை பேணிக் கொண்டால் முகமும் தப்பும், அடையாளமும் தப்பும். இது விதியின் திருப்பம் அல்ல




# Friends MATRIMONY



www.friendsmatrimony.com
+1 647 709 1761 | +1 647 709 1536
+1 647 700 7208 | +1 416 477 6854
GTA Squre-5215 Finch Ave. E. Unit 256 and 257
Toronto, M1S 0C2



## மணமகள்

| | | |
|---|---|---|
| ID08121268 F<br>37yrs, 5'6" , Single , Swaathi , 5 Sevai , Masters Degree , Work , United Kingdom | ID08121267 F<br>27yrs, 5'6" , Single , Rohini , 7 Sevai , Bachelors.. , Accountant , Canada | ID08121260 F<br>28yrs, 5'4" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Tba , Canada |
| ID08121259 F<br>26yrs, 5'5" , Single , Kettai , N/A Sevai , Bachelors.. , Therapist , Canada | ID08121255 F<br>28yrs, 5'4" , Single , Chithirai , 8 Sevai , Postgraduate.. , ECA , Canada | ID08121251 F<br>23yrs, 5'6" , Single , Thiruvonam , N/A Sevai , Bachelors.. , Bank Officer , Canada |
| ID08121238 F<br>37yrs, 5'3" , Divorced , Uthiram , 7 Sevai , Bachelors.. , Accountant , Canada | ID08121199 F<br>30yrs, 5'3" , Single , Poosam , 1 Sevai , Bachelors.. , Medical Lab.. , Canada | ID08121198 F<br>30yrs, 5'8" , Single , Visaakam , N/A Sevai , Bachelors.. , CRA- , Canada |
| ID08121197 F<br>30yrs, 5'1" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Medical Doctor , Canada | ID08121196 F<br>25yrs, 5'5" , Single , Thiruvonam , 4 Sevai , Postgraduate.. , Finance Analyst , Canada | ID08121193 F<br>34yrs, 5'7" , Annulled , Thiruvaathirai , N/A Sevai , Bachelors.. , Toronto city.. , Canada |
| ID08119603 F<br>33yrs, 6'4" , Single , Makam , 10 Sevai , Bachelors.. , Software Engineer , Canada | ID08119509 F<br>28yrs, 5'4" , Single , Visaakam , 7 Sevai , Bachelors.. , Secretary , Canada | ID08115839 F<br>30yrs, 5'5" , Single , Visaakam , N/A Sevai , Bachelors.. , Human Resource.. , Canada |
| ID08121226 F<br>29yrs, 5'4" , Single , Pooraadam , N/A Sevai , Bachelors.. , Bank , Canada | ID08115839 F<br>30yrs, 5'5" , Single , Visaakam , N/A Sevai , Bachelors.. , Human Resource.. , Canada | ID08120732 F<br>30yrs, 5'6" , Single , Chithirai , 7 Sevai , Masters Degree , Doctor , Sri Lanka |
| ID08120728 F<br>40yrs, 5'4" , Widowed , Not Specified , N/A Sevai , High School , Teacher , Canada | ID08120727 F<br>24yrs, 4'5" , Single , Avittam , 3 Sevai , Bachelors.. , Teacher , Sri Lanka | ID08120723 F<br>41yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Diploma , House of Nursing , Malaysia |
| ID08121224 F<br>26yrs, 5'6" , Single , Chathayam/sadayam , N/A Sevai , Bachelors. . , Tba , Canada | ID08120721 F<br>23yrs, 5'2" , Single , Punarpoosam , N/A Sevai , Bachelors.. , Study , Sri Lanka | ID08120718 F<br>29yrs, 5'5" , Single , Chithirai , 10 Sevai , Masters Degree , Assistant.. , Canada |
| ID08121189 F<br>32yrs, 5'6" , Single , Rohini , N/A Sevai , Ph.D , Engineer , United States | ID08121220 F<br>30yrs, 5'7" , Divorced , Pooram , N/A Sevai , Diploma , Finanacial.. , Canada | ID08121186 F<br>29yrs, 5'7" , Single , Chithirai , N/A Sevai , Postgraduate.. , Accounting.. , Canada |
| ID08121185 F<br>27yrs, 5'6" , Single , Aayilyam , N/A Sevai , Diploma , Office work.. , Sri Lanka | ID08121182 F<br>29yrs, 5'4" , Single , Thiruvaathirai , 12 Sevai , Bachelors.. , Development.. , Sri Lanka | ID08121241 F<br>25yrs, 5'8" , Single , Not Specified , N/A Sevai , High School , Student , Canada |

## மணமகன்



| | | |
|---|---|---|
| ID08121218 M<br>32yrs, 5'7" , Single , Kettai , N/A Sevai , Diploma , Teacher , Sri Lanka | ID08121217 M<br>43yrs, 5'5" , Divorced , Poosam , Sevai , Bachelors.. , Maintenance.. , Canada | ID08121250 M<br>34yrs, 6'1" , Single , Thiruvaathirai , N/A Sevai , Bachelors.. , Salesperson , Sri Lanka |
| ID08121236 M<br>31yrs, 5'9" , Single , Aswini , N/A Sevai , High School , Not Specified , Sri Lanka | ID08121206 M<br>33yrs, 5'3" , Single , Thiruvonam , N/A Sevai , High School , Own business , Sri Lanka | ID08121239 M<br>61yrs, 5'5" , Divorced , Not Specified , N/A Sevai , Masters Degree , Doctor , Australia |
| ID08121202 M<br>31yrs, 5'7" , Single , Anusham , 5 Sevai , Masters Degree , Banker , Sri Lanka | ID08121195 M<br>36yrs, 5'5" , Single , Swaathi , N/A Sevai , Diploma , Manager , Sri Lanka | ID08121194 M<br>44yrs, 5'3" , Single , Swaathi , N/A Sevai , Diploma , Pharmacist.. , Sri Lanka |
| ID08121191 M<br>26yrs, 5'6" , Single , Chathayam/sadayam , 7 Sevai , High School , Textile -.. , Sri Lanka | ID08121190 M<br>29yrs, 5'4" , Single , Thiruvaathirai , 10 Sevai , High School , Tyre shop.. , Sri Lanka | ID08121248 M<br>36yrs, 5'10" , Single , Moolam , 1 Sevai , Ph.D , Professor , United States |
| ID08120583 M<br>32yrs, 5'10" , Single , Poorattathi , 9 Sevai , Bachelors.. , Project Engineer , Canada | ID08120564 M<br>33yrs, 5'11" , Single , Hastham , 8 Sevai , Bachelors.. , Website Administrator ,Canada | ID08121249 M<br>30yrs, 6' , Single , Rohini , 5 Sevai , Masters Degree , Engineer , Sri Lanka |
| ID08120270 M<br>34yrs, 5'8" , Single , Thiruvaathirai , 10 Sevai , Bachelors.. , Data Analyst , Canada | ID08120144 M<br>35yrs, 5'9" , Single , Visaakam , 8 Sevai , Diploma , Own Business.. , Canada | ID08119698 M<br>33yrs, 6'4" , Single , Makam , 10 Sevai , Bachelors.. , Software Engineer , Canada |
| ID08120481 M<br>30yrs, 5'7" , Single , Poorattathi , 7 Sevai , Bachelors.. , Research Associate , Canada | ID08116778 M<br>37yrs, 5'9" , Single , Uthiram , 12 Sevai , Bachelors.. , Manager Financial.. , Canada | ID08116404 M<br>43yrs, 5'4" , Single , Makam , N/A Sevai , High School , Business , Sri Lanka |
| ID08115828 M<br>31yrs, 5'9" , Single , Mrigasheersham , 10 Sevai , Bachelors.. , Trading Associate , Canada | ID08121232 M<br>23yrs, 5'5" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Production.. , Sri Lanka | ID08120734 M<br>35yrs, 5'7" , Seperated , Not Specified , N/A Sevai , Masters Degree , Fama prodecsoen.. , Sri Lanka |
| ID08121184 M<br>47yrs, 5'7" , Single , Chathayam/sadayam , 9 Sevai , Masters Degree , Entrepreneur , Canada | ID08121183 M<br>36yrs, 5'10" , Single , Anusham , 5 Sevai , Diploma , Business , Sri Lanka | ID08121190 M<br>29yrs, 5'4" , Single , Thiruvaathirai , 10 S evai , High School , Tyre shop.. , Sri Lanka |
| ID08121181 M<br>35yrs, 6' , Single , Hastham , 1 Sevai , Postgraduate.. , TTC , Canada | ID08121180 M<br>49yrs, 5'6" , Single , Aswini , 9 Sevai , Masters Degree , Engineer , Sri Lanka | ID08121178 M<br>30yrs, 6'2" , Single , Thiruvonam , N/A Sevai , Bachelors.. , Software engineering , Sri Lanka |

# மக்கள் யாருடைய பக்கம்? மக்களின் பக்கம் யார்?

கட்டுரையாளர்:-
கிளிநொச்சியில் இருந்து
- கருணாகரன் -



உள்ளூராட்சி சபைத் தேர்தலையொட்டி வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் அரசியற் கூட்டுகள் சில புதிதாக உருவாகியுள்ளன. இந்தக் கூட்டுகளின் பிரதான நோக்கம் தேசிய மக்கள் சக்தியின் வெற்றியைத் தடுப்பதாகும்.

இரண்டாவது தமிழ்த்தேசிய அரசியலை அல்லது பிராந்திய அரசியலை (சமூகப் பிராந்திய அரசியல் (Socio-regional politics) மற்றும் புவியற்



பிராந்திய அரசியல் (Geo-regional politics) மேலும் தொடர்வது. பிராந்திய அரசியலைத் தக்க வைத்துக் கொள்வதன் மூலமே அரசியல் அரங்கில் தம்மை நிலைப்படுத்திக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை.

இதற்காக அவை தமது கொள்கை (அப்படி ஏதேனும் இருந்தால்) கோட்பாடு, உடன்பாடு, முரண்பாடு எல்லாவற்றையும் கடந்து கூட்டு வைத்துள்ளன அணி சேர்ந்துள்ளன.

1.தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி என்ற முகமூடியில் இயங்கும் அதிதீவிர நிலைப்பாட்டையுடைய அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைமையில் ஒரு கூட்டணி 'தமிழ்த் தேசியப் பேரவை' என்ற பெயரில் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் காங்கிரஸோடு ஸ்ரீகாந்தா — சிவாஜிலிங்கம் இரட்டையர்களின் தமிழ்த்தேசியக் கட்சி, தமிழரசுக் கட்சியின் அதிருப்தியாளர் தவராஜாவின் ஜனநாயகத் தமிழரசுக் கட்சி, ஐங்கரநேசனின் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம், அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் மற்றும் சாவகச்சேரி அருந்தவபாலன், புங்குடுதீவு நாவலன் எனச் சில உதிரியாட்களின் அணி என இணைந்துள்ளன.

2 ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு. இதில் ஏற்கனவே உள்ள ஈ.பி.ஆர். எல்.எவ், புளொட், ரெலோ, ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகியவற்றோடு புதிதாக இணைந்திருப்பது முருகேசு சந்திரகுமாரின் சமத்துவக் கட்சியாகும். ஈரோஸ் ஜனநாயக முன்னணி, தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி போன்றவையும் இந்தக் கூட்டில் இணையக் கூடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் துரதிருஸ்டவசமாக அவை தனித்தே நிற்கும்படியாகி விட்டது.

3.கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு. இதில் பிள்ளையான் எனும் சிவநேசதுரை சந்திரகாந்தனின் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள், சதாசிவம் வியாழேந்திரனின் தமிழர் முற்போக்குக் கழகம் ஆகியவை 15. 03. 2025 இல் ஒரு உடன்படிக்கையைச் செய்து இணைந்திருந்தன. பின்னர் 22.03.2025 அன்று கருணா என்றழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரனின் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி இந்தக் கூட்டில் இணைந்துள்ளது. ஆனாலும் இந்தக் கூட்டுக்கு முன்னோடியாக இருந்தது, கிழக்குத் தமிழர் ஒன்றியமாகும். 2018இல் செங்கதிரோன் என்றழைக்கப்படும் த. கோபாலகிருஸ்ணன், சட்டத்தரணி த. சிவநாதன் மற்றும் அகில இலங்கைத் தமிழர் மகாசபையைச் சேர்ந்த விக்னேஸ்வரன் ஆகியோர் இணைந்து கிழக்கின் சமூக, பொருளாதார, அரசியல் மேம்பாட்டுக்காக கிழக்குத் தமிழர் ஒன்றியத்தினை உருவாக்கினர்.

இதனுடைய அரசியற் பிரிவாக 'கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு' என்ற பெயரில் ஒரு கூட்டணி உருவாக்கப்பட்டது. இதில் இணைந்து கொள்ளுமாறு அப்போது சம்மந்தப்பட்ட தரப்பினரால் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளுக்கும் கருணா அணிக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. அந்த அழைப்பைப் புறக்கணித்தவர்கள் இப்பொழுது அதே பெயரில் ஒரு கூட்டமைப்பை பிரகடனப்படுத்தியிருப்பது ஆச்சரியமளிக்கிறது.

இப்படி ஒவ்வொரு கூட்டுக்கு உள்ளும் புறமுமாகப் பல சங்கதிகள் உண்டு. எப்படியோ வழமையைப் போல தேர்தற்காலத் திருவிழாவின் ஓரம்சமாகத் தமிழ்க் கட்சிகளின் அரசியற் கூட்டுகள் இந்தத் தடவையும் நிகழ்ந்திருக்கின்றன. இதொன்றும் ஆச்சரியமானதல்ல. ஆனாலும் ஆச்சரியமாக இருப்பது, இந்தக் கூட்டுகளின் பின்னாலுள்ள சில விடயங்கள்.

1.தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி என்ற முகமூடியில் இயங்கும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், இதுவரையிலும் வேறு எவரோடும் கூட்டு வைத்துக் கொள்ளாமல் தன்னைத் தனிமைப்படுத்தி வைத்திருந்தது. அதாவது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறிய பிறகு ஏனைய தமிழ்க் கட்சிகள் எல்லாவற்றையும் முன்னணி துரோகிப் பட்டியலில் தள்ளி விட்டுத் தான் மட்டுமே சுத்தமான தங்கம் என்று தன்னைப் புனிதப்படுத்தி முயற்சித்துக் கொண்டிருந்தது. இப்பொழுது இதிலிருந்து படியிறங்கி தான் ஒதுக்கி வைத்த தரப்புகளோடு அரசியற் கூட்டொன்றை உருவாக்கியுள்ளது. இந்தக் கூட்டணிக்கு தமிழ்த்தேசியப் பேரவை என்று பெயரிடப்பட்டுள்ளது.

இதற்குக் காரணம், தேசிய மக்கள் சக்தி வடக்குக் கிழக்கில் வெற்றியடைவதைத் தடுப்பதும் ஏனைய தமிழ்த் தரப்புகளை விட, தமிழ்க் காங்கிரஸ் கட்சி பலமாக இருக்கிறது என்பதைக் காட்டுவதுமாகும். பாராளுமன்றத் தேர்தலில் ஒரேயொரு பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருக்கும் கட்சியாக (தரப்பாக) தமிழ்க் காங்கிரஸ் இருப்பதால், அரசியல் அரங்கில் முதன்மையிடத்தைப் பெற முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார் கஜேந்திரகுமார்.

இதற்காகவே அவர் அரசியல் தீர்வைப் பற்றிப் பேசுவதற்கு பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவத்தைக் கொண்ட தரப்புகளை ஒருங்கிணைத்து, அதற்குத் தலைமை தாங்குவதற்கு முயற்சித்தார். அதற்காகவே சிறிதரனின் வீடு தேடிச் சென்றதும் பின்னர் தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வீ.கே. சிவஞானத்துடன் பேச்சுகளை கஜேந்திரகுமார் நடத்தியதுமாகும்.

ஆனாலும் கஜேந்திரகுமாரின் கனவுத் திட்டம் உருப்படாமல் சுமந்திரனால் சமயோசிதமாகத் தடுக்கப்பட்டு விட்டது. இதையும் நிரப்பி, தன்னை எப்படியாவது முன்னிலைப்படுத்திக் கொள்வதற்காக விலக்கி வைத்த கனிகளையே புசிக்கத் தொடங்கியிருக்கிறார் கஜேந்திகுமார்.

இதுவரையிலும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி, தன்னைத் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி என்றே அடையாளப்படுத்தி வந்தது. ஆனாலும் முன்னணியைப் பதிவு செய்யாமல் காங்கிரஸையே தேர்தலுக்குப் பயன்படுத்தி வந்தார் கஜேந்திரகுமார். காரணம், காங்கிரசுக்கு நீண்ட கால அரசியற் பாரம்பரியம் உண்டு என்பதோடு கஜேந்திரகுமாரின் பேரன் ஜீ.ஜீ.பொன்னலம்பலம் உருவாக்கிய கட்சி. அதற்குப் பிறகு கஜேந்திரகுமாரின் தந்தை குமார் பொன்னம்பலம் தலைவராக இருந்தார் என்று ஒரு குடும்பப் பாரம்பரியமும் அதற்குண்டு என்பதேயாகும்.

ஆகவே தான் முன்னணி என்ற பெயரைத் தமிழ் மக்களின் அரசியலுக்கான ஒரு முகமூடியாகப் பயன்படுத்திக் கொண்டே காங்கிரஸில் கட்சியின் நடவடிக்கைகளை வலுவாக மேற்கொண்டு வந்தார் கஜேந்திரகுமார். அதாவது குடும்பத்தின் அரசியல் அடையாளத்தையும் முக்கியத்துவத்தையும் இழக்காமல் பேணுவதே முதன்மை நோக்கமாக இருந்தது.

இப்பொழுது இதற்கு மேலும் வலுச்சேர்ப்பதாக ஸ்ரீகாந்தா, சிவாஜிலிங்கம், ஐங்கரநேசன், அருந்தவபாலன், தவராஜா எல்லோரும் ஒருங்கிணைந்து உதவுகிறார்கள்.

இவர்கள் காங்கிரஸை நெருங்கக் காரணம், தமிழ் மக்களுடைய சமூக, அரசியல், பொருளாதார மேம்பாட்டுக்காகவோ நலனுக்காகவோ தமிழ் மக்களைப் பாதுகாப்பதற்காகவோ அல்ல. தேசிய மக்கள் சக்தியின் எழுச்சியை அதனுடைய வெற்றியைத் தடுப்பதற்காகவேயாகும்.

தேசிய மக்கள் சக்தியின் எழுச்சியானது, தமிழ்த்தேசியக் கட்சிகள் உட்பட ஏனைய தமிழ், முஸ்லிம், மலையகக் கட்சிகளையெல்லாம் நெருக்கடிக்குள்ளாக்கியுள்ளது. இதனால் தவிர்க்க முடியாமல் முடிந்தளவுக்கு விட்டுக் கொடுப்புகளோடு, இந்த நெருக்கடியை எதிர் கொள்வதற்கான அரசியற் கூட்டுகளை உருவாக்க வேண்டிய நிலை இந்தக் கட்சிகளுக்கு ஏற்பட்டுள்ளது. இந்த வகையிற்தான் முன்னணியின் அரசியற் கூட்டும் அமைந்திருக்கிறது. ஆனால், இதற்கு கஜேந்திரகுமார் கொடுக்கும் விளக்கம்தான் சிரிப்பூட்டுகிறது. கொள்கை வழியில் விட்டுக் கொடுப்புகளற்ற அணியாகத் தம்முடைய தமிழ்த்தேசியப் பேரவையே உள்ளதால், கொள்கையை ஆதரிக்கும் மக்கள் தமக்கே தமது கூட்டுக்கே ஆதரவழிக்க வேண்டும் என்று கேட்டுள்ளார்.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் கொள்கை(20ம் பக்கம் பார்க்க)

சிவமயம்

ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய
முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# மக்கள் யாருடைய பக்கம்? மக்கள் யார் பக்கம்?

(19ம் பக்கத் தொடர்ச்சி) ஒன்றும் புதியதோ ஆச்சரியமானதோ அல்ல. அது ஏட்டுச் சுரைக் காய் என்று சொல்வார்களே. அது தான். அதாவது ஏட்டுச் சுரைக்காயில் கறியை வைக்க முடியாது. ஆகவே நடைமுறைக்குப் பொருந்தாத கற்பனாவாதக் கருத்தியலில் தன்னைக் கட்டி வைத்திருக்கும் தமிழ்க் காங்கிரஸ் கஜேந்திரகுமார் அணி, இலங்கைத்தீவின் யதார்த்தத்துக்கு முரணாகச் சிந்திக்கும் அரசியற் கட்சிகளில் ஒன்றாகும்.

அதிதீவிரவாத நிலைப்பாடே இதனுடைய அடிப்படையாகும். இதைப் போன்ற சிங்களக் கட்சிகளும் உண்டு. உதாரணமாக விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணி, உதய கம்மன்பிலவின் பிவிதுரு ஹெலஉறுமய போன்றவை. தமிழ் மக்களுடைய அரசியல் உரிமைப் போராட்டத்துக்கும் தீர்வுக்கும் எந்த வகையிலும் பொருத்தமற்ற நடைமுறைச் சாத்தியங்களற்ற அரசியல் நிலைப்பாட்டைத் தன்னுடைய தலையில் சுமந்து கொண்டிருக்கும் தமிழ்க் காங்கிரஸோடு, ஏனைய கட்சிகளும் அணிகளும் அரசியற் கூட்டுக்கு இணங்கியிருப்பது ஒரு வகையில் ஆச்சரியமானதே. முன்னணி படியிறங்கியதற்குக் காரணம், தன்னுடைய அரசியலை எந்த வகையிலாவது பலப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற அடிப்படையிலேயேயாகும்.

ஆனால், இலங்கைத்தீவின் யதார்த்தமோ அதிதீவிர நிலைப்பாட்டையும் இனவாதத்தையும் விட்டு விலகும் தன்மையைப் கொண்டுள்ளது என்பதால் தான் வடக்குக் கிழக்கு, மலையகம் உள்பட நாடு முழுவதிலும் தேசிய மக்கள் சக்தி வெற்றியைப் பெறக் கூடியதாக இருந்தது. அதாவது சமூகப் பிராந்திய அரசியல் (Socio-regional politics), புவியற் பிராந்திய அரசியல் (Geo-regional politics) போன்றவற்றின் தேவையை அல்லது அதனுடைய போக்கை மக்கள் விட்டு விலகிச் செல்லத் தொடங்கியிருக்கின்றனர் எனலாம். இந்த இரண்டு வகையான அரசியலினாலும் குறித்த தமிழ், முஸ்லிம் மலையகச் சமூகங்கள் பெற்றுக் கொண்டதை விட இழந்தது அதிகம் என்பதால் அவை வேறு விதமாகச் சிந்திக்கத் தொடங்கியுள்ளன. ஆனால், அதற்காக இந்தச் சமூகங்களின் அக — புற அரசியல் பிரச்சினைகளை தேசிய மக்கள் சக்தியோ அல்லது தற்போதையை அரசாங்கமோ முழுமையாகத் தீர்த்து வைக்கும் என்றுமில்லை. எனிலும் மக்கள் வேறு வழியின்றி வேறு வகையான தெரிவுகளுக்கே முயற்சிக்கிறார்கள். இதை எப்படியாவது தடுத்து, மறுபடியும் சமூகப் பிராந்திய அரசியல் (Socio-regional politics), புவியற் பிராந்திய அரசியல் (Geo-regional politics) போன்றவற்றிற்குள் திணித்து விடுவதற்கே கஜேந்திரகுமார் போன்றவர்கள் முயற்சிக்கிறார்கள். இதில் அதி தீவிர நிலைப்பாட்டைக் கொண்டவர்கள் ஒருங்கிணைந்திருக்கிறார்கள். சிவாஜிலிங்கம், ஸ்ரீகாந்தா, நாவலன், அருந்தவபாலன், ஐங்கரநேசன், கஜேந்திரன், கஜேந்திரகுமார் போன்றவர்கள் எப்போதும் தீவிர நிலைப்பாட்டைக் கொண்டவர்களேயாகும்.

ஆனால், இது வடக்கிற்குள் தான். வடக்கிற்கு வெளியே இப்படித் தீவிர நிலைப்பாட்டைக் கொண்டவர் என்றால், அது அரியநேத்திரன் மட்டும் தான். இந்த அணியில் இன்னொருவர் மட்டும் இதுவரையில் சேராமல் இருக்கிறார். அது சிவஞானம் சிறிதரன். தமிழரசுக் கட்சியிலிருந்து சிறிதரன் வெளியேறும் நிலை வந்தால் நிச்சயமாக அவர் இந்தக் கூட்டில் தான் சேருவார். காரணம், அவரும் ஒரு கற்பனாவாத அரசியலை முன்னெடுத்து வருகின்றவர்.

ஆக இப்பொழுது அதிதீவிர தேசியவாதிகளின் அணி தமிழ்த் தேசியப் பேரவை என்ற கூட்டில் இணைந்துள்ளது. இதனை மக்கள் எப்படி நோக்கப் போகிறார்கள்? எவ்வாறான ஆதரவு இந்தக் கூட்டுக்கு எதிர் காலத்தில் கிடைக்கப் போகிறது என்பதைப் பொறுத்தே தமிழ் அரசியலின் எதிர்காலமும் இலங்கைத்தீவின் எதிர்காலமும் இருக்கப் போகிறது. இப்போது இந்தக் கூட்டுக்குப் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் ஒரு உறுப்பினரை மட்டும் கொண்டுள்ளது. அது காங்கிரஸைச் சேர்ந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலமாகும்.

2.ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் அரசியற் கூட்டாகும். ஈ.பி.ஆர். எல்.எவ், புளொட், ரெலோ, ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகியவற்றோடும் புதிதாக இணைந்திருப்பது முருகேசு சந்திரகுமாரின் சமத்துவக் கட்சியாகும். இவை அனைத்தும் கடந்த கால ஆயுதப் போராட்ட அரசியலோடு ஒரு வகையில் சம்மந்தப்பட்டவை அல்லது அந்தப் பின்னணியைக் கொண்டவையாகும். முன்னணியின் தலைமையிலான கூட்டு, அதிதீவிர நிலைப்பாடும் முழுமையான மிதவாதப் பின்னணியைக் கொண்டது என்றால், இது ஆயுதப்போராட்ட அரசியலை வரலாறாகக் கொண்டது. ஆனால், ஒரு சிறிய வேறுபாடு இந்தக் கூட்டிற்கு உண்டு. அது என்னவென்றால், இது யதார்தத்த்தை நடைமுறையைக் கவனத்திற் கொண்ட கூட்டாகும். அதாவது ஆயுதப் போராட்ட அரசியல் அனுபவத்தின் வழியாகவும் மிதவாத அரசியற் போராட்டத்தின் அனுபத்திற் கூடாகவும் கற்றுக் கொண்ட பாடங்களின் அடிப்படையில் தமிழ் மக்களுடைய எதிர்கால அரசியலை முன்னெடுக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொண்ட தரப்பாகக் காணப்படுகிறது. ஆனால், இந்த அணிக்குப் பாராளுமன்றத்தில் ஒரே ஒரு உறுப்புரிமையே உண்டு. ரெலோ சார்பாக செல்வம் அடைக்கலநாதன் அதனைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலிற்கான இந்தக் கூட்டின் வேட்புமனுக்கள் அதிகமாக நிராகரிக்கப்பட்டுள்ளதால், இந்தக் கூட்டின் அரசியல் சிக்கலுக் குள்ளாகியுள்ளது. இந்தக் கூட்டின் தலைக்குள்ளும் இருப்பது தேசிய மக்கள் சக்திக்கு எதிரான சிந்தனையே. கூடவே தமிழ்த் தேசியப் பேரவையுடனும் இது மோதக் கூடிய அடிப்படைகளையும் இயல்பையும் கொண்டுள்ளது.

கூட்டுகளுக்கு எதிராகத் தனித்த நிற்கும் தரப்பு. இலங்கைத் தமிழரசுக் கட்சியே இதுவாகும். தேசிய மக்கள் சக்தி, தமிழ்த்தேசியப் பேரவை என்ற கஜேந்திரகுமார் அணி மற்றும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு ஆகியவற்றுக்கு எதிராக தன்னை நிறுத்தியிருக்கும் தனித் தரப்பாக இதை நோக்கலாம். வடக்குக் கிழக்கில் அதிகமான பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட பிராந்தியக் கட்சியும் இப்போது இதுதான். ஆகவே உள்ளூராட்சித் தேர்தலில் இதனுடைய செல்வாக்கு கூடுதலாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனாலும் அது எந்தளவுக்கு இருக்கும் என்று அறுதியிட்டுக் கூற முடியாது. அதனை அந்தக் கட்சியின் பேச்சாளரும் பதிற் செயலாளருமான திரு. ஆபிரகாம் சுமந்திரன் வெளிப்படையாகவே தெரிவித்துள்ளார். அதாவது NPP அலை இன்னும் ஓயவில்லை. அதற்குள் தான் நாம் வெற்றியைப் பெற வேண்டியுள்ளது. அறுதிப் பெரும்பான்மையை யாரும் பெறப்போவதில்லை. ஆனாலும் தமிழ் மக்கள் (22ம் பக்கம் பார்க்க)



# பிரிட்டன் தடை உணர்த்துவது என்ன?

பிரித்தானியா இலங்கையில் போர்க் காலத்தில் இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்களுக்கு எதிராக அதில் சம்பந்தப்பட்ட நான்கு பேருக்கு தடை விதித்திருக்கிறது. இதுவரை காலமும் கனடா அமெரிக்கா ஆகிய நாடுகள் தடை விதித்திருக்கின்றன. பிரித்தானியா இவ்வாறு தடை விதித்திருப்பது இது தான் முதல் தடவை.

முதலில் இந்த தடை வெளி வந்திருக்கும் பின்னணியைப் பார்க்கலாம். 58 ஆவது ஜெனிவா கூட்டத் தொடர் முடிவடைகிறது. அக் கூட்டத் தொடர் நடந்து கொண்டிருந்த காலகட்டத்திலேயே பிரித்தானியாவின் தடை அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே இரு கிழமைகளுக்கு முன்பு ஜெனிவா கூட்டத் தொடரின் பின்னணியில் அல்ஜசிராவின் ஹெட் டு ஹெட் நிகழ்ச்சி ஒளி பரப்பப்பட்டது.

அந்த நிகழ்ச்சியும் இப்பொழுது வெளி வந்திருக்கும் பிரித்தானியாவின் தடையும் ஏறக்குறைய ஒரே நோக்கத்தை கொண்டவை. சீன இடதுசாரி மரபில் வந்த ஜேவிபியை அடித்தளமாகக் கொண்ட தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திற்கு இரண்டு வரையறைகளை உணர்த்துவதே இந்தத் தடை மற்றும் அல்ஜசீராவின் நேர்காணல் இரண்டினதும் நோக்கம் எனலாம்.

முதலாவது வரையறை இந்த அரசாங்கம் சீனாவை நோக்கிச் சாய்வதில் உள்ள வரையறை. இரண்டாவது இனப்பிரச்சினை தொடர்பில் பொறுப்புக்கூறாமல் தப்புவதில் உள்ள வரையறை.இதை இன்னும் அறுத்துறுத்துச் சொன்னால் பொறுப்புக் கூறல் என்ற கவர்ச்சியான தலைப்பின் கீழ் இலங்கை அரசாங்கத்தை தமது செல்வாக்கு மண்டலத்துக்குள் வைத்திருப்பதற்கான அழுத்தங்கள்.

பிரித்தானியாவின் தடை நான்கு பேர்களுக்கு விதிக்கப்பட்டிருக்கிறது. இவர்களில் மூவர் தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்தை முன்னெடுத்த அரச படைப்பிரதானிகள். ஒருவர் தமிழ்த் தரப்பில் ஒரு தளபதியாக விருந்து பின்னர் அரச தரப்புடன் இணைந்த கருணா. இந்த நால்வரும் இலங்கைத்தீவின் சிவில் யுத்தத்தில் செய்த குற்றங்களுக்கு எதிராகவே மேற்படி தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக பிரித்தானிய அரசின் வெளிவிவகார.பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகத்தின் உத்தியோகபூர்வ அறிக்கையில் கருணாவுக்கு எதிரான குற்றச்சாட்டுகளில் அவர் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருந்த காலமும் பின்னர் அரச தரப்போடு இணைந்து செயல்பட்ட காலமும் உள்ளிட்ட சிவில் யுத்த கால கட்டத்தில் செய்த குற்றங்கள் என்று தான் கூறப்பட்டுள்ளது. மேலும் அந்த உத்தியோகபூர்வ குறிப்பில் கருணா தொடர்பாக கூறப்படுகையில் பயங்கரவாதக் குழுவான விடுதலைப் புலிகள் இயக்கம் என்ற சொற்பிரயோகம் உண்டு.

நாலாம் கட்ட ஈழப்போரில் கருணா அரச தரப்புடன் இணைந்து செயல்பட்டதை வைத்து இந்த தடை அரசு படைப் பிரதானிகளுக்கும் அரசாங்கத்தோடு இணைந்து செயல்பட்ட கருணாவுக்கும் எதிரானது என்று தான் ஒரு பொதுவான தமிழ் விளக்கம் காணப்படுகின்றது. ஆனால் அது முழு உண்மையல்ல. இந்தத் தடைக்குள் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு எதிரான குற்றச் சாட்டுகளும் உண்டு. ஏற்கனவே ஐநாவின் அறிக்கைகளில் போரில் ஈடுபட்ட இரண்டு தரப்புக்களுக்கும் எதிராக என்று குற்றச் சாட்டுகள் முன் வைக்கப்படுகின்றன என்பதையும் இங்கு தொகுத்துக் கவனிக்க வேண்டும். அதுமட்டுமல்ல மேற்படி குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக பயன்படுத்தப்பட்ட வார்த்தைகளிலும் மனித உரிமை மீறல்கள் மனித உரிமைத் துஷ்பிரயோகங்கள் போன்ற வார்த்தைகள் தான் காணப் படுகின்றன.இன அழிப்பு என்ற வார்த்தை இல்லை.

அதாவது பிரித்தானியாவின் தடையானது நடந்தது இனஅழிப்பு என்பதனை உத்தியோகபூர்வமாக ஏற்றுக் கொள்ளவில்லை. கடந்த 15ஆண்டுகளாக ஐநாவின் அறிக்கைகளிலும் அதுதான் காணப்படுகின்றது. அங்கேயும் தமிழர்களுக்கு எதிராக இடம் பெற்றவை இன அழிப்பு என்று உத்தியோகபூர்வமாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இதில் ஒப்பீட்டளவில் கனடாவில் நிறைவேற்றப்பட்ட இரு தீர்மானங்கள் இன அழிப்பு என்பதனை ஏற்றுக் கொள்கின்றன. தீர்மானங்களில் இன அழிப்பு என்ற வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. ஆனால் அது கனடாவின் இலங்கை தொடர்பான வெளியுறவு அணுகுமுறைகளில் வெளியுறவுக் கொள்கைத் தீர்மானமாக எடுக்கப்படவில்லை. அதாவது ஒரு இராஜதந்திர முடிவாக அது நடைமுறையில் இல்லை.



எனவே கடந்த 15 ஆண்டுகளாக மேற்கத்திய நாடுகளும் ஐநாவும் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக எடுக்கும் உத்தியோகபூர்வ நிலைப்பாடுகளைத் தொகுத்துப் பார்த்தால் அங்கே ஒரு பொதுத் தன்மையைத் தமிழர்கள் கண்டு பிடிக்கலாம். அது என்னவென்றால் இலங்கைத் தீவில் இடம் பெற்றது இன அழிப்பு என்பதனை உத்தியோகபூர்வ வெளியுறவுக் கொள்கை நிலைப்பாடாக மேற்கு நாடுகள் இதுவரை எடுத்திருக்கவில்லை. ஐநாவும் அது இனப்படுகொலை என்பதனை உத்தியோக பூர்வமாக ஏற்றுக்கொள்ளவில்லை. இது முதலாவது.

இரண்டாவது கடந்த 15 ஆண்டுகளாக விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு எதிரான தடைகளை எல்லா நாடுகளும் தொடர்ந்து பேணுகின்றன. தாயகத்தில் செயல்படாத ஒரு அமைப்புக்கு எதிராகத் தடையைத் தொடர்ந்து பேணுவதன் மூலம் அவர்கள் தமிழ் மக்களுக்கு உணர்த்த முற்படும் வரையறைகள் எவை?

மூன்றாவது. ஐநாவில் இலங்கை இனப்பிரச்சினையானது வரையறுக்கப் பட்ட ஆணையைக் கொண்ட ஐநாவின் உறுப்பாகிய மனித உரிமைகள் பேரவைக்குள் தான் பெட்டி கட்டப்பட்டிருக்கிறது. மனித உரிமைகள் பேரவையானது ஐநாவின் 8 உறுப்புகளில் ஒன்று. பாதுகாப்புச் சபை. பொதுச் சபை போன்று அதிகாரம் மிக்கதல்ல. ஒரு நாட்டுக்கு எதிராக படையினரை அனுப்புவதற்கோ அல்லது பொருளாதாரத் தடைகளை விதிப்பதற்கோ தேவையான ஆணை மனித உரிமைகள் பேரவைக்குக் கிடையாது. சம்பந்தப்பட்ட நாட்டின் அரசாங்கம் ஏற்றுக்கொண்டால் மட்டுமே மனித உரிமைகள் பேரவை அந்த நாட்டில் இறங்கி வேலை செய்யலாம்.

குறிப்பாக 2021 ஆம் ஆண்டிலிருந்து ஐநா மனித உரிமைகள் பேரவைக்குள் ஓர் அலுவலகம் இயங்கி வருகிறது. இலங்கைத்தீவின் போர்க்களத்தில் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களுக்கு எதிரான சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பதற்கான ஓர் அலுவலகம் அது.அப்படி ஒரு பொறிமுறை வேண்டும் என்று 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தமிழ்த்தேசியக் கட்சிகள் கூட்டாக ஒரு கடிதத்தை எழுதின.அந்தப் பொறிமுறையானது மனித உரிமைகள் பேரவைக்கு வெளியே பொறுப்பு கூறலைக் கொண்டு போக வேண்டும் என்பது கடிதத்தின் சாராம்சம் ஆகும்.

மேலும் அந்தப் பொறிமுறைக்கு ஒரு கால வரையறை உருவாக்கப்பட வேண்டும் என்றும் அந்தக் கூட்டுக் கடிதத்தில் கேட்கப்பட்டிருந்தது. ஆனால் இந்தக் கோரிக்கைகளில் பெரும்பாலானவை ஐநாவால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. 2021ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அந்தப் பொறிமுறையானது ஐநா மனித உரிமைகள் பேரவைக்கு உட்பட்ட ஓர் அலுவலகமாகத்தான் உருவாக்கப்பட்டது. அதாவது பலவீனமான ஆணையை கொண்டது.



இதுதான் ஐநாவில் தமிழ் மக்களுக்கு கிடைக்கக் கூடியவற்றின் வரையறை. இவ்வாறு கடந்த 15 ஆண்டு காலமாக மேற்கை மையமாகக் கொண்ட, அல்லது ஐநாவை மையமாகக் கொண்ட நீதிக்கான தமிழ் மக்களின் போராட்டத்தின் விளைவுகளைத் தொகுத்துப் பார்த்தால் பின்வரும் சித்திரம் கிடைக்கும்.

மேற்கு நாடுகள் இலங்கை அரசாங்கத்தின் மீது அழுத்தத்தைப் பிரயோகிக்கும் அதே சமயம் நீதிக்கான தமிழ் மக்களின் கோரிக்கைகளை முழுமையாக ஏற்றுக்கொள்ளவில்லை. அதோடு தமிழ் மக்களுக்கு அனைத்துலக அளவில் இருக்கக்கூடிய ராஜதந்திர வாய்ப்புகளின் வரையறைகளையும் அவை உணர்த்துபவைகளாகக் காணப்படுகின்றன.

எனினும் 15 ஆண்டுகளின் பின்னரும் நீதிக்கான தமிழ் மக்களின் போராட்ட வழியில் தமிழ் மக்கள் மெதுமெதுவாக முன்னேறி வருகிறார்கள் என்பதனை பிரித்தானியாவின் தடை உணர்த்துகின்றது. குறிப்பாக நீதிக்கான தமிழ் மக்களின் போராட்டத்தில் புலம் பெயர்ந்த தமிழர்கள் பெற்ற ஆகப்பிந்திய வெற்றியாகவும் அதைக் கூறலாம்.

அண்மையில் கனேடிய உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பும் அத்தகையதே. கனடாவில் நிறைவேற்றப்பட்ட இனஅழிப்பு அறிவூட்டடல் தீர்மானத்திற்கு எதிரான வழக்கில் கனேடிய உயர் நீதி மன்றத்தின் தீர்ப்பு தமிழ் மக்களுக்கு உற்சாகமூட்டுவது.

இவை யாவும் வரையறைக்குட்பட்ட வெற்றிகள் தான். நீதிக்கான போராட்டத்தில் தமிழ் மக்கள் மேலும் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியுள்ளது. கனடா. அமெரிக்கா பிரித்தானியா போன்ற நாடுகள் விதித்திருக்கும் தடைகளும் குறிப்பாக கனடாவில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானங்களும் நீதிக்கான தமிழ் மக்களின் போராட்டத்துக்கு உற்சாகமூட்டுபவை.


அதேசமயம் மேற்கு நாடுகளின் மேற்படி நகர்வுகள் யாவும் அந்தந்த நாடுகளின் பூகோள ராணுவ அரசியல் பொருளாதார நலன்களின் அடிப்படையில் எடுக்கப்பட்ட முடிவுகள் தான் என்பதையும் தமிழர்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். அதை அவர்கள் தமிழ் மக்களின் பெயரால் பொறுப்புக்கூறல் என்ற தலைப்பின் கீழ் இராஜதந்திரமாக முன்னெடுக்கின்றார்கள். இந்த விடயத்தில் மேற்கு நாடுகள் மட்டுமல்ல இந்தியா.சீனா. ஐநா முதலாக உலகில் எந்த ஓர் அரசுக் கட்டமைப்பும் இலங்கைத் தமிழர்களின் விடயத்தில் அவ்வாறு தான் முடிவுகளை எடுக்கும். அரசுகள் எப்பொழுதும் தங்களுடைய இராணுவப் பொருளாதார அரசியல் நோக்கு நிலைகளில் இருந்துதான் முடிவுகளை எடுக்கும். ஏன் கடவுளுக்கு ஓர் அரசிருந்து அங்கு முடிவு எடுக்கப்பட்டாலும் அப்படித்தான் அமையும்.

இதில் தமிழர்கள்தான் தங்களுடைய நலன்களும் வெளி அரசுகளின் நலன்களும் இடை வெட்டும் ஒரு பொதுப் புள்ளியைக் கண்டு பிடித்து அங்கிருந்து தொடங்கி தமக்குக் கிடைத்திருக்கும் ராஜதந்திர வாய்ப்புகளை எப்படி முழு வெற்றியாக மாற்றுவது என்று திட்டமிட்டுச் செயற்பட வேண்டும்.


அதாவது தமிழ் மக்கள் உலக அளவில் தங்களுக்குள்ள வரையறைகளையும் வாய்ப்புகளையும் நன்கு விளங்கி வைத்திருக்க வேண்டும். கிடைத்திருக்கும் வாய்ப்புக்களைப் பயன்படுத்தி வரையறைகளை எப்படிக் கடப்பது அல்லது உடைப்பது என்று திட்டமிட்டுச் செயற்பட வேண்டும்.

கடந்த 15 ஆண்டுகளாக நிறைவேற்றப்பட்ட தடைகளும் தீர்மானங்களும் (22ம் பக்கம் பார்க்க)


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?





மேடராசி அன்பர்களே1 சுப நிகழ்ச்சிகள் தங்கு தடையின்றி நடக்கும். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த காரியங் களில் வேகம் பிறக்கும். வீடு, வாகனம் மூலம் செலவுகள் ஏற்படலாம். சமூகத்தில் மதிப்பும், மரியாதையும் கூடும். தொழில் வியாபாரத்தில் புத்தி சாதுரியத்தால் முன் னேற்றம் காண்பீர்கள். உத்யோகத்தில் நிர்ப்பந்தமாக இடமாற்றம் அல்லது பணிமாற்றம் இருக்கலாம். குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் குறையும்.




ரிஷபராசி அன்பர்களே! எந்த காரியத்திலும் இருந்து வந்த தடை தாமதம் நீங்கும். வீண் பிரச்னைகள் அகலும். நண்பர் கள் உறவினர்களுடன் நீடித்து வந்த மன வருத்தம் நீங்கும். பயணங்கள் செல்ல நேரிடும். கூட்டு தொழில் அல்லது வியா பாரம் செய்பவர்கள் கவனமாக இருப் பது நல்லது. உத்யோகத்தில் வீண் அலைச்சல் உண்டாகும். வேலைப் பளு கூடும். குடும்பத்தில் அடுத்தவர்களால் ஏதேனும் குழப்பம் உண்டாகலாம்.





மிதுனராசி அன்பர்களே! பொருள் வரத்து அதிகரிக்கும். கொடுத்த வாக்கை காப்பாற்று வீர்கள். நண்பர்கள் மூலம் எதிர் பார்த்த உதவி கிடைக்கும். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்கள் அனுகூலமாக நடந்து முடியும். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் இடமாற்றம் உண்டாகலாம். குடும்பத்தில் இருந்த சண் டைகள் நீங்கும். கணவன், மனைவிக் கிடையே இருந்த இடைவெளி குறையும்.





கடகராசி அன்பர்களே! வாக்கு வன்மையால் காரிய அனுகூலம் உண்டாகும். தேவையான நேரத் தில் மற்றவர்களின் உதவி கிடை க்கும். புதிய சொத்து வாங்குவ தில் கவனம் செல்லும். தொழில் வியாபாரம் முன்னேற்றமடைய தேவையான உதவிகள் கிடைக்கும். திறமையான பேச்சின் மூலம் உத்யோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரி கள் சொல்வதை செய்வதன் மூலம் நன்மை கிடைக்க பெறுவர். குடும்பத்தில் அமைதி ஏற்படும்.





சிம்மராசஜ அன்பர்களே! காரிய ங்களில் இருந்து வந்த தடை தாமதம் நீங்கும். புதிய வீடு வாகன சேர்க்கை உண்டாகும். மனதில் இருந்த குழப்பங்களுக்கு விடை கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த மந்த நிலை மாறும். பழைய பாக்கிகள் வசூலாகும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சலும், வேலை பளுவும் ஏற்படலாம். வார்த்தை களில் நிதானம் அவசியம்.




கன்னிராசி அன்பர்களே! எல்லா காரியங்களிலும் அதிக முயற்சி மூலம் வெற்றி கிடைக்கும். கடன் பிரச்னை தீரும். தகராறு, வழக்குகளில் சாதகமான போக்கு காண ப்படும். மறைமுக எதிர்ப்புகள் விலகும். கவுரவம் அதிகரிக்கும். மறைமுக நோய் நீங்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் நீங்கும். பழைய பாக்கிகள் வசூ லாகும். உத்யோகத்தில் வேலைப் பளு குறையும். முயற்சிகள் காலதாமதமாக பலன் கொடுக்கும்.




துலாம்ராசஜ அன்பர்களே! சுபச் செலவு அதிகரிக்கும். வாகனங் கள் பயன்படுத்தும் போது கவனம் தேவை. சிலருக்கு இட மாற்றம் உண்டாகலாம். நண்பர்கள் மூலம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த மந்த நிலை நீங்கும். உங்களது பொருட்களை வாடிக்கையாளர்களுக்கு அனுப்பும் போது கவனம் தேவை. உத்யோகத்தில் அடுத்த வரை நம்பி பொறுப்புக்களை ஒப்படை ப்பதை தவிர்ப்பது நல்லது. பெண்கள் அடுத்தவருக்கு உதவி செய்யும் போது கவனம் தேவை.





விருச்சிகராசி அன்பர்களே! எதையும் சாதிக்கும் திறமையும், சாமர்த்தியமும் அதிகமாகும். புதிய நண்பர்கள் கிடைப்பது டன் அவர்களால் நன்மையும் உண்டா கும். மரியாதை கூடும். தன்னம்பிக்கை யுடன் செயலாற்றுவீர்கள். தொழில் வியா பாரம் முன்னேற்ற பாதையில் செல்லும். தேவையான பண உதவியும் கிடைக்கும். கடன் தொல்லை குறையும். தொழில் போட்டிகள் நீங்கும். உத்தியோகத்தில் எதிர் பார்த்த பதவி உயர்வு கிடைக்கும்.








தனுசுராசி அன்பர்களே! எடுக் கும் முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும். தடைகள் அனைத்தையும் தகர்ப்பீர்கள். உடல் ஆரோக்கியத்தில் இருந்த மந்த நிலை மாறும். பணவரவு நிதானமாக இருக்கும். மற்றவர்கள் உங்கள் மேல் கொண்டிருந்த கோபம் அகலும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். புதிய தொழில் ஆரம்பிக்க வேண்டிய சூழ் நிலை ஏற்படும். உத்யோகத்தில் இருப்ப வர்கள் நிதானம் தேவை.




மகரராசி அன்பர்களே! தேவை யற்ற வீண் படபடப்பு ஏற் படும். நீண்ட நாட்களாக வாங்க வேண்டும் என்று எண்ணியபொருட்களை வாங் குவீர்கள். தொழில் வியாபாரம் தொடர்பாக இருந்து வந்த குழப்பங்கள் நீங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திட்ட மிட்டு காரியங்களை செய்து எதிர்பார்த்த வெற்றியை அடைவார்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். கணவன், மனைவிக் கிடையில் நெருக்கம் உண்டாகும்.




கும்பராசி அன்பர்களே! வீண் மனக்கவலைகள் நீங்கும். கனவு தொல்லைகள் உண்டாகும். பணவரத்து திருப்தி தரும். நண்பர்கள் மூலம் உதவி கிடைக்கும். ஆடம்பர செலவுகள் ஏற்படும். தொழில் வியாபாரம் திருப்திகரமாக நடக்கும். தொழிலை விரிவுபடுத்துவதற்கான செய லில் ஈடுபடுவீர்கள். உத்யோகத்தில் இருப் பவர்கள் கடுமையாக உழைக்க வேண்டி இருக்கும்.




மீனராசி அன்பர்களே! எல்லா முயற்சிகளும், காரியங்களும் சாதகமான பலன் தரும். மன தில் இருந்த தயக்கம், பயம் நீங்கும். வெளியூர், வெளிநாடு பயணங்கள் செல்ல எடுக்கும் முயற்சிகள் சாதகமாக முடியும். தொழில் வியாபாரம் முன்னேற்ற மடையும். லாபம் அதிகரிக்கும். உத்தி யோகத்தில் பதவி உயர்வும் கூடுதல் பொறுப்புகளும் கிடைக்கும். வர வேண் டிய பணம் வந்து சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சியான நிலை காணப்படும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# பிரிட்டன் தடை உணர்த்துவது என்ன?

(1ம் பக்கத் தொடர்ச்சி) நீதிக்கான தமிழ் மக்களின் போராட்டத்துக்கு கிடைத்த உற்சாகமூட்டும் வெற்றி களாகும். தமிழ் மக்கள் யாருக்கு எதிராக நீதியைக் கேட்டு போராடு கிறார்களோ அவர்கள் அங்கு தண்டி க்கப்படுகிறார்கள். மேற்கு நாடுகளின் தடைகள் ஒரு விதத்தில் தமிழ் மக்களுக்கும் வரையறைகளை உணர்த்துபவை தான். என்றாலும் சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பு க்கு எதிராக அதன் தலைக்கு மேல் தொங்கிக் கொண்டிருக்கும் கத்தி களாக அவை காணப்படுகின்றன. இந்த விடயத்தில் மேற்கு நாடுகள் தங்களோடு முழுமையாக இல்லை என்று கருதி தமிழ் மக்கள் அவற் றுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுக்கத் தேவையில்லை. தடைகள் விடயத்தில் மேற்கும் ஐநாவும் அரை வாசி அளவுக்கு தமிழ் மக்களுக்குச் சாதகமாக நிற்கின்றன. எனவே தமக்கு கிடைத்திருக்கும் பாதியளவு சாதகமான ராஜதந்திர வாய்ப்புகளை முழு அளவு சாதகமானவைகளாக எப்படி மாற்றுவது என்று தான் தமிழ்த் தரப்பு சிந்திக்க வேண்டும்.

வெளியரசுகள் அவற்றின் நலன் சார்ந்து எடுக்கும் நகர்வுகளை எப்படி ஈழத் தமிழர்கள் தமது நலன் சார்ந்து வெற்றிகரமாகக் கையாள லாம் என்று சிந்திக்க வேண்டும். இதைத் தொகுத்துச் சொன்னால் தமிழ் மக்கள் ஓர் அரசு போல சிந்தி க்க வேண்டும். ஒரு அரசு இன் னொரு அரசோடு கொள்ளும் உறவு களில் இரண்டு தரப்புக்கும் பொது வான நலன்கள் ஒன்றை ஒன்று வெட்டும் புள்ளியில்தான் உறவுகள் விருத்தி அடைகின்றன. எனவே ஈழத் தமிழர்கள் ஓர் அரசு போல சிந்தித்து முடிவெடுக்க வேண்டும். ராஜதந்திரத் தில் நலன்கள் தான் முக்கியம். அறம் தர்மம் நீதி போன்றவை அங்கே கிடையாது. தொப்புள்கொடி உறவு இதயமும் இதயமும் கலக்கும் உறவு என்பவையெல்லாம் கிடையாது. நலன்களும் நலன்களும் இடை வெட்டும் புள்ளிகளைத் தீர்க்க தரிசனமாகக் கையாள்வது தான் ராஜதந்திரம். எனவே ஓர் அரசுபோலச் சிந்தித்து ஈழத் தமிழர்கள் முடி வெடுக்க வேண்டும்.

பிரித்தானியாவின் தடை தமிழ் மக்களுக்கு அண்மையில் கிடைத் திருக்கும் ஒரு வெற்றி. அந்த வெற்றி முழுமையானது இல்லை. அதை எப்படி ஒரு முழுமையான ராஜதந்திர வெற்றியாக மாற்றுவது என்பது ஈழத் தமிழர்கள் ஓர் அரசுபோலச் சிந்தித்து முடிவெடுப் பதில் தான் தங்கியிருக்கின்றது. ஆனால் ஓர் அரசு போல் சிந்திப்ப தென்றால் அதற்கு முதலில் தமிழ் மக்கள் ஒரு தேசமாகத் திரள வேண் டும்

# மக்கள் யாருடைய பக்கம்? மக்கள் யார் பக்கம்?

(20ம் பக்கத் தொடர்ச்சி) தம்மை தமிழரசுக் கட்சியை ஆதரிப்பார்கள் என்று தான் நம்புவதாக எதிர்பார்ப்பதாக. ஆனால், தமிழரசுக் கட்சி என்பது எப்போதோ காலாவதியாகிப் போன ஒன்று. அதற்கு உயிரூட்ட முயற்சிப்பது இறந்த உடலுக்கு saline ஏற்றுவதைப் போன்றதாகும். அதனால் எந்தப் பயனும் ஏற் படாது.

ஆக, உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் வடக்குக் கிழக்கில் தேசிய மக்கள் சக்தியோடு தமிழ்க் கட்சிகள் மோதப் போகின்றன. அதைப்போலத் தமிழ்க்கட்சி களோடு தேசிய மக்கள் சக்தி மோதப் போகிறது. இதற்கிடையில் தேசிய மக்கள் சக்தியோடும் ஏனைய தமிழ்த் தரப்புகள் ஒவ்வொன்றும் மோதவுள்ளன. ஆக கடுமையான ஒரு போட்டிக்களமாகவே இருக்கப் போகிறது வடக்குக் கிழக்கின் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தற்களம். மக்கள் யாருடைய பக்கம்? மக்களின் பக்கம் யார்?

# அமெரிக்காவின் கதவுகள் மூடப்பட்டால்

(8ம் பக்கத் தொடர்ச்சி) முன்வைக்கப்படவுள்ளன. எனவே புதிய சட்டத் துடன் புதிய ஜி.எஸ்.பி. பிளஸ் வரவுள்ளது. அதற்கமைய தற்போது ஜி.எஸ்.பி. பிளஸ் கிடைக்கப் பெறும் சுமார் 6 நாடுகள் அதனை இழக்க நேரிடும். பயங்கரவாத தடைச்சட்டம், நல்லிணக்கம் மற்றும் ஊழல் ஒழிப்பு தொடர்பில் இலங்கை என்ன செய்திருக்கிறது என்பதையும் ஐரோப்பிய ஒன்றி யம் ஆராயும். இன்னும் இரு வாரங்களில் ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழு இலங்கை வரவுள்ளது. வந்ததன் பின்னர் நிச்சயம் இவை தொடர்பில் அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும்.

அமெரிக்காவினால் கதவுகள் அடைக்கப்படும் போது, ஐரோப்பிய ஒன்றியத்தின் தகவுகள் திறக்கப்படும் என்று எவராவது எண்ணினால் அது முற்றிலும் தவறாகும். ஜி.எஸ்.பி. பிளஸ் வரி சலுகையை மீளப் பெற்றுக் கொள்வதற்கு எந்தளவுக்கு இலங்கை போராடியது என்பதை என்னைத் தவிர இந்த பாராளுமன்றத்தில் யாருக்கும் தெரியாது. எனவே இவை தொடர்பில் அரசாங்கம் தீர்க்கமாக சிந்தித்து செயற்பட வேண்டும் என்றார்.

# கை பேசி சாட்சி

(15ம் பக்கத் தொடர்ச்சி) என்பதனை தமக்கு உணர்த்து வார்கள். அதில் ஒரு மனிதாபிமானம் உண்டு. அந்த உதவியைச் செய்வ தனால் அவர்களுக்கு எந்த நட்டமும், இழப்பும் கிடையாது. ஆனால் அந்த உதவியினால் ஓர் உயிர் பாதுகாக்கப் படும்.

எனவே சமூகத்தில் பெரும்பாலானவர்கள் அவ்வாறான உதவிகளைச் செய்பவர்கள் தான். அந்தப் பெண் தாக்கப்படுகையில் படம் எடுத்தவரையும் அப்படித்தான் பார்க்க வேண்டும். இந்த இடத்தில் நீதியின் அளவுகோல்களையும் தர்மத்தின் அளவுகோல்களையும் வைத்துக் கொண்டு அந்த கைபேசிக்காரரை விமர்சிக்கத் தேவையில்லை. அந்தப் பெண்ணுக்கு நீதி கிடைப்பதற்கான தொடக்கமே அந்தக் காணொளி தான்.

மேலும் அந்த படம் எடுத்த நபர் மட்டு மல்ல அங்கு சூழ்ந்திருந்த அனேகமான வர்கள் அந்த அக்கிரமத்தைத் தடுக்க முயற்சிக்கவில்லை. எல்லாருமே பார்வை யாளர்களாகத் தான் தோன்றுகிறார்கள்.

அவர்கள் ஏன் அந்த அக்கிரமத்தைத் தடுக்காமல் பார்த்துக் கொண்டிருந்தார் கள்? ஒரு மகத்தான போராட்டத்தை நடத்திய மக்கள் மத்தியில் இப்படிப் பட்ட அக்கிரமம் ஒன்று நிகழும் பொழுது, அந்தச் சிறுமை கண்டு பொங்கி எழ ஒருவர் கூட இருக்க வில்லையா? இதுபோன்ற விடயங்களில் சிறுமை கண்டு பொங்க வேண்டிய ஒரு மக்கள் கூட்டம் பார்வையாளராக நிற்பது எதைக் காட்டுகிறது?

இப்படித்தான் சில மாதங்களுக்கு முன்பு கிளிநொச்சியில் ஊடகவியலாளரான தமிழ்ச்செல்வனை அவர் எழுதிய ஒரு செய்திக்காக(27ம் பக்கம் பார்க்க)

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

# அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் வரி விதிப்பை 90 நாட்களுக்கு இடை நிறுத்தியது ஏன்?

பல நாடுகள் மீது டொனால்ட் டிரம்ப் விதித்த பரஸ்பர வரியை 90 நாட்கள் இடைநிறுத்தம் செய்வதாகத் தெரிவித்துள்ளார். இதனால், தைவான், ஜப்பான், தென் கொரியா உள்பட ஆசிய பங்குச் சந்தைகள் நேற்று வியாழக்கிழமை காலை முதல் ஏற்றம் கண்டு வருகின்றன.

முன்னதாக செவ்வாய்க்கிழமை பரஸ்பர வரியை இடைநிறுத்தம் செய்ய டிரம்ப் முடிவு செய்ததாகத் தகவல் வெளியானது. ஆனால், அப்போது இதை வெள்ளை மாளிகை மறுத்து விட்டது. இருப்பினும் இந்தச் செய்தியால் குறுகிய காலத்துக்குப் பங்குச் சந்தைகள் ஏற்றம் கண்டன. வெள்ளை மாளிகை மறுத்த 90 நாட்கள் பரஸ்பர வரி இடைநிறுத்தம் தற்போது நடைமுறைக்கு வந்துள்ளது.

வரிகளை அறிவித்த பின் அதை இடைநிறுத்தம் செய்து தனிப்பட்ட முறையில் நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தும் திட்டமே இருந்ததாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

பல நாட்களாக, அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பும் அவரது வெள்ளை மாளிகை அதிகாரிகள் குழுவும் பல்வேறு நாடுகள் மீது 'பரஸ்பர' வர்த்தக வரிகளை விதிக்கும் தங்கள் முடிவில் முழு உறுதியுடன் இருப்பதாக வலியுறுத்தி வந்தனர்

கடந்த செவ்வாய்க்கிழமை (ஏப்ரல் 8) அன்று அதிபர் டிரம்ப் இந்த வரிவிதிப்பை 90 நாட்களுக்கு தற்காலிகமாக நிறுத்தி வைக்க பரிசீலிப்பதாக ஒரு செய்தி வெளிவந்தது. இந்தச் செய்தி பங்குச் சந்தையில் ஒரு சிறிய ஏற்றத்தை ஏற்படுத்தியது. ஆனால், இந்தச் செய்தியை அமெரிக்க அதிகாரிகள் கேலி செய்தனர்.



ஆனால் இப்போது சில குறிப்பிடத்தக்க விதிவிலக்குகளுடன், அந்த வரி விதிப்பைத் தற்காலிகமாக நிறுத்தி வைப்பது நிஜமாகிவிட்டது. இதன் காரணமாக, உலகளாவிய பொருளாதார ஒழுங்கை மறுசீரமைக்கும் நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன. மேலும் அமெரிக்க உற்பத்தித் துறையில் பொற்காலத்தைக் கொண்டு வரப் போவதாக டிரம்ப் அளித்த வாக்குறுதி நிறைவேறுவது சற்றுத் தாமதமாகும்.

அமெரிக்க அரசு முதலில் அதிக இறக்குமதி வரிகளை விதித்து, பிறகு அதைத் தற்காலிகமாக நிறுத்தி, ஒவ்வொரு நாட்டுடனும் தனித்தனியாக பேச்சுவார்த்தை நடத்துவது தொடக்கத்தில் இருந்தே திட்டமிடப்பட்ட ஒரு செயல்தான் என்று வெள்ளை மாளிகை கூறியுள்ளது.

இந்த அறிவிப்பு வெளியான சிறிது நேரத்திலேயே, 75க்கும் மேற்பட்ட நாடுகள் எங்களைத் தொடர்பு கொண்டுள்ளன. இந்த எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கக் கூடும் என்று நான் நினைக்கிறேன்', என்று அமெரிக்க கருவூல செயலாளர் ஸ்காட் பெசன்ட் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

வெள்ளை மாளிகையின் இத்தகைய நடவடிக்கை ஆச்சரியம் தரக்கூடியது அல்ல. மேலும் அந்த அறிவிப்புக்கு முன்பு, முதலீட்டாளர்கள் பயத்தில் தங்கள் முதலீடுகளை விற்றனர், பத்திரங்களின் மதிப்பு குறைந்து சந்தை வீழ்ச்சியடைந்தது மற்றும் மக்கள் அரசின் மீது அதிருப்தி அடைந்தனர். இந்த காரணிகளை அரசாங்கத்தால் புறக்கணிக்க முடியாது. அப்படியென்றால் டிரம்பின் இந்த முடிவானது எதிர்பாராமல் நடந்த சிக்கலின் காரணமாக ஏற்பட்ட ஒரு திட்டமிடப்பட்ட பின்வாங்கலா? அல்லது அவர் வழக்கமாகப் பயன்படுத்தக் கூடிய பேரம் பேசும் உத்தியைப் பயன்படுத்தினாரா? தான் எடுத்த முடிவுகளில் இருந்து டிரம்ப் ஒரு போதும் பின்வாங்க மாட்டார் என்று கூறிய அவருடைய ஆதரவாளர்கள், தற்போது இந்த இடை நிறுத்தத்தைக் கொண்டாடி வருகின்றனர்.

வர்த்தக ஆலோசகர் பீட்டர் நவரோ, டிரம்பின் வரி விதிப்பு நிலைமை 'எதிர்பார்த்த படியே சரியாக நடந்தது' என்று கூறினார்.

அதிபர் டிரம்பின் செயல்பாடுகளை நீங்கள் இன்னும் புரிந்து கொள்ளவில்லை. அவரது நடவடிக்கைகள் மூலமாக ஒட்டு மொத்த உலகத்தின் கவனத்தை அமெரிக்கா ஈர்க்கிறது' என்று செய்தித் தொடர்பாளர் கரோலின் லீவிட் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அமெரிக்க முன்னாள் அதிபர் டொனால்ட் டிரம்ப், தனது ட்ரூத் சோஷியல் சமூக ஊடக பக்கத்தில் சில இறக்குமதி வரிகளை நிறுத்தி வைப்பதாக அறிவித்தார். ஆனால் இந்த அறிவிப்பில் தெளிவான விவரங்கள் இல்லை.

ஐரோப்பிய ஒன்றியத்திற்கு (EU) இந்த வரி விலக்கு பொருந்துமா என்பதும், மெக்சிகோ மற்றும் கனடா போன்ற நாடுகள், ஏற்கெனவே அடிப்படை 10% அடிப்படை வரிகளுக்கு உட்படுத்தப்படாத நிலையில், இந்த வரி விலக்கு அவர்களின் நிலையை மாற்றுமா என்பதும், குறிப்பிட்ட துறைகளை இலக்காகக் கொண்ட வரிகளுக்கு இந்த வரி விலக்கு பொருந்துமா என்பதும் தெளிவில்லை.

இறுதியில் வெள்ளை மாளிகை இந்தக் கேள்விகளுக்கு சில தெளிவை வழங்கியது. ஆனால் பல மணிநேரம் அமெரிக்காவின் வர்த்தக கூட்டாளிகள் டிரம்பின் இந்த சமூக ஊடக பதிவைக் கூர்ந்து கவனித்தன. பத்திரிகையாளர்கள் கேட்ட கேள்விகளுக்குக் கிடைத்த பதில்களையும் வைத்து விவரங்களைப் புரிந்து கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. புதன்கிழமை மதியம், டிரம்ப் பங்குச் சந்தை மோசமாக இருந்ததையும், முதலீட்டாளர்கள் கவலை அடைந்ததையும் ஒப்புக் கொண்டார். அவர் இதற்கு முன்பு பங்குச் சந்தை குறித்துப் பெருமையாகப் பேசியதற்கு இது எதிராக இருந்தது. மேலும் வரி



விதிப்பு குறித்த மாற்றத்திற்கான காரணத்தையும் இது வெளிப்படுத்தியது.

புதன்கிழமை டிரம்ப் தனது ட்ரூத் சோஷியல் பக்கத்தில் மக்களை அமைதி யாக இருங்கள்' என அறிவுறுத்தியதோடு, 'எல்லாமே சரியாக முடியும்' என்றும் உறுதியளித்தார்.

திங்கட்கிழமை, அவர் 'பயந்தவர்கள்' என்று அழைத்த ஒரு குழுவைக் கடுமையாக விமர்சித்தார். தனது முயற்சிகளுக்குப் பொறுமையாக இருக்க முடியாத பலவீனமான மற்றும் முட்டாள்தனமான மக்கள்' எனக் குற்றம் சாட்டினார். ஆனால், இப்போது டிரம்பே தனது நிலைப்பாட்டில் இருந்து பின்வாங்கியுள்ளார்.

இருப்பினும், இந்த வரி அறிவிப்பு தவிர்க்க முடியாத ஒன்று என்றும், எந்தவொரு பொருளாதார சீர்குலைவுகளும் அமெரிக்க பொருளாதாரத்தில் பரவ அனுமதிக்கப்பட்ட ஒரு நோயைப் பிரதிபலிக்கின்றன என்றும் அவர் கூறினார்.

இதற்கிடையில் ஜனநாயகக் கட்சியினர் டிரம்பின் நிலைமையை அவ்வளவு நம்பிக்கையானதாகத் தெரியவில்லை என்று குறிப்பிட்டனர். மேலும், 'டிரம்ப் குழப்பத்தில் ஆட்சி செய்வதாகவும்' என்று அமெரிக்க நாடாளுமன்றத்தின் சிறுபான்மையினருக்கான தலைவர் சக் மர் விமர்சித்தார். அவர் தளர்ந்திருக்கிறார், பின்னடைவைச் சந்திக்கிறார், அது நல்ல விஷயம், என்றும் அவர் கூறினார்.

இறுதியில், டிரம்பின் முடிவுக்குப் பின்னால் உள்ள சிந்தனை உண்மையில் முக்கியமற்றதாக இருக்கலாம். உண்மையில், இந்த வரி விதிப்பால் பாதிக்கப்பட்ட நாடுகளுடன் நல்லுறவைப் பேண அமெரிக்கா முயன்று வருகிறது. தற்போதும், 10வீத வரியை டிரம்ப் தொடர்கிறார். இது சில வாரங்களுக்கு முன் நடந்திருந்தால், பரபரப்பை ஏற்படுத்தியிருக்கும்.

இது பின்னடைவை ஏற்படுத்திய போதிலும், பங்குச் சந்தைகள் மீண்டு வருகின்றன. மேலும், சீனாவுடன் வர்த்தகப் போரில் டிரம்ப் ஈடுபட்டுள்ளார். அவர் சீன இறக்குமதிகளுக்கு 125வீத வரி விதித்துள்ளார்.

அமெரிக்காவின் நடவடிக்கை, உலகப் பொருளாதாரத்தில் விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். ஆனாலும், இது ஜனநாயகக் கட்சித் தலைவர் ஜோ பைடனின் வெளியுறவுக் கொள்கை உள்பட அமெரிக்காவின் தற்போதைய வெளியுறவுக் கொள்கைக்கு ஏற்றதாக இருக்கிறது. ஏனெனில் இதன் மூலம் சீனாவின் லட்சியங்களைக் கட்டுப்படுத்த அமெரிக்கா முயல்கிறது.

இருப்பினும் டொனால்ட் டிரம்ப் கடந்த வாரம் எடுத்த பொருளாதார நடவடிக்கைகள், அமெரிக்காவின் கூட்டாளிகளை நெருக்கடியில் தள்ளியது. இது உலக ஒழுங்கிற்கு அச்சுறுத்தலாக அமைந்திருக்கிறது. இப்படியான ஒரு திட்டத்தை எதிர்காலத்தில் முன்னெடுப்பதை இது மேலும் கடினமாக்கியுள்ளது.

மேலும் 90 நாட்களில், டிரம்பின் இடைக்கால வரி விதிப்பு முடிவுக்கு வரும்போது, தற்போது உள்ளதைப் போன்ற பொருளாதாரச் சூழல் மற்றும் நிச்சயமற்ற தன்மை மீண்டும் தொடங்கலாம்.

பரஸ்பர வர்த்தக வரிகள் மீதான அதிபர் டிரம்பின் வியக்கத்தக்க மாற்றத்திற்குப் பிறகு, ஆசிய-பசிபிக் பங்குச் சந்தைகள் உயர்ந்துள்ளன.

அதிபர் டிரம்பின் இந்தத் தற்காலிகமாக வரி விதிப்பை நிறுத்துவதற்கான நடவடிக்கை, ஆசிய பங்குச் சந்தைக்கான ஒரு உயிர்நாடியாக இருந்து வருகிறது. அவை 'நெருக்கடியில் இருந்து நெகிழ்ச்சியான முசூழலுக்கு மாறியுள்ளன' என்று பொருளாதார வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

உலகின் பெரும்பாலான நாடுகள் மீது டிரம்ப் அதிக வரிகள் விதிப்பதை நிறுத்தி சீனா மீதான வரிகளை உயர்த்தியதை அடுத்து, புதன்கிழமை (ஏப்ரல் 9) வால் ஸ்ட்ரீட்டில் பங்குகள் மிகப் பெரிய ஏற்றத்தைக் கண்டன.

இந்தப் பகுதியில் உள்ள பெரும்பாலான ஏற்றுமதியாளர்கள் 'மிகப் பெரிய நிம்மதிப் பெருமூச்சு விட்டனர்' என்று எஸ்பிஜ சொத்து மேலாண்மை நிறுவனத்தைச் சேர்ந்த ஸ்டீபன் இன்னஸ் கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர், 'சீனா மீது 125 சதவீதம் வரி விதிக்கப்பட்டு இருந்தாலும், உலகளாவிய பொருளாதார நெருக்கடி வெளிப்பட்டு நிலைமை மாறினால் அதுவும் சமாளிக்கக்கூடியதாக மாற வாய்ப்புள்ளது' என்றார்.நன்றி – பிபிசி

# வடபகுதி கடற்பரப்பில் அத்துமீறி மீன் பிடிக்கும் தமிழ்நாட்டு மீனவர்களை இலங்கை அரசு கைது செய்யக் கூடாதா?

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் வார இறுதி இலங்கை விஜயம் பெருமளவுக்கு வெற்றிகரமாக அமைந்ததாக பத்திரிகைகள் மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் மூலமாக அறியக்கூடியதாக இருக்கிறது

ஏப்ரல் 4 வெள்ளிக்கிழமை தொடங்கி ஏப்ரல் 6 ஞாயிற்றுக்கிழமை வரையிலான அவரின் விஜயத்தின் முக்கிய அம்சங்களாக இரு நாடுகளினதும் தேசிய பாதுகாப்புக்கு இடையிலான பிணைப்பின் தன்மையை அங்கீகரிக்கும் பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கை. இலங்கை மக்களின் சார்பில் ஜனாதிபதி அநுரா குமார திசாநாயக்கவினால் இந்திய பிரதமருக்கு வழங்கப்பட்ட ஶ்ரீலங்கா மித்ர விபூஷண விருது ஆகியவை அமைந்தன.

இணக்கபூர்வமான ஒரு சூழ்நிலையில் முரண்பாட்டுக்குரியதாக அமைந்தது வடபகுதி கடற்பரப்பிற்குள் பெரும் எண்ணிக்கையில் அத்துமீறிப் பிரவேசித்து தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மீனவர்கள் மீன்பிடிப் பிடிப்பதுடனும் இழுவைப்படகுகளை பயன்படுத்துவது போன்ற கெடுதியான நடைமுறைகள் மூலமாக கடல்வாழ் உயிரினங்களை நிர்மூலம் செய்து வருவதுடனும் தொடர்புடைய பிரச்சினை மாத்திரமேயாகும்.

இரு தலைவர்களும் எந்தளவுக்கு இந்த பிரச்சினை குறித்து விரிவாக ஆராய்ந்தார்கள் என்பது திட்டவட்டமாக தெரியவில்லை. ஆனால். அவர்களின் ஊடக அறிக்கைகள் இந்த பிரச்சினை தொடர்பில் வேறுபட்ட மனப்பான்மைகளைக் கொண்டிருப்பதை வெளிக்காட்டின.

இந்த பிரச்சினைக்கு நிலை பேறான தீர்வொன்றைக் காண்பதற்கு ஒத்துழைப்பு அணுகுமுறை ஒன்று தேவை என்று திசாநாயக்க வலியுறுத்தினார். இழுவைப் படகுகளினால் சுற்றுச் சூழலுக்கு ஏற்படுகின்ற பாரதூரமான சேதத்தை தடுத்து நிறுத்துவதற்கும் சட்டவிரோதமாக மீன்பிடிப்பதை தடுப்பதற்கும் தீர்க்கமான நடவடிக்கைகள் தேவை என்று நாம் கோருகிறோம் என்று அவர் மேலும் கூறினார்.

ஆனால் மறுபுறத்தில் இந்திய பிரதமர் மோடி பெருமளவுக்கு நம்பிக்கையுடனான ஒரு அணுகுமுறையை கடைப்பிடித்தார். இந்த பிரச்சினை வாழ்வாதாரத்துடன் தொடர்புடையது என்று வர்ணித்த அவர் மனிதாபிமான அணுகுமுறை ஒன்று கடைப் பிடிக்கப்பட வேண்டும் என்று இலங்கை ஜனாதிபதியும் தானும் இணங்கியிருப்பதாக குறிப்பிட்டார். இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இந்திய மீனவர்களும் கைப்பற்றப்பட்ட அவர்களது படகுகளும் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

அதை தொடர்ந்து இந்திய வெளியுறவு செயலாளர் விக்ரம் மிஸ்ரி நிறுவன ரீதியான கலந்தாலோசனைகளை தீவிரப்படுத்துவதற்கும் அண்மைய எதிர்காலத்தில் இரு நாடுகளினதும் மீனவர் சங்கங்களுக்கு இடையில் பேச்சுவார்த்தைகளுக்கு வசதி செய்வதற்கும் இணக்கம் காணப்பட்டதாக ஊடகங்களுக்கு கூறினார்.`

இரு தரப்புகளுக்கும் இடையிலான உயர்மட்டங்கள் உட்பட சகல மட்டங்களிலும் பேச்சு வார்த்தைகளில் தொடர்ச்சியான ஒரு அம்சமாக இது இருந்து வருகிறது என்று அவர் குறிப்பிட்டார்.

கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் செய்தியாளர்கள் மகாநாட்டில் உரையாற்றிய இந்திய வெளியுறவு செயலாளர் இரு தரப்புகளினாலும் கணிசமானளவு விரிவாக மீன்பிடிப் பிரச்சினை ஆராயப்பட்டது என்று கூறினார். இறுதியாக பார்க்கும்போது இது மீனவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினை என்றும் அண்மைக் காலத்தில் எடுக்கப்பட்ட குறிப்பிட்ட



சில நடவடிக்கைகளை மீள் பரிசீலனை செய்ய முடியும் என்றும் பிரதமர் வலியுறுத்தினார்.`

மீனவர் பிரச்சினை தொடர்பில் மனிதாபிமான அடிப்படையிலான ஒரு அணுகுமுறையைக் கடைப்பிடிப்பதை பற்றி வெளிப்படுத்தப்பட்ட உணர்வுகளுக்கு இணங்க இந்தியாவினாலும் இலங்கையினாலும் அடையாளபூர்வமான பரஸ்பர நல்லெண்ண சமிக்ஞை ஒன்று காண்பிக்கப்பட்டது.

சட்டமா அதிபரினால் எந்த குற்றச்சாட்டும் சுமத்தப்படாமல் தமிழ்நாடு இராமநாதபுரத்தைச் சேர்ந்த பதினொரு மீனவர்கள் இலங்கையினால் விடுதலை செய்யப்பட்டனர். வட பகுதி கடலில் அத்துமிறி மீன் பிடித்தமைக்காக இலங்கை கடற்படையினர் அவர்களை கைது செய்திருந்தனர். அதே போன்றே யாழ்ப்பாணத்தின் குருநகரைச் சேர்ந்த இரு மீனவர்களை இந்திய அதிகாரிகள் விடுதலை செய்தனர். சீரற்ற காலநிலை காரணமாக படகுகள் திசை மாறி இந்திய கடற்பரப்புக்குள் சென்றபோது அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

### பிரதமர் மோடி - தமிழ்க்கட்சிகள் சந்திப்பு

இது இவ்வாறிருக்க. வட இலங்கையின் டற்பரப்பில் இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடிப்பது மற்றும் இழுவைப் படகுகளைப் பயன்படுத்துவது தொடர்பான பிரச்சினையை ஏப்ரில் 5ஆம் திகதி இந்திய பிரதமருடனான சந்திப்பின் போது தமிழ் அரசியல் கட்சிகளின் ஒரு தூதுக் குழுவும் கிளப்பியது.

இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் சி.வி.கே. சிவஞானம். பொதுச் செயலாளர் எம்.ஏ. சுமந்திரன். யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன். மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம். தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் (புளொட் ) தலைவர் தருமலிங்கம் சித்தார்த்தன். அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவரும் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம். தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவரும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் ஆகிய எழுவர் அடங்கிய தூதுக்குழு மோடியைச் சந்தித்தது.

இவர்களது சந்திப்பு தொடர்பாக ` தி இந்து பத்திரிகையின் கொழும்பு செய்தியாளர் மீரா ஶ்ரீனிவாசன் அனுப்பிய செய்தி பின்வருமாறு`

வட இலங்கையினதும் தமிழ்நாட்டினதும் மீனவர்களைப் பாதிக்கும் மீன்பிடிப் பிரச்சினைக்கு தீர்க்கமான முறையில் தீர்வு காணுமுகமாக இழுவைப்படகுகள் மூலம் மீன்பிடிப்பதை தடை செய்ய வேண்டும் என்று இந்தியாவிடம் இலங்கை தமிழ் அரசியல் கட்சிகளின் தலைலர்கள் சனிக்கிழமை ( ஏப்ரில் 5. 2025)



வலியுறுத்திக் கேட்டுக்கொண்டனர். பாக்கு நீரிணையில் வளங்களுக்காக நீண்ட காலமாக நிலவிவரும் இந்த தகராறு குறத்து கவனத்துக்கு கொண்டு வந்த இலங்கை தமிழ் அரசியல்வாதிகள் போரினால் பாதிக்கப்பட்ட வட இலங்கை மீனவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் மோசமான பாதிப்புக்களையும் பாக்குநீரிணையில் கடல்சார் சூழல் தொகுதிக்கு ஏற்படுகின்ற அழிவுகளையும் விளக்கிக் கூறினர்.

இந்த சந்திப்பின் போது தமிழரசு கட்சியின் பொதுச்செயலாளர் சுமந்திரன் இழுவைப் படகுகளை பயன்படுத்தும் நடைமுறையை சாத்தியமானளவு விரைவாக முடிவுக்கு கொண்டு வருவதை நோக்கி மாற்று நடைமுறையை துரிதப்படுத்துவதற்கு 2016ஆம் ஆண்டில் இந்திய. இலங்கை அரசாங்கங்களுக்கு இடையில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையை நினைவுபடுத்தினார்.

2016 நவம்பரில் புதுடில்லியில் நடைபெற்ற அமைச்சர்கள் மட்ட பேச்சு வார்த்தைகளில் பங்கேற்ற இலங்கை தூதுக்குழுவின் ஒரு உறுப்பினரான சுமந்திரன் ஆழ்கடல் மீன்பிடியை ஊக்குவிப்பதற்கு இந்திய அரசாங்கத்தினால் மேற் கொள்ளப்பட்ட முயற்சிகளை நாம் வரவேற்பதாக பிரதமர் மோடியிடம் கூறினோம். ஆனால் இழுவைப்படகுகளை பயன்படுத்தும் நடைமுறை இன்றுவரை தொடருவதை நாம் அவரிடம் சுட்டிக்

கட்டுரையாளர்:-
மூத்த ஊடகவியலாளர்
- DBS ஜெயராஜ்-



காட்டினோம்` என்று கூறினர்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான சுமந்திரனால் கொண்டு வரப்பட்ட தனிநபர் சட்டமூலம் ஒன்றையடுத்து 2017 ஆம் ஆண்டில் இலங்கை இழுவைப் படகுகள் மூலம் மீன்பிடிப்பதை தடைசெய்தது. மீன் இனப்பெருக்கத்தை அனுமதிப்பதற்காக ஒவ்வொரு வருடமும் ஏப்ரில் நடுப்பகுதிக்கும் ஜூன் நடுப்பகுதிக்கும் இடைப்பட்ட சுமார் இரு மாதங்களில் இந்தியா அதன் கிழக்கு கரையோரத்தில் மீன்பிடிப்பதற்கு பருவகால தடைவிதிக்கும் நடைமுறையை தற்போது பின்பற்றுகிறது

இவ்வளவு பெருந்தொகையான மீன்பிடிப்படகுகள் இந்திய அதிகாரிகளினால் கட்டுப்படுத்தப்படாமல் அல்லது பிடிக்கப்படாமல் இலங்கைக் கடற்பரப்பிற்குள் எவ்வாறு ஊடுருவக் கூடியதாக இருக்கிறது என்பது இந்த பிரச்சினையில் இன்னொரு முக்கியமான விடயம். நடப்பவை குறித்து இந்திய அதிகாரிகள் வேண்டுமென்றே கண்டும் காணாமல் இருக்கிறார்கள் அல்லது அவ்வாறு கண்டும் காணாமல் இருக்குமாறு தங்களது அரசியல் எசமானர்களினால் அறிவுறுத்தப்படுகிறார்கள் .

அவர்களுக்கு இலஞ்சம் வழங்கப்படுகின்ற சாத்தியத்தையும் நிராகரிக்க முடியாது. காரணம் என்னவாக இருந்தாலும் பிரச்சினை கூர்மையடைந்து விட்டது. முன்னர் இந்திய மீன்பிடிப் படகுகள் வாரத்தில் மூன்று நாட்கள் மாத்திரமே இலங்கைக் கடற்பரப்புக்குள் ஊடுருவின. இப்போது அவை பெரும்பாலும் தினமும் வருகின்ற என்று தமிழரசு கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கடந்த வாரம் நெடுந்தீவில் ஒரு கூட்டத்தில் கூறினார்.

இந்திய - இலங்கை மீன்பிடித் தகராறு தொடர்பில் இந்தியாவில் இடம் பெறுகின்ற கதையாடல்களில் இலங்கையின் வடபகுதி தமிழ் மீனவர்களின் அவலங்கள் கவனத்தில் எடுக்கப்படுவதில்லை என்பது முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியதாகும். பிரச்சினை விரோத உணர்வைக் கொண்ட இலங்கை கடறனபடைக்கும் அப்பாவி தமிழ்நாட்டு மீனவர்களுக்கும் இடையிலான மோதலாகவே காண்பிக்கப்படுகிறது.


VIBRANT HOSPITALIT GROUP
தமிலோசை வழங்கும்
Canada Tamil Music Festival
இசைக் குயில் 2025
25 YEARS
APRIL
SATURDAY
12
2025
3 PM ONWARDS
TICKET $20
VIP TICKETS
DURHAM CONVENTION CENTER
630 BRCK CRESCENT AJAX, ON L1Z 1C9 | 416 556 3219
Announcers
MUSICAL BAND
NATCHATHRAA MUSIC GROUP

# மீனவர் பிரச்சனையில் தமிழ்நாடு



இலங்கை பயணத்தின்போது இந்திய பிரதமர் நரேந்திர மோடி தமிழ்நாட்டு மீனவர்களின் பிரச்னையை கண்டு கொள்ளவில்லை என்று தமிழ்நாட்டு முதலமைச்சர் ஸ்டாலின் கண்டனம் தெரிவித்திருக்கிறார். இலங்கை பயணத்தின் போது மோடி இது தொடர்பில் பேசியிருந்தார். தமிழ் கட்சிகளுடனான சந்திப்பின்போதும் இலங்கை மீனவர் பிரச்னை தொடர்பில் தமிழ் கட்சிகள் சுட்டிக்காட்டியிருந்தன என்று செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்தப் பிரச்சனை தொடர்பில் இந்தியாவின் நிலைப்பாட்டை மோடி, மீண்டும் தனது பயணத்தின் போது வெளிப்படுத்தியிருந்தார். அதாவது, 'இந்த விடயத்தில் மனிதநேய அணுகுமுறை வேண்டும் இதன் மூலம் அவர் என்ன கூறுகின்றார். இந்த விடயத்தில் இந்திய மீனவர்களை கைது செய்து தடுத்து வைப்பதோ அவர்களை தாக்குவதோ தீர்வல்ல. அதற்கு மாறாக, இந்த விடயத்தை மனித நேயத்தோடு அணுக வேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடு.

இந்த நிலைமையை எவ்வாறு மனித நேயத்தோடு அணுகுவது? இதிலுள்ள அடிப்படையான பிரச்னை தமிழ்நாடு. இது தொடர்பில் 'ஈழநாடு' முன்னரும் சில விடயங்களை சுட்டிக் காட்டியிருக்கிறது. இந்த விடயத்தில் தமிழ்நாட்டு அரசாங்கத்தின் ஆதரவு கட்டாயமானது. இது தொடர்பில், தமிழ்நாட்டை எவ்வாறு அணுகுவது என்று தமிழ் அரசியல் தரப்புகள் சிந்திக்க வேண்டும்.

தமிழ்நாட்டு முதலமைச்சர் ஸ்டாலினை இது தொடர்பில் அணுக வேண்டும். இது வரையில் இந்த விடயம் தொடர்பில் ஆக்கபூர்வமான சந்திப்புகள் எதனையும் தமிழ்த் தேசிய அரசியல் தரப்புகளாக தங்களை அடையாளப்படுத்துபவர்கள் முன்னெடுக்கவில்லை. அயலக மாநாட்டில் பங்கு கொள்கின்றனர். ஆனால் மீனவர் பிரச்னை தொடர்பில் உத்தியோகபூர்வமான பேச்சுகளில் இது வரையில் தமிழ் அரசியல் தரப்புகள் பங்கு கொள்ளவில்லை.

வெறுமனே இந்திய மத்திய அரசிடம் முறையிடுவதால் இந்தப் பிரச்சனையை கையாள முடியாது. இந்திய மத்திய அரசும் கூட, அவ்வாறான அணுகுமுறையையே விரும்புவதாகத் தெரிகிறது. இரண்டு தரப்புகளும் தங்களுக்குள் பேசி பிரச்சனையை தீர்ப்பதற்கான வழிவகைகளை ஆராய வேண்டும் என்றே கருதுவதாகத் தெரிகிறது. ஏனெனில், வடக்கு மாகாண அரசியல்வாதிகளும் தமிழ்நாட்டு அரசியல்வாதிகளும் உரையாடுவதில் ஒரு தடையுமில்லை.

கலாசார ரீதியாகவும் மொழி ரீதியாகவும் ஒருவரோடு ஒருவர் பின்னிப் பிணைந்த வரலாற்றைக் கொண்டிருப்பவர்கள். எனவே இந்தப் பிரச்சனையை தங்களுக்குள் பேசித் தீர்த்துக் கொள்ள முடியுமென்றே புதுடில்லி கருதக்கூடும். இந்த அடிப்படையில் தான், இந்திய மத்திய அரசு தொடர்ந்தும் மனிதநேய அணுகுமுறையை வலியுறுத்தி வருகிறது. எனவே, இந்த விடயத்தில் பிரச்சனைக்குரிய தரப்புகளான ஈழத் தமிழர் பிரதி நிதிகளும் தமிழ் நாட்டு அரசாங்கமும் உரையாட வேண்டும். வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெற்ற பின்னர் இரு மாகாண அரசாங்கங்கள் என்னும் வகையிலும் இந்த விடயத்தை அணுகலாம்.

# ஒற்றையாட்சியை நிராகரித்தல்

ஈழத் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தில் இந்தியாவின் நிலைப்பாடு கட்சிகளுக்கு அப்பால்பட்டது. இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஜெய்சங்கர் ஒருமுறை இந்திய பாராளுமன்றத்தில் இதனை தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார். 'நாங்கள் கடைப்பிடிக்கும் நிலைப்பாடானது ஏற்கனவேயிருந்த அனைத்து அரசாங்கங்களினதும் நிலைப்பாடாகும்', என்று அவர் கூறியிருந்தார்.

இலங்கைக்கு வருகை தரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இந்திய உயர் மட்டத்தினர் இந்த விடயத்தை வலியுறுத்தத் தவறியதில்லை. ஆனால், இந்தியாவை தமிழர் தரப்புகளால் தான் சரியாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. இந்தியா, ஈழத் தமிழர் பிரச்னையில் நேரடியாகத் தலையீடு செய்யும் முடிவை எடுத்து, ஈழ ஆயுத அமைப்புகளுக்கு பயிற்சியளித்த காலத்திலிருந்து ஒரு விடயத்தைத் தெளிவாக வலியுறுத்தியிருந்தது.அதாவது, இலங்கையை பிளவுபடுத்தும் நோக்கில் இந்தியா எந்தவொரு நகர்வையும் மேற்கொள்ளாது.

அதாவது தனிநாட்டு கோரிக்கையை இந்தியா ஒருபோதும் ஆதரிக்காது. அது மட்டுமல்ல அதனை அனுமதிக்கவும் மாட்டாது. இதன் பொருள் என்ன? ஈழ ஆயுத அமைப்புகள் எவையேனும் இந்தியாவை மீறி, தனிநாட்டை அடைய முற்பட்டால் அதனை இந்தியா அனுமதிக்காது. அப்போது, இலங்கைக்கான விசேட தூதுவராக நியமிக்கப்பட்டிருந்த பார்த்தசாரதி அனைத்து இயக்கங்களின் தலைவர்களுக்கும் இந்தியாவின் நிலைப்பாட்டை நேர்மையாகத் தெரியப்படுத்தியிருந்தார்.

உண்மையில், இந்தியா இது விடயத்தில் இரகசியமாக செயல்பட்டிருக்கவில்லை. இப்போதும் சிலர் இதற்கு சாட்சியாக இருக்கின்றனர். இதனைத் தொடர்ந்து தான் விடுதலைப் புலிகள் தவிர்ந்த இயக்கங்கள் தனிநாட்டை அடையலாம் என்னும் தங்களின் இலக்கு தொடர்பில் சந்தேகிக்கத் தொடங்கினர். இந்தியாவை விரோதித்துக் கொண்டு அதனை அடைய முடியாது என்னும் முடிவுக்கு வந்தனர். அவ்வாறு கருதிய இயக்கங்களே ஜனநாயக நீரோட்டத்தை தழுவிக் கொண்டன.

அன்றைய சூழலில், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டதன் ஊடாக மாகாண சபை முறைமையை சாத்தியப்படுத்தியது. அன்றிலிருந்து இந்தியாவின் கொள்கை நிலைப்பாடு மாகாண சபை முறைமை தான். அதிலுள்ள குறைபாடுகளை அனைவரும் அறிவர். குறிப்பாக மாகாண சபை முறைமையும் ஒற்றையாட்சி கட்டமைப்பும் ஒன்றையொன்று சமவலுவில் சார்ந்திருக்கவில்லை என்பது தான் அடிப்படையான பிரச்னையாகும். ஆனால், அவ்வாறானதொரு முறைமை தான் இந்தியாவில் இருக்கிறது.

தேசிய பாதுகாப்பை கருத்தில் கொண்டு மாகாண ஆட்சியை கலைக்கும் அதிகாரம் மத்திக்கு உண்டு. கருணாநிதி தலைமையிலான அரசாங்கம் ஒரு முறை அவ்வாறு கலைக்கப்பட்டும் இருக்கிறது. ஆனால், இங்கு கவனிக்க வேண்டிய விடயம் ஒன்று உண்டு அது தான் முக்கியமானது.

அதாவது, தனது நாட்டில் நடைமுறையிலுள்ள ஓர் அதிகாரப் பகிர்வு முறைமையையே இலங்கை இன முரண்பாட்டுக்கான தீர்வாக இந்தியா அறிமுகம் செய்தது. ஆனால், அன்றைய சூழலில் அனைத்துத் தரப்புகளும் விடயத்தில் ஒன்றுபட்டு ஒற்றுமையாக அரசியலை கையாள்வதில் தவறிழைத்தமையின் காரணமாக மாகாண சபை முறைமையை சரியான திசை நோக்கி முன்னகர்த்துவதில் இந்தியாவின் பங்கு கேள்விக்கு உள்ளாக்கப்பட்டது. பிரேமதாஸ புலிகள் உடன்பாடு இந்தியாவின் தலையீட்டை தவிடுபொடியாக்கியது.

இன்று இந்தியாவுக்கு பொறுப்பு உண்டு என்று தமிழர் தரப்புகள் கூற முற்படும் போது நினைவுக்குக் கொண்டு வர வேண்டிய முக்கிய விடயங்கள் இவை தான். ஒற்றையாட்சியை நீக்குவதற்கான நிலைப்பாட்டில் சரி அல்லது தவறு என்பது இங்கு விடயமல்ல. மாறாக, அதனை இந்தியாவால் எக்காலத்திலும் ஆதரிக்க முடியாது என்பது தான் அடிப்படையானது.

ஒருவேளை, இலங்கையின் ஆட்சியாளர்கள் கட்சிகளை கடந்து அவ்வாறானதொரு முறைமையை நடைமுறைப்படுத்த இணங்கினால் அப்போது, இந்தியாவும் அதற்கு நட்புக்கரம் நீட்டமுடியும். ஆனால், கொழும்பை அச்சுறுத்தி ஒற்றையாட்சியை நீக்கும் விடயம் ஒருபோதும் நடைபெறப் போவதில்லை. அவ்வாறானதோர் அரசியல் தேவைப்பாடு இன்றைய சூழலில் இல்லை.

# தேசபந்து தென்னக்கோனுக்கு பிணை



இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை பிணையில் விடுதலை செய்ய மாத்தறை நீதவான் நீதிமன்றம் நேற்று 10 ஏப்ரல் வியாழக் கிழமை உத்தரவிட்டுள்ளது.

தேசபந்து தென்னக்கோன் 10 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13 ஆம் திகதி மாத்தறை வெலிகம பெலேன பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றின் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் முன்னாள் பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னக்கோனை கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு மாத்தறை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

ஆனால் தேசபந்து தென்னக்கோன் நீதிமன்ற உத்திரவை அவமதித்து சுமார் 20 நாட்களாக தலைமறைவாக இருந்த நிலையில், கடந்த மார்ச் மாதம் 19 ஆம் திகதி காலை மாத்தறை நீதவான் நீதிமன்றத்தில் சரணடைந்த பின்னர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றைய தினம் மீண்டும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. கடந்த மார்ச் 19ஆம் திகதி மாத்தறை நீதிமன்றத்தில் சரணடைந்தார். அவர் சரணடைந்ததைத் தொடர்ந்து, மாத்தறை நீதவான் அவரை 10 ஏப்ரல் 2025 நேற்றுவரை வரை விளக்கமறியலில் வைக்கு மாறு உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கை பேசி சாட்சி

(22ம் பக்கத் தொடர்ச்சி) சிலர் தாக்கினார்கள். கண்டி வீதியில் பலர் பார்த்திருக்க அவர் தாக்கப்பட்டார். தாக்கியவர்களை யாரும் தடுக்கவில்லை. தமிழ்ச்செல்வன் எழுதிய செய்தி யாருடைய பிள்ளைகளை போதைப் பொருட்களில் இருந்து பாதுகாக்கும் நோக்கத்தை கொண்டதோ அதே மக்கள் அவர் தாக்கப்படுகையில் கையாலாகாத பார்வையாளர்களாக பார்த்துக் கொண்டிருந்தார்கள். இந்தச் சுயநலம் அல்லது கோழைத் தனம் அல்லது பார்வையாளர் மனோ நிலை என்பது பாரதூரமானது வீரமும் தியாகமும் நிறைந்த மகத்தான ஒரு போராட்டத்தை நடத்திய மக்கள் பார்வையாளர்களாக மாறிக் கொண்டிருக்கிறார்களா?

மேலும் தாக்கப்பட்ட பெண் வெடிப் பொருட்களை அகற்றும் நிறுவனத்தில் வேலை செய்கிறார். அதாவது யுத்த களத்தோடு தொடர்புடைய ஒரு துறை தன்னைத் தற்காத்துக் கொள்வதற்காக அவர் ஏன் திருப்பித் தாக்க முயற்சிக்கவில்லை? மன்றாடாமல் திருப்பித் தாக்குவதில் தான் முன் உதாரணம் உண்டு.

இது எல்லாப் பெண்களுக்கும் பொருந்தும். எறும்பு கூட தன்னை மிதிப்பவர்களைக் கடிக்கின்றது. இதுபோன்ற சந்தர்ப்பங்களில் பெண்கள் ஏதோ ஒரு விதத்தில் தம்மை தற்காத்துக் கொள்ளும் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். சிறுமை கண்டு பொங்காது பார்வையாளர்களாக நிற்பவர்களின் தொகை அதிகரித்து வரும் ஒரு சமூகத்தில் பெண்கள் தங்களைத் தாங்களே தற்காத்துக் கொள்ள வேண்டும். தாக்குபவனைக் கும்பிடக்கூடாது. தாக்க வேண்டும்.

மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு
வாங்க..
விற்க..
HOMELIFE
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6



OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*


# போராட்டம் செய்தோம் என்பதற்காக காலமெல்லாம் பகையுடன் இருக்க வேண்டுமா? ரில்வின் சில்வா கேள்வி



நாட்டை பாதுகாப்பதற்காக நாம் பல்வேறு சந்தர்ப்பங்களில் போராட்டங்களை மேற் கொண்டிருந்தோம். ஆனால் தற்போது இந்தியா மாத்திரம் அல்ல முழு உலகமும் மாறி விட்டது. போராட்டம் செய்தோம் என்பதற்காக இன்னமும் பகையுடன் இருக்க வேண்டுமா? நாம் நாட்டை காட்டிக் கொடுக்கவில்லை. நாம் இந்தியாவுடன் நாட்டை காட்டி கொடுக்கும் உடன்படிக்கை செய்துள்ளதாக கூறுபவர்கள் அதனை வெளிப்படுத்த வேண்டுமென மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா வலியுறுத்தினார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது.

நாம் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தங்களால் இலங்கை மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளும் பயனடைகின்றன. இலங்கையின் வரலாற்றில் அதிக சர்வதேச நாடுகளின் ஆதரவைப் பெற்ற அரசாங்கமாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இடம் பிடித்துள்ளது. எதிர்க்கட்சிகள் எமக்கு சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்பு கிடைக்காது எனவும் எவரும் உதவி செய்ய மாட்டார்கள் எனவும் இதற்கு முன்னர் கூறின. தற்போது அனைவரும் உதவி செய்ய தயாராக உள்ளமையால் நாட்டை கட்டிகொடுப்பதாக கூறுகின்றன. இவை பைத்தியமான எதிர்கட்சிகளாகும்.

நாம் இந்தியாவுடன் காட்டி கொடுக்கும் உடன்படிக்கை எதுவும் இருந்தால் அதனை காண்பியுங்கள். நாம் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கைகள் வெளிப்படையானவை. காட்டிக் கொடுத்ததாக கூறுகிறார்கள். அது உண்மையாகும்.

இதற்கு நாடு காட்டிக் கொடுக்கப்பட்ட போது அதற்காக நாம் போராடியவர்கள். முன்னாள் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் ராஜபக்ஸ குடுப்த்துடன் இணைந்து மில்கோ நிறுவனத்தை இந்திய நிறுவனத்திற்கு விற்பனை செய்ய முயற்சித்தது. எனினும் எமது அரசாங்கம் இந்திய நிறுவனத்துடன் பேச்சுவார்தை நடத்தி அந்த தடுத்து நிறுத்தியது.

1987ஆம் ஆண்டு இலங்கையின் வான் பரப்பை இந்தியா கைப்பற்றியது. இந்திய இராணுவத்தினர் இலங்கைக்கு வருகை தந்து எம்மை அச்சுறுத்தினர். இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை மேற் கொண்டனர். அது நாட்டை கட்டிக் கொடுக்கும் வேலை என்பதால் நாம் அதற்கு போராடினோம்.

தற்போது இந்தியா மாறியுள்ளது. உலக நாடுகளும் மாறியுள்ளது. 1990 ஆம் ஆண்டுகளில் போராட்டங்களில் ஈடுபட்டோம் என்பதற்காக பகையுடன் இருக்க வேண்டுமா? அந்த சந்தர்ப்பத்தில் பிரச்சினை ஏற்பட்டது. போராட்டம் நடத்தினோம்.

ஆனால் அந்த பிரச்சினை இப்போது இல்லை. அன்று எமக்கு சர்வ தேசத்துடன் தொடர்பில்லை. சர்வதேசத்துடன் நாம் பொருந்தவில்லை என்றனர். தற்போது நாட்டை காட்டிக் கொடுப்பதாக கூறுகின்றனர். அவர்கள் வங்குரோத்து நிலைமையின் உச்சத்துக்கு சென்றுள்ளனர் என்றார்.

# தமிழரசுக்கட்சியை தோற்கடிக்க வேண்டுமாம்! ஜீ.ஜீ. பொன்னம்பலத்தால் முடியாததை பேரன் செய்வாரா?

தமிழ் கட்சிகளை ஒன்றிணைக்கும் முயற்சியானது எம்.ஏ.சுமந்திரன் பொதுச்செயலாளராக வந்த பின்புதான் நிராகரிக்கப்பட்டதாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றஞ் சுமத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் 19 தமிழ் உறுப்பினர்கள் உள்ள போதும் 10 உறுப்பினர்களைக் கொண்ட அறுதிப் பெரும்பாண்மை ஒருவருக்கும் இல்லை. தமிழ் கட்சிகளை ஒன்றிணைக்கும் முயற்சிகளை முன்னெடுத்த போதும் அது சாத்தியப்படவில்லை. தமிழரசு பதில் தலைவர் சீ.வி.கே. சிவஞானத்துடன் பேசிய போது தமிழ் கட்சிகளை ஒன்றிணைக்கும் முயற்சிக்கு குழு அமைப்பதாக சொல்லியிருந்தார். அதன் பின்பு எம்.ஏ.சுமந்திரன் பொதுச் செயலாளராக வந்த பின்பு குழு அமைக்கும் விடயம் தேவையில்லை என்று சொல்லப்பட்டுள்ளது.

தற்போது தமிழரசுக்கட்சி ஆட்சி செய்பவர்கள் தமிழ்த் தேசிய நீக்க அரசியலை கொண்டு செல்பவர்கள். சுதந்திர தினம் கொண்டாட எத்தனிப்பவர்களும் சிங்கள கட்சிகளுக்கு இங்கு வைத்து ஆதரவு வழங்குபவர்களும் தான் உள்ளனர். இந்தியப் பிரதமரை சந்திக்கும் போது நாங்கள் சமஸ்டியை வலியுறுத்தினோம், மற்றவர்கள் ஒற்றையாட்சி 13ஐ தான் வலியுறுத்தினார்கள்.

மக்களிடம் வாக்கு கேட்க வரும் போது சமஸ்டியை சொல்கிறார்கள், மக்கள் வழங்கும் ஆணையை தவறான வழியில் பயன்படுத்துகின்றனர். இந்தத் தேர்தலில் தமிழரசுக் கட்சி வடக்கு கிழக்கில் தோற்கடிக்கப்பட வேண்டும் எனவும் கஜேந்திரகுமார் தெரிவித்துள்ளார். தந்தையின் படுகொலைக்கு நீதி கோரிப் போராட முடியாத இவர் தமிழினத்துக்குப் போராடுவாரா?


Secure. Grow. Protect.
Your Future, Your Terms - Protect What Matters
KRISHNA SABARATNAM
Insurance & Investments
I'm here to help! Call now
416-846-2685
Krishna.gsabaratnam@gmail.com
10 Thornmount Drive, Scarborough, ON, M1B 3J4.

# பிள்ளையானைத் துரத்தும் கொலைப்பழி!



பிள்ளையான் என அழைக்கப்படுப வரும் முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் 07 ஏப்ரல் 2025 திங்களன்று குற்ற விசாரணைப் பிரிவினால் மட்டக்களப்பில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

பிள்ளையானின் கட்சியான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அலுவலகத்திற்கு சிவில் உடைகளில், அடையாளப்படுத்தப்படாத வாகனத்தில் வந்த சிலர் அவரைக் கைது செய்திருக்கிறார்கள். கைதுக்கான காரணம் உடனயாகக் கூறப்படவில்லையாயினும் 2019 உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்புகளில் பிள்ளையான் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் காரணமாக அவர் கைது செய்யப்பட்டிருக்கலாம் எனக் கூறப்படுகிறது. கொழும்பு, மட்டக்களப்பு, நீர்கொழும்பு ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட தொடர் குண்டு வெடிப்புகளின் போது சுமார் 250 பேர் கொல்லப்பட்டும் நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தும் இருந்தனர்.

கிழக்கு மாகாணத் தமிழர்களுக்கான தனித்துவமான ஒரு அரசியல் கட்சியை கடந்த மாதம் கருணா அம்மான் என அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளீதரனும் பிள்ளையானும் இணைந்து உருவாக்கியிருந்தார்கள். நீண்ட காலத்திற்குப் பிறகு இவ்விரு முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களும் ஒன்றிணைந்து செயற்படத் தீர்மானித்திருந்தார்கள் எனக் கூறப்படுகிறது.

இதே வேளை கிழக்கு மாகாணப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் சிவசுப்ரமணியம் ரவீந்திரநாத் அவர்கள் காணாமலாக்கப்பட்ட விடயம் தொடர்பாக அதன் பின்னால் பிள்ளையான் இருந்தார் என்ற குற்றசாட்டும் முன்வைக்கப்பட்டிருந்தது. 2006ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற விஞ்ஞானிகள் மாநாடு ஒன்றில் கலந்து கொள்ளச் சென்றிருந்த பேராசிரியர் ரவீந்திரநாத் டிசம்பர் 15 அன்று காணாமற் போயிருந்தார். இவர் காணாமலாக்கப்பட்டமையின் பின்னால் பிள்ளையான் அணி இருந்ததாகவும் அப்போது சந்தேகிக்கப்பட்டது.

ஆனால் 10 ஏப்ரல் 2025 வியாழக்கிழமை பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால பிள்ளையானது கைது தொடர்பாக பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

முன்னாள் கிழக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் படுகொலை தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களுடன் பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தனை தொடர்புபடுத்தும் தகவல்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகம் சமீபத்தில், முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் குற்றப் புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்டார். ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்களுடன் அவரைத் தொடர்புபடுத்தும் கணிசமான தகவல்கள் கிடைத்துள்ளன. அது குறித்த விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

எந்தவொரு குற்றத்தையும் மறைக்க நாங்கள் ஒரு போதும் அனுமதிக்க மாட்டோம். எந்தவொரு குற்றவாளியும் சுதந்திரமாக நடமாட அனுமதிக்க மாட்டோமெனவும் இலங்கை பொது பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப்பராசசிங்கம் கொலை தொடர்பில் ஐந்து வருடங்கள் சிறையில் அடைக்கப்பட்டிருந்த பிள்ளையான் பின்னராக கோத்தபாய ஜனாதிபதியாக பொறுப்பேற்ற பின்னர் விடுவிக்கப்பட்டிருந்தார்.

இலங்கை புலனாய்வு கட்டமைப்புக்களுடன் இணைந்து பணியாற்றிய நிலையில் முன்னெடுக்கப்பட்ட கொலைகள் கைதுகள் மீதான குற்றச்சாட்டுக்கள் பிள்ளையான் கும்பல் மீது தற்போது முன் வைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க மார்ச் 25ஆம் திகதி இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரனை பிணையில் செல்ல கொழும்பு நீதவான் நீதிமன்றம் 08 ஏப்ரல் செவ்வாய் கிழமை உத்தரவிட்டுள்ளது.

அதன்படி ஒரு மில்லியன் ரூபாய் பெறுமதியான 5 சரீரப் பிணைகள் மற்றும் 50 ஆயிரம் ரூபா ரொக்க பிணையில் வியாழேந்திரன் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன், 08 ஏப்ரல் 2025 செவ்வாய்கிழமை கொழும்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது..

பொலன்னறுவை பகுதியைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவரிடம் மணல் அகழ்வுக்கான அனுமதிப் பத்திரத்தை வழங்குவதற்காக ரூ.1.5 மில்லியன் இலஞ்சம் பெற்றார் என்ற குற்றச்சாட்டின் பேரில் அவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

# பிட்டுக்கு மண் சுமந்த பெருமானார்

(16ம் பக்கத் தொடர்ச்சி) எடுக்க கூடிய வாய்ப்புக்கள் இலங்கைக்கு இல்லை. இதனால் தான் அமெரிக்கா வரி விதித்துள்ள 185 நாடுகளில் மிகச்சில நாடுகளுக்கே இந்த வெட்டியோடும் வாய்ப்பு இருக்கிறது. உதாரணமாக அமெரிக்க கார் உற்பத்திக்கு (FORD,GENERALMOTRS) கம்பனிகளுக்கான உதிரிப் பாகங்கள் 60 வீதம் ஐரோப்பாவில் இருந்து இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. இவற்றிற்கான விலைகளை இந்த நாடுகள் அதிகரிக்க முடியும். மேலும் அமெரிக்க டிஜிட்டல் நிறுவனங்களான மேட்டா, அமேசான், பேஸ்புக், இன்டர்கிராம் போன்றவற்றிற்கான கட்டணங்களை அதிகரிக்கவும் ஐரோப்பிய ஒன்றியம் ஆலோசிக்கின்றது.

அதேபோன்று ஜப்பான், சுவிட்சர்லாந்து, ஐரோப்பிய உற்பத்திகள் உலகச்சந்தையில் தரமானவை. அமெரிக்காவில் தரமான பொருட்களை விலை அதிகரிப்புக்கு மத்தியிலும் ஒரு குறிப்பிட்ட வருமான பிரிவினர் வாங்குவதற்கு இன்னும் வாய்ப்பு இருக்கிறது.

ஆனால் இலங்கை போன்ற நாடுகளின் உற்பத்தியை தரத்திற்காக அன்றி அமெரிக்க மத்தியதர, அதிலும் குறைவான வருமான மட்டத்தினர் மலிவான விலை காரணமாகவே கொள்வனவு செய்தனர். வரிவிதிப்பு இப்பொருட்களின் விலையை உயர்த்துவதால் இலங்கை ஏற்றுமதிகளுக்கான கேள்வி அமெரிக்க சந்தையில் அதிகரிக்கும் போது சந்தை வாய்ப்பு குறைவடையும்.

இலங்கை உள்ளிட்ட கிழக்காசிய நாடுகளின் ஆடை உற்பத்தி தொழில் குறித்து ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் கடும் விமர்சனம் இருக்கிறது. வங்காளதேசத்தில் பல ஆடைத்தொழிற்சாலைகளில் ஏற்பட்ட தீ விபத்தும் தொழிலாளர்கள் கொல்லப்பட்டதும் இந்த விமர்சனங்களுக்கு முக்கிய காரணம்.

இலங்கை உள்ளிட்ட இந்த நாடுகளில் நிலவும் குறைந்த சம்பளம், தொழிலாளர்களுக்கான சமூக காப்புறுதி வசதிகளின் குறைபாடுகள், பாதுகாப்பு குறைபாடுகள், தொழிற்சாலைகளில் பெண்கள் மீது இடம் பெறும் பாலியல் வன்முறைகள், மற்றும் சுகாதார நலன்சார்ந்த உள்கட்டமைப்பு ஏற்பாடுகளில் நிலவும் குறைபாடுகள், அதிக வேலை நேரம், இரவு நேர வேலை, மனித உரிமை மீறல்கள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு விமானங்கள் குறித்து அமெரிக்கா அதிகம் அலட்டிக் கொள்வதில்லை. அதனுடைய இலக்கு மலிவான விலையில் ஆடைகளை இறக்குமதி செய்வதாகவே இருந்தது.

இலங்கை, இந்தியா, வங்காளதேசம், வியட்நாம் சீனா போன்ற இந்த நாடுகளின் ஃகம்பெனிகளின் தவித்தமுயல் அடிக்கும் டொலர் ஏற்றுமதி பொருளாதாரத்திற்கு அமெரிக்க வரிக் கொள்கை மேலும் பாதிப்பை ஏற்படுத்துவதாக அமையப்போகிறது.

மறு பக்கத்தில் மேற்குறிப்பிட்ட தொழிலாளர்களின் சமூக, பொருளாதார, அரசியல் நலன்களை புறக்கணித்து செயற்படும் இந்த ஆடையுற்பத்தி ஏற்றுமதி நாடுகளுக்கு எதிராக குறிப்பிட்ட குறைபாடுகளில் சீர்திருத்தங்களை ஐரோப்பிய ஒன்றியம் வேண்டும் போது அதிக முக்கியத்துவம் கொடுக்கும் நிலையில் ஐரோப்பாவில் இலங்கை மாற்றுச்சந்தை வாய்ப்புக்களை தேடுவதும் அவ்வளவு இலகுவாக இருக்கப் போவதில்லை.

ஏற்கனவே விதிக்கப்பட்ட பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குதல், கருத்துச் சுதந்திரம், ஊடக சுதந்திரம் ,



ஜனநாயக அரசியல் செயற்பாடுகள், மனித உரிமைகளை பாதுகாத்தல் குறித்த நிபந்தனைகளை இலங்கை இன்னும் பூர்த்தி செய்யாத நிலையில் ஐரோப்பாவிலும் தவித்த முயல் அடிப்பது இலங்கை முதலாளிகளுக்கு அவ்வளவு இலகுவாக இருக்கப் போவதில்லை. இந்த விடயங்களில் தாங்களும் பங்காளிகளாக இருக்கும் சீனா, இந்தியாவைத் தவிர வேறு நாடுகளில் தொடர்ந்தும் அரசியல் பொருளாதார வியாபாரத்தை செய்வதாயின் ஜனாதிபதி அநுரகுமார அரசாங்கம் உண்மையான அடிப்படை கட்டமைப்பு மாற்றம் ஒன்றிற்காக பயணிக்க வேண்டும்.

கூட்டாளிகள் பொதுவாக ஒரே பண்பை கொண்டவர்களாகவே இருப்பார்கள். அப்போதுதான் ஒத்தோட முடியும். அந்த கூட்டாளி அரசியலையே அநுரகுமார அரசாங்கமும் செய்கிறது. இது மாற்றத்திற்கான வழியல்ல. அமெரிக்க வரிவிதிப்பில் மட்டும் அல்ல ஒட்டு மொத்த இலங்கை பொருளாதாரத்தையும் மீட்டெடுக்கவும் இது அவசியம். இல்லையேல் நாடு மற்றொரு பொருளாதார மந்தத்தை சந்திப்பதது தவிர்க்க முடியாதது மட்டும் அன்றி 2028 இல் கடன்களை மீளச்செலுத்தல் என்பதும் வெறும் கனவாகவே இருக்கும்.